உ கணபதிதுணை.

நாகமகூளப்பநாயகன்

விறலிவிடுதூது.

இஃது

திருத்தணிகைக்-கந்தப்பையர்குமாரர்

சரவணப்பெருமாளையரால்

பரிசோதிப்பித்துப்

பொய்கைப்பாக்கம்-பழனியப்பமுதலியார்குமாரர்

சுப்பராயமுதலியாரால்

பூம்பாவைஅண்ணுசாமிமுதலியார்குமாரர்

சிங்காரமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இஃது.

புத்தகம்.

துர்முகி௵, மார்கழி௴.

இதன்-விலை-ரூ.௧௨.

பிரசித்தபத்திரிகை.

அச்சிற்பதிப்பித்தானதுகள்.

பெயர்.	விலை.	ரூபா.
கதாசிந்தாமணி.	. . . .	உஐ.
இலக்கமுதலானவைஅடங்கிய	. . . . . .	
அளவைப்பெயர்த்தொகுதி.	. . . .	ஐ.
தாயுமானசுவாமிகள்பாடல்	. . . . .	❀
பட்டுக்கட்டடம்	. . . .	ச.
நீலச்சீலைக்கட்டடம்	. . . .	௩ஐ.
வெறுங்கட்டடம்	. . . .	௩ உ.
விறலிவிடுதூது.	. . . .	கஉ.

இப்போதுபதிப்பிக்கப்பட்டுக்கொண்டுவருகிறதுகள்.

எண்சுவடி-பெருகுழி-சிறுகுழி-வருஷப்பிறப்பு-வகுப்பு-இரத்தினசபாபதிமாலை-தண்டலையார்சதகம்-கோவிந்தசதகம்-குமரேசசதகம். - - - - - - - - - ❀

இனிமேல்பதிப்பிக்கப்படுவதுகள்.

திருப்புகழ்-கலிங்கத்துப்பரணி-இருசமயவிளக்கச்சண்டமாருதம்-சதுர்வேததாற்பரியசங்கிரகம்-வியாசபுசஸ்தம்பம்-பரமததிக்காரம்-கணக்கதிகாரம்-சுந்தரர்வேடுபறி-சிறுத்தொண்டருலா-நீதிசாரம்-கூளப்பநாயகன்காதல்-பணவிடுதூது-வருணகுலாதித்தன்மடல்-தமிழறியும்பெருமாள்சரித்திரம்-யாகமுறை-சிற்றண்டிக்கோவை-முதுமொழிக்காஞ்சி-சிறுபஞ்சமூலம்-ஸ்காந்தக்கீர்த்தனை-ஆசாரக்கோவை-வாசகக்கூட்டம்-வழக்கப்பழமொழி-வழக்கத்திரிகடுகம்-இருசொல்லலங்காரம்-நாத்திருத்தம்-தமிழ்நாவலர்சரித்திரம்-வண்ணத்திரட்டு-பதத்திரட்டு-சித்திரகவிகள்-முக்கூடற்பள்ளு-வேளூர்குறவஞ்சி-நொண்டி-ஆஸ்தானமாலை-பொருள்செயல்வகை.

உ

கணபதி துணை.

நன்றாக.

விறலிவிடு தூது.

காப்பு.

பொங்குபெருஞ்செல்வப்புகழ்பெரியநாகமோ - த்
துங்கன்விறலிவிடு தூதுக்கு-மங்களஞ்சே - - - ர்
பஞ்சவருக்ரங்களைமுற்பைம்பொனெடுங்குன்றிடுகைக்
கஞ்சமலர்க்குஞ்சரமேகாப் - - - - - பு.

****

(விறலிபுகழ்ச்சி.)

கார்பூத்தமேனிக்கருணைத்திருநெடுமால் - - *
பார்பூத்தவுந்திபரந்தாமன்-நீர்பூத்த - - - க.

வேலைகுமுறக்கடைந்தவேலைதருந்தெள்ளமுதும் - *
ஆலைதருவெண்சாறடுபாகும்-பாலும் - - உ.

கனியுஞ்சருக்கரையுங்கற்கண்டுநாவுக் - - *
கினியபசுந்தேனுமிணக்கித்-தனியாக - - - ௩.

மத்தித்தெடுத்தமதுரத்துக்கெண்மடங்கு - - *
தித்திப்புக்கேட்போர்செவிக்கேறத்-தத்தைகள்போய்க் *

குன்றேறத்தோற்றுக்குயின்மாமரந்தோறுஞ் - -*
சென்றேறவாணிற்சிறுகுரரி-நின்றேங்கி - - ௫.

விண்ணேறவந்தரத்தில்விஞ்சையரோறக்கனிந்த - - *
பண்ணேறப்பாடுமிசைப்பாடினியே-உண்மையருள் - ௬.

போதிக்குமெய்த்தவத்தோர்புத்திக்கிடையூறு - - *
நாதிக்குமேழிசைக்குநாயகமே-கீதக் - - - ௭.

கொழுந்தோடிமன்னவராங்குன்றிற்படரக் - - *
கொழுந்தோடிபாடிவருங்கொம்பே-எழுந்தசிமிழ் ௮.

கண்டாராகத்திலொருகாமப்பேயேற்றுவிக்குங் - - *
கண்டாராகத்தில்வல்லகாரிகையே-கெண்டைநெடுங் - ௯.

கண்சுருட்டியோகர்கருத்தறிவெல்லாஞ்சுருட்டிப் - - *
பண்சுருட்டிபாடுமுயிர்ப்பாவையே-ஒண்கிரணக் - ௰.

காந்தாரக்கொங்கையின்மேற்கைத்தம்புருவணைத்துக் - *
காந்தாரமேற்றுங்கனிமொழியே-சேந்தவரி - ௰௧.

யம்பகாம்போதிலணங்குமிணங்குமிசைக் - - *
கும்பகாம்போதிரசகும்பமே-தும்புருதன் - - ௰௨.

பாகரஞ்சிதத்தனியாழ்பட்டுறையிலிட்டயர - - *
மேகரஞ்சிபாடும்விறலியே-லோகத்திற் - - ௰௩.

காகவறிவின்றிக்கலந்தனில்வைத்துண்பாணாத் - - *
தேகியென்பார்க்கீயாதீயாளா-ராகமெனுங் - ௰௪.

கள்ளக்கயிறுகொண்டுகட்டியுருட்டிவிழித் - - - *
துள்ளுமுனைச்சாட்டைகொண்டுசுண்டியே - தெள்ளமிர்தத்.

தீங்குதலைச்சொல்லாற்றிகிலேற்றித்தேட்டையெல்லாம் - *
வாங்கிவிடவல்லமதங்கியே-நீங்கிவெறுப் - - ௰௬.

பானமடவார்க்குமாடவர்க்குநல்லசமா - - *
தானநிதானவவதானியே-கானவித்தைப் - - ௰௭.

பாட்டையெல்லாங்கற்றபனிமொழியேநான்பட்ட - *
பாட்டையெல்லாஞ்சற்றேபகரக்கேள்-வேட்டமனை - ௰௮.

(அவதானிதன்சம்பவந்தொகுத்துரைத்தல்.)

யாட்டியுடன்போட்டிவிளைத்தாட்டிவிட்டபம்பரம்போல் *
நாட்டையெல்லாஞ்சுற்றியதுநானொருநாள் - தோட்டிதழிப்

பூவுடையாள்றென்மதுரைப்புக்கதுவுமங்கேயோர் - *
தேவடியாள்கைக்குள்ளாய்ச்சிக்கியதும்-பாவிகிழ உ௰.

வோரியென்கைப்பொன்னையுறுஞ்சியதும்போழ்வாய்த்துச்
சாரிசதிசெய்ததுவும்வைததுவும்-போராடி - உக.

மேனைகெடவம்பலத்தில்விட்டதுவும்வாய்ப்பகட்டால் - *
ஊனைவிடப்பற்றியெனையோட்டியதும்-பேராசை - உஉ.

அங்கேயிழுக்கமனதாகிவழிகொண்டுபுகல் - *
எங்கேயென்றென்பதூர்க்கேகியதும்-சங்கேந்தும் உ௩.

திம்மராயப்பெருமாள்செஞ்சரணசேகரனை - - - *
மும்மதமால்யானைமூர்த்தன்னியனை-ரம்ப - உ௪.

கருணைகரனைக்கனயோகவானைப் - - -- *
பொருநாவலர்பூஷணனை-இருநிதியைச் - உ௫.

சந்த்ரமுகமந்த்ரதளதந்த்ரகொலுவிந்திரனைச் - - *
சிந்தமகுமாரசெயதரனை-முந்து - - உ௬.

நிலைக்கோட்டையானைநெடுங்கலியைத்தூரத் - *
துலைக்கோட்டுந்த்யாகதுரையை-மலைக்கோட்டில் - உ௭.

ஆனைவைத்துப்பார்க்குமறுபத்துநாலுமன்னர் - - *
பானையத்தைவென்றபடையானை-வாளரசர் - உ௮.

வெஞ்சமருக்கஞ்சாவிருதுவென்றிவாகனைநம் - - *
பெஞ்சநகர்காக்கும்பெருமானை-வஞ்சகர்க்கோர் உ௯.

தண்டப்பெரும்புலியைச்சாமித்துரோகரைக்காய் - *
வெண்டயத்தாற்சூரியனைவீரியனை-மண்டலிகர் - ௩௰.

மாகனகங்கப்பயிடும்வாயிலானைப்பெரிய - - *
நாகமகூளேந்த்ரநராதிபனை-யோகனையான் - ௩க.

பாடியதுமையன்முகம்பார்த்ததுவுமென்கவிவிட் - *
டோடியதும்பாக்கியம்வந்துற்றதுவும்-நாடியிங்கே ௩உ.

நான்வந்ததுவுநடுமதியிலேயிரண்டு - - *
மான்வந்தனையவிழிமாதேகேள்-தானபரன் - ௩௩.

(பாட்டுத்தலைவன் புகழ்ச்சி.)

திக்கெல்லாங் கொண்டாடுஞ் செங்கோல் விஜயரங்க - *
சொக்கநாதேந்த்ர துரைராஜன் - சக்ரபதி - - ௩௪.

சேனாபதி பாண்டியகுல தெக்ஷிண சிங்காசனா - *
ராதிபதி மெச்சு நரபாலன் - கோதில் - ௩௫.

உருப்பான் மைவெண்பிறைமே லூர்வதன்கோல - *
மருப்பாகும் பன்றிமலையான் - திரைக்கரத்தில் - ௩௬.

ஆரமணியாரமணியாரமணிவாரிநடு - - *
வாரியிடுங் குடவமாநதியான் - தார்வேந்தர் - ௩௭.

வீதிக்குவீதி விவாகமணி முரசம் - - *
நாதிக்கும் பாண்டிவள நாட்டினான் - ஆதித்தன் - ௩௮.

தேரூராருண செயகோபுர நிலைக்குள் - - *
உளரூரொனு மொன்பதூரினான் - கூரியபோர் - ௩௯.

வேலைவைக்குஞ் செங்கருங்கண் மின்னாரிதய வண்டு - - *
மாலைவைக்கும் பூந்தளவ மாலையான் - கோல - ௪௰.

முகமிலங்கு பணியணிந்து முதுகணைந்த கலனைகொண்டு - *
தகைதவிர்ந்து நடைபிறந்து சமரடர்ந்து - பகைவர்தங்கள் ௪௧.

தலையினின்று திமிதிதிந்தி தகுதிதந்தி யெனநடஞ்செய் - *
துலவிவந்து கனகதண்டை யொலிமிகுந்து - கலகலென்று ௪௨.

கொஞ்சிடச் சதங்கையிட்ட கொண்டலொத்திடுந் திறத்த - *
வெஞ்சினப்ப்ரசண்டவுக்ர வெண்பரியான் - விஞ்சுகரம் - ௪௩.

ஒன்றுபடைத்துவரு மோங்கலுக் கொப்பாயிரண்டு - *
வென்றிப்பிறைசுமந்த மேகமெனத் - தூன்று - - ௪௪.

மதங்களெனு மூன்றுமாரி சிந்தப்பாகர் - - *
ஓதுங்க நால்வாயாலுதறி - அதிர்ந்துபொரும் - ௪௫.

அஞ்சாருதிரத்தை யாருக்கியோ ரோமு - - *
மஞ்சார்புனலைமடுத் துறுஞ்சிக் - குஞ்சரங்க - ௪௬.

எண்பதோ டெட்டுமிணையில்லையென் றகற்றி - - *
ஒன்பதூர் வீதியுலாவியே - வம்புலாப்போர் - - ௪௭.

பைம்பொன்முடியிடறிப்பத்துரகமுந்தேய்ந்த - *
கும்பாணகம்பீரகுஞ்சரத்தான் - அம்புவியில் - ௪௮.

காந்துகலியைவெட்டுங்கண்டகோடாரியைப்போல் - *
ஏந்துவெள்ளைப்பக்கறையிடாலினான் - சாய்ந்தோடிக் ௪௯.

குன்றிற்கருதார்குடும்பங்குடியேற - - *
முன்றிற்குமுறுமணிமுழம்முரசான் - நின்றவடி - ௫௰.

தூக்கினார்சென்னிதுடிக்கத்துணித்துவிடும் - - *
ஆக்கினைசக்கரம்போலாணையான் - பாக்கியவான் - ௫௧.

கற்பகமாம்பட்டணாயங்கார்கருணையேமணக்கும் - - *
பொற்கமலம்போன்றமனப்பூரணவான் - பற்றலார் - ௫௨.

தண்டார்மகுடந்தடவுஞ்சயவீர - - - *
கண்டாமணிமுழங்குங்காலினான் - மண்டுசமர் - ௫௩.

யுத்தகளத்தொன்றாருயிர்மெய்த்தகுற்றுடையாள் - - *
வைத்தணைத்துக்கட்டுமருங்கினான் - கைத்தலத்தில் - ௫௪.

ஐந்தருவுமைந்துவிரலாகித்தருவவெனச் - - *
செந்தமிழ்க்குநல்குமலர்ச்செங்கையான் - பைந்தொடியார்.

பொன்முலையாங்கோட்டிற்புதுக்கலவைச்சேறாட்டி - *
மன்மதநூலெழுதுமார்பினான் - நன்மைதரும் - ௫௬.

வெற்றிச்சிறுபெண்விளையாடுஞ்சிற்றிலெனச் - *
சுற்றியகேயூரமணிதோளினான் - கற்றவராங் - ௫௭.

கோக்குலத்தைக்காத்தருளுங்கோபாலர்வேயிசைபோல் - *
வாக்குமதுரம்பொழியும்வாயினான் - நாக்குளிரச் - ௫௮.

சொல்விரசங்கடிவர்ப்பென்றுநள்ளியின்பக் - - *
கல்விரசம்பருகுங்காதினான் - வல்ல - - ௫௯.

மருவலரைவெட்டுகின்றவாள்போன்முகத்திற் - - *
கருணையுலவுமலர்க்கண்ணான் - இரவினுடல் - - ௬௰.

சாய்த்தமதிமுகத்துத்தையலார்முத்தமிட - *
வாய்த்தமுழுமதிபோன்மாமுகத்தான் - காத்தருளும் - ௬௧.

னம்பிரானுகோபிலேசாடியெந்நாளும் - *[ம்.
செம்பொன்முடிதாங்குமலர்ச்சென்னியான்- உம்பர்தொழு

நின்மலனார்வெண்ணீற்றுநெற்றிக்கண்காணாத - - *
மன்மதன்காணென்னும்வடிவினான்-தன்னுடைய - ௬௩.

வல்லக்கவார்குலத்தில்வாள்வேந்தர்கண்குளிரப் - *
பல்லக்குமேலுலவும்பாக்கியவான்-வில்லேற்றிக் - ௬௪.

கைகொண்டுபொற்படியிற்கால்கொண்டுபஞ்சகதி - - *
மெய்கொண்டனையபரிமேற்கொண்டு-செய்யரண - ௬௫.

துங்கதளகர்த்தர்துரைமக்கள்வாள்பிடித்துச் - - *
சிங்கமெனச்சுற்றித்திரண்டுவர-மங்குலெனக் - ௬௬.

கூனன்முதுகொட்டகமேற்கொட்டுகின்றடம்மாரம் - - *
யானையின்மேற்பேரியதிர்ந்துவரச்-சேனையொடு - ௬௭.

தாக்குமறுமண்டலிகர்தங்களுக்குச்சென்றுசொல்லுங் - *
கூக்குரல்போல்வீரசின்னங்கொம்பூத-நோக்கும் - ௬௮.

பரிதிபகைக்குப்பகையெழுந்ததென்ன - - *
விருதுகருடாலவட்டம்வீசத்-தரளக்கால் - - ௬௯.

வெள்ளைக்கொடியாடைமேகங்கிழித்துவரப் - - *
பிள்ளைப்பிறைபோற்ப்ரகாசிக்க-வெள்ளைவட்டச் - ௭௰.

சித்ரக்குடைகள்செயமாதுக்கிட்டநிழன் - - *
முத்துமணிப்பந்தரொளமொய்த்துவரக்-கைத்தலத்திற் ௭௧.

கத்திபிடித்துவெள்ளிகட்டினதுபாக்கிகொண்டு - *
பத்துலக்ஷங்காலாட்படைநடக்கத்-தத்துபரி - ௭௨.

கொக்குநரையான்கைக்குமரியெனராவுத்தர் - - *
கைக்குளடங்காதுகான்மீற-நெய்க்கவளம் - ௭௩.

கூட்டியிரையூட்டியிருகொம்புகத்திபூட்டிமதம் - - *
மூட்டிவிட்டமால்யானைமுன்னடக்கக்-கூட்டமிட்டு - ௭௪.

வாரிட்டணிவகுத்துவாதிட்டவேற்றரசர் - - *
போரிட்டவெங்களத்திற்போயெதிர்த்து-நேரார்மேற் ௭௫.

சுட்டபிரங்கித்தொனியும்புகையுஞ்சூ - - - *
விட்டமுகிலுமிடியுமெனப்-பட்டயங்கள். - - ௭௬.

வீசுவதும்வெட்டுவதுமின்னலெனவீரர்சிலை - *
பூசலம்புமாரிமழைபோற்பொழியத்-தேசப் - ௭௭.

பரதளங்கள்பட்டுருளப்பாய்ந்தபெருஞ்செந்நீர்ப் - *
பிரளயப்ரவாகம்பெருகச்-சிரதலத்தில் - - ௭௮.

ஆளையிருப்புலக்கையானையடிக்கவிழு - - - *
மூளைநுரைத்திரளாய்மொய்த்தோட-வாளாற் - ௭௯.

படுந்திரமோறிவரும்பல்லக்குப்பேய்க்கு - - *
விடுந்தோணிபோலுமிதப்பக்-கிடந்துசிலர் - - ௮௰.

வேர்த்துப்பரிசைகொண்டுமேன்மூடிச்சென்னியெட்டிப் *
பார்த்துக்கமடமெனப்பதுங்கப்-போர்த்தலையில் - ௮௧.

மந்திரவாள்வேந்தர்மகுடத்துதிர்ந்தரத்நம் - *
இந்திரகோபங்களெனச்சிதறச்-செந்தறுகண் - ௮௨.

விந்தைபிடிதீரவெற்றிப்பயிரோற்றி - - *
வந்துகொலுவிருக்கும்வாள்வீரன்-முந்துபெரும் - ௮௩.

பாதலத்தில்வேரோடிப்பாரிற்படர்ந்துவட - - *
பூதரத்திலேறும்புகழினான்-நீதிபரன் - - ௮௪.

சித்தமகூளேந்த்ரதுரைசிங்காசனாதிபதி - *
தந்தசௌபாக்கியசம்பன்னன்-செந்துவர்வாய்க் - ௮௫.

காமவடிவேல்விழியார்கைவடிவெல்லாமெழுதும் - *
நாமவடிவேற்பெரியநாகேந்த்ரன்-சேமநிதி - ௮௬.

பூராதியன்வாழ்வையொக்குநவகோடி - - *
நாராயணன்பெரியநாகேந்த்ரன்-சேரலராம் - ௮௭.

ஆட்டுக்கூட்டங்களின்மேலாராண்புலிபோற்பாயுநடு - *
நாட்டுக்கூழிற்பெரியநாகேந்த்ரன்-பூட்டுசிலை - ௮௮.

அம்பொன்றுலீவேனரசனக்குவிட்டுணு - - *
நம்பென்றமால்பெரியநாகேந்த்ரன்-ஸ்தம்பமென - ௮௯.

லோகஞ்சுமப்பதிருலோசாயிரமௌலி - - *
நாகம்பொரும்பெரியநாகேந்த்ரன்-பாகெனுஞ்சொற் ௯௰.

பாவுக்கேறிக்கனகப்பல்லக்கேறிப்புலவோர் - - *
நாவுக்கேறும்பெரியநாகேந்த்ரன்-வாவிநிகழ் - ௯௰௧.

பெஞ்சநகர்வாழப்பெருஞ்சீர்வளர்ந்தோங்கக் - - *
கஞ்சமலர்மாதுகளிகூர-வஞ்சகரும் - - ௯௰௨.

பொய்யும்பறந்தோடப்புண்ணியமுந்தண்ணளியும் - *
மெய்யுங்கலந்துவிளையாடப்-பெய்யுமழை - ௯௰௩.

வானம்வழங்கமனைவாழ்க்கையோங்கவன்ன - - *
தானம்வழங்கத்தவமோங்க-நான்மறைக்கும் - ௯௰௪.

நன்னிதியாமேகவண்ணநாதர்திம்மராயர்திருச் - *
சன்னிதியிற்பூசைதழைத்தோங்க-இந்நிலத்தில் - ௯௰௫.

எங்கோனபிஷேகமேந்துமனுவிஜ்ஞானச் - - *
செங்கோலரசுசெலுத்துநாள்-சங்கீதந்தும் - ௯௰௬.

(அவதானிதன்பிறப்பாதிசொல்லல்.)

காரங்கமேனிக்கடவுளிருக்குமந்தச் - - *
சீரங்கத்தேபிறந்தேன்செல்வத்தில்-ஈரைந்தோ - - ௯௰௭.

டாறுவயதினுக்குளாரியமும்வேதமுநா - *
வேறித்தமிழ்நூலிலக்கணத்தின்-மீறினேன் - - ௯௰௮.

வாலசரஸ்வதியென்வாக்கிற்ப்ரசன்னமதா - *
நாலுகவித்திறமுநானறிந்து-மேலும் - ௯௰௯.

மயிலுமெனச்சொன்னவுரைமாறுமற்சொல்லக் - - *
கயிலாடசிங்கிகழற்ற-அயலொருவன் - - - ௱.

சொன்னவிருச்சொல்லவெதிர்சூதாடப்பின்முதுகு - *
தன்னிலெழுந்தகல்லுத்தானெண்ணப்-பன்னுசது - - ௱௧.

ரங்கவிளையாட்டுக்கடிபார்க்கச்சொற்புலவோர் - *
தங்கள்கவியையவதானிக்கச்-சங்கத்தில் - - ௱௨.

எட்டெட்டெழுத்தாணிக்கேற்றகவிசொல்லவும்யான் - *
அஷ்டாவதானியென்பதாயினேன்-மட்டார் - ௱௩.

திருப்பதியிலேவாசுதேவன்மகளைக் ✻
கருப்புருவவின்பக்கனியை-விருப்பமுள்ள ௱௪.

பூங்காவனத்தைப்பொருத்தமுடன்வேட்டுப் ✻
பாங்கானவாழ்விற்பயிலுநாள்-ஆங்குசெவ்வந் ௱௫.

தீசர்திருச்சன்னிதியிலேந்திழையார்தம்மிலொரு ✻
தாசிமேல்வைத்தேன்றயவுநான்-நேசமாய் ௱௬.

இந்தரங்கத்தேதிரிந்தேனின்பரசவல்லியிடத் ✻
தந்தரங்கத்தேதிரிந்தேனாசையால்-அந்தத் ௱௭.

திரிச்சிராப்பள்ளிக்குச்செல்லாதிருக்கத் ✻
தரிச்சிராதென்மனதுதானும்-ஒருத்தன் ௱௮.

அறியாச்சிறுவனுடன்யாரொருநாளந்த ✻
வெறியார்குழற்பரத்தைவீட்டிற்-பிரியமுடன் ௱௯.

சென்றிருந்துவந்தேன்றிடுதிடெனவோடிப்போய்க் ✻
குன்றிருந்தகொங்கைக்குலமனையாட்-குன்கணவர் ௱௰.

ஓடத்திலேறிருத்தரியம்போக்கடித்தார் ✻
நாடிச்சிரகிரியைநண்ணினார்-கூடவந்த ௱௰௧.

என்னைச்சவுக்கையில்வைத்தின்பரசவல்லியெனும் ✻
பொன்னனையாள்வீட்டுக்குட்போய்ப்புகுந்தார் - அந்நேரம்.

மிஞ்சிமிஞ்சிப்பேசினாள்வேசிமகளதற்குள் ✻
அஞ்சியஞ்சிப்பேசினாரையங்கார்-வஞ்சியந்த ௱௰௩.

வீட்டுக்கதவடைத்தாண்மெள்ளமெள்ளக்கொஞ்சினாள் ✻
காட்டுப்புறவோசைகாட்டினாள்-வீட்டைவிட்டு ௱௰௪.

வந்தார்நம்மையனென்னைவாவென்றார்காவிரியிற் ✻
சந்திபண்ணியிக்கரையிற்றண்டினார்-இந்தவூர்க் ௱௰௫.

கென்மார்க்கஞ்சொல்லாதேயென்றுசொன்னானந்தத் ✻
துன்மார்க்கப்பையலெல்லாஞ்சொல்லிவிட்டான்-மன்மமம் .

தொடுத்தாள்கடுகடுத்தாள்தூங்குமஞ்சம்விட்டுப் ✻
படுத்தாள்பகைஞராய்ப்போற்பார்த்தாள்-அடுத்தடுத்து ௱௰௭.

வேண்டினேன்குட்டுவெளியாக்குவேனென்னைத் - *
தீண்டாதேயென்றாள்சிராப்பளியில் - ஆண்டவள்பாற் ௱௰௮.

செல்லாயென்றாள்பரத்தைதேடுவாளேயென்றாள் *
சொல்லாதவார்த்தைசிலசொல்லினாள் - இல்லாள் ௱௰௯.

வலிகிடந்தமாற்றமுரைக்குமேலவ்வில் - - *
புலிகிடந்ததூறாய்விடுமென் - றுலகறியச் - ௱௨௰.

(யாத்திரை செய்தமை கூறல்.)

செப்பினாளவ்வையென்றுதேர்ந்தேனிராத்திரியே *
தப்பினேன்கைக்கடங்கத்தக்கதுகொண் - டப்பால் ௱௨௧.

அதிசயங்களானதலம்யாவுமறிவோம் - - *
நதிகள்பலமூழ்குவோநாமென் - றிதயமாய். - ௱௨௨.

வெள்ளைநாவல்பழுக்குமிக்கபதியுந்நரிகள் - - *
துள்ளுபரியானதொருதொன்னகரும் - தென்னுதமிழ் ௱௨௩.

செப்பக்கதவுதிறந்தவூருங்கருங்கல் - - *
கப்பலெனவந்தகடற்பதியும் - இப்புறத்திற் - ௱௨௪.

பாங்குடையவாண்டுபனிரண்டுக்கோர்கான்மா - - *
மாங்கநீர்பொங்கும்வரைப்பதியும் - பூங்குடத்தில் ௱௨௫.

அங்கத்தைமங்கைவடிவாக்கினவூருந்தமிழ்க்குத் - *
தங்கத்தையீந்தநனியூரும் - செங்கருங்கட் - ௱௨௬.

காகமெரியக்கனல்வீசுமாமலையும் - - *
யோகங்கழுகுசெயுமொண்கிரியும் - வேகமிக்க ௱௨௭.

கான்றாண்டுவெம்முதலைகௌவியுண்டபிள்ளைதனை *
மூன்றாண்டுசென்றழைத்தமூதூரும் - மான்றானேர் ௱௨௮.

தாசிக்கெழுந்ததனத்தைலிங்கமென்றொருவன் - *
பூசித்துப்பேறுபெற்றபொன்னகரும் - நேசித்து ௱௨௯.

மைந்தனுடலரிந்துமாதவத்தோர்க்கிட்டுவினைப் - *
பந்தமரிந்தோன்பழம்பதியும் - சொந்தமாம் - ௱௩௰.

ஆட்டைப்புலிகாக்குமம்பலமுநாஞ்சி - - *
நாட்டிநடிக்குந்திக்குநன்னகரும் - காட்டெயினன் - ௱௩௧.

கண்ணைப்பறிகொடுத்தகற்பதியும்வண்ணானறன் - *
பெண்ணைப்பறிகொடுத்தபேரூரும்-மண்ணுலகில் ௱௩௨.

ஈண்டாதாரொச்சில்செழுமறையோர்க்கீந்தாலும் - *
வேண்டாமெனுந்தேற்குமெய்ப்பதியும்-மாண்டவர்தங் ௱௩௩.

காதிலுபதேசங்கடவுள்சொல்லும்பதியும் - *
சீதரன்மாயாபுரியுஞ்சேவித்து-நாதிக்குஞ் - ௱௩௪.

சங்கமுகந்தங்கெறிதரங்கமுககங்கையுடன் - *
சங்கமுகதீர்த்தமெல்லாந்தானாடி-அங்கிருந்து ௱௩௫.

கங்குல்பகலாக்கடலோட்டக்கப்பலிலோர் - *
திங்களில்வந்தெய்தினேன்சேதுவினில்-மங்காத் - ௱௩௬.

தனுக்கோடிதர்ப்பசயனம்பணிந்து - - *
மனுக்கோடிகுஞ்செந்தூர்வந்தேன்-கனத்த - ௱௩௭.

திருப்பதிகளொன்பதுநான்சேவித்தங்குள்ள - *
அருட்பொலியுந்தீர்த்தமெல்லாமாடித்-தருப்பொலியும்

குற்றாலநெல்வேலிகோதைவில்லிபுத்தூர்வந் - *
துற்றேன்திருச்சுழிகையூர்பணிந்தேன்-நெற்றிவிழித் ௱௩௯.

தம்பிரான்பூவணத்தைச்சந்தித்தேன்சங்கேந்தும் - *
எம்பிரான்சோலைமலைக்கெய்தினேன்-பைம்பொற் ௱௪௰.

றலையருவியாடியெங்கள்சங்கத்தழகர் - - *
மலரடியைப்போற்றிமகிழ்ந்தேன்-ஸ்தலமகிமை ௱௪௧.

யானறிலுலஞ்சுநாளங்கிருந்தெனங்கேயோர் - *
ஞானியையன்றன்னிடனேநட்பானேன்-மேன்மையீர். ௱௪௨.

சொக்கர்மதுரைதொழுதுவரவேநீரும் - - *
ஒக்கவரவேண்டுமெனவுரைத்தேன்-தக்கோன் ௱௪௩.

நகைத்தானிவ்வண்ணநடந்தகதையுண்டு - - *
தொகுத்தமறைவேதியரேசொல்வேன்-மிகுத்தபுகழ் ௱௪௪.

(ஞானியார்தல்வழியுரைத்தமைகூறல்.)

மேவிச்சிறந்தகொந்திவேந்தனொற்றியூர்த்திருநாள் *
சேவிக்கப்போகமனஞ்சிந்தித்தான்-தாவில் - ௱௪௫.

அமைச்சனங்கேசென்றக்காலங்கொருத்திவல்லி *
உமைச்சதிசெய்வாளென்றுரைத்தான்-அமைச்சனுலா ௩௪௬.

மிஞ்சிநடந்தானர்தவேசைகைக்குட்சிக்கினான் - *
வஞ்சிமருந்தால்மதிகெட்டான்-குஞ்சாமும் - ௩௪௭.

நாடுநகருநவநிதியும்வாங்கினாள் - - - *
ஆடுங்குழையுமாவோட்டினாள்-ஆடுகின்ற - ௩௪௮.

கூத்தாடிகள்வன்போற்கோலம்பூண்டாடுவதைப் - *
பார்த்திரிலையோசொற்பாவலீர்-வாய்த்த - ௩௪௯.

கறைக்கண்டர்தென்மதுரைகாணவென்றாலாங்கோர் *
தொறட்டுண்டதனையான்சொல்வேன்-பொறுத்தகசம் ௩௫௰.

(மதனாபிஷேகத்தின்பிறப்புணர்த்தல்.)

அஷ்டதிக்குஞ்சூழ்கோயிலாலவாய்ச்சொக்கருக்குத் *
தட்டதெடுக்குந்தழியிலாள்-வட்டமுலை - - ௩௫௧.

மாணிக்கமாலையெனுமங்கையொருபெண்ணடிதன் *
காணிக்குத்தேடக்கருத்தாகி-ஊணைத் - - ௩௫௨.

தறைமெழுகியுண்டுதவங்கிடந்துமெந்தக் - *
குறைகளெனக்குறிகள்கேட்டும்-பெறுதவற்குச் ௩௫௩.

செப்புத்தகடெழுதிச்செம்பொற்கழுத்திலிட்டும் - *
கெர்ப்பத்துக்காமருந்துகிண்டியுண்டும்-தப்பாத் ௩௫௪.

திருவனந்தல்சேவித்துஞ்செண்பகப்பூவாசம் - *
மருவனந்தநந்தனங்கள்வைத்தும்-திரையுடலை ௩௫௫.

வேற்றொருவர்கண்டுவிரும்பாதநாள்தாழை - - *
காற்றடிக்கப்பூத்தகதைபோலச்-சாற்றும் - ௩௫௬.

அரிவைதெரிவைகடந்தப்பானடக்கும் - - *
பருவத்தேகர்ப்பம்படைத்தாள்-நரைவீழ் - ௩௫௭.

தலையிற்கறுப்பிறங்கிச்சாய்ந்ததெனத்தொங்கு - *
முலையிற்கறுப்புமுதிரக்-கலக. - - ௩௫௮.

விழிவேல்குழியமுகம்வெண்மதியமாக - - *
ஒழின்மேனிபச்சைநிறம்பெய்தத்-தழைதருஞ்சூல் ௩௫௯.

கொண்டவயிறுபெருஞ்சைக்கூளேந்த்ரன்சத்திரத்தில் *
உண்டுவருவோர்வயிற்றையொப்பாகத்-தண்டேன் ௱௬௰.

அளிக்குடிக்குந்தாராளரும்புளிபங்காய்க்கும் - *
புளிக்குடிக்குமுன்னமிச்சைபூண்டாள்-களிக்கவயிற் ௱௬௧.

றூடுசரித்தபிள்ளைக்குள்ளாவார்வாயிலள்ளிப் - *
போடுவதைத்தன்வாயிற்போட்டறிந்தாள் கூடிவந்த ௱௬௨.

மாதமொருபத்தாய்வயிறுளைந்துபெற்றாளவ் - *
வேதனையான்மூர்ச்சைபாய்மெய்சோர்ந்தாள்-தாதிமார் .

பெண்ணென்றார்காதிற்பிழிந்தமருந்ததுபோல் - *
துண்ணென்றெழுந்துதுயர்தீர்ந்தாள்-வண்ணமணிப் ௱௬௪.

பொற்றொடிக்கைமங்கைநல்லாள்பொன்காய்க்கும்பூடொன்
பெற்றதுபோலி[illegible]றெடுத்தபெண்கொடியை-மற்றுளரார் [௫.

(மதனாபிஷேகத்தின்வளர்ப்புணர்த்தல்.)

ஏந்தியிருகையாலெடுத்துநறுநீராட்டிப் - *
பூந்துகிலான்மெய்துவட்டிப்போற்றினார்-வாய்ந்தசங்கித்.

சேனையுடன்வஞ்சத்திருட்டுமருட்டுமவ - - *
தானப்புரட்டுந்தனம்பறிக்க-மானிடர்க்குச் ௱௬௭.

செய்யுங்கபடுமகாதித்திரிப்புமாகாசப் - *
பொய்யுங்கலந்துபுகட்டினாள்-செய்யபசுந் - ௱௬௮.

தேனேகனியேதெவிட்டாததெள்ளமுதே - *
மானேயென்கண்ணேமரகதமே-நானீன்ற - ௱௬௯.

பொன்னேயெனவெடுத்துப்பொற்குறங்கின்மீதேற்றி *
மின்னேரிடையாள்விழிபரப்பி-நன்னுதலிற் - ௱௭௰.

பாப்பிட்டசொல்லிவெள்ளிப்பட்டமெனவெண்ணீற்றுக் *
காப்பிட்டாள்சிற்றடிக்குங்காப்பிட்டாள்-சேப்பிட்ட ௱௭௧.

செய்க்குவளைக்கண்மயிலேசெம்பொனுள்ளபேர்களையுன் *
கைக்குள்வளையென்றுவளைகைக்கிட்டாள்-சிக்காப்புள் ௱௭௨.

ஒட்டுக்குளாவதுபோனுள்ளபணக்காரர்களுன் - - *
பொட்டுக்குளாகவென்றுபொட்டிட்டாள்-பொட்டனவே.

வேந்தர்புதையல்வெளியாக்குமஞ்சனம்போல் - ※
வாய்ந்தவடிவேல்விழிக்குமையிட்டாள்-காந்திமுக ௱௭௪.
வன்னக்கமலமதில்வண்டிருந்தாற்போலமகள் - ※
கன்னத்தின்மீதேதார்கறுப்பிட்டாள்-சொன்னதனம் ௱௭௫.
வீட்டேறப்பண்டைமுதன்மேலேறத்தன்குடும்பம் - ※
வீட்டேறப்பொற்றொட்டிலேற்றினாள்-தேடியுன்பால் ௱௭௬.
வாராதவராரார்வந்துமடிச்சீலைகொட்டித் - ※
தாராதவராரார்தந்தணையிற்-சேராதார் - ௱௭௭.
ஆராரார்சேர்ந்துனக்குள்ளாசைகொண்டுசுற்றுதார் ※
ஆராராவென்றுதாலாட்டினாள்-தாராட்டிச் - ௱௭௮.
சீராட்டிமுன்னிருத்திச்செங்கைகொட்டிக்காட்டிமஞ்ச ※
ணீராட்டியந்திநிலாக்காட்டிப்-பாரிற் - ௱௭௯.
கிளைப்பெரியநாகேந்திரன்கீர்த்தியைச்சொல்வாணர் ※
வளர்ப்பதுபோற்பெண்ணைவளர்த்தாள்-முலைக்குமகள்.
தள்ளிநடந்தாளதுகண்டுதாய்க்கிழவி - - ※
துள்ளிநடந்தாள்துயர்தீர்ந்தாள்-பிள்ளையொரு ௱௮௧.
சிற்றாடைகட்டித்தெருவில்வரக்கண்டுதிட்டி - ※
சுற்றுமலேதிட்டிசுற்றினாள்-மற்றுமந்த - ௱௮௨.
வம்பிமகன்மழலைவார்த்தையைக்கேட்டாடவனைத் ※
தம்பியென்றுசொல்லத்தலைப்பட்டாள்-அம்புயச்செங் ௱௮௩
கைக்குவளையிட்டுக்கடகம்பவளமிட்டுத் - ※.
தக்கையிட்டகாதிற்றளப்பமிட்டுப்-பக்கத்திற் - ௱௮௪
கொண்டையிட்டுக்குப்பியிட்டுக்கொப்பிட்டுக்காலில்வெள்ளி
தண்டையிட்டுச்செம்பொற்சதங்கையிட்டு-வெண்டரள [தீ
மாலையிட்டிரட்டையரைஞாண்மருங்கிலிட்டு - - ※
வேலையிட்டசுட்டிநெற்றிமேலிட்டுக்-கோலச்சிந் - ௱௮௬.
தூக்கிட்டுச்செம்பவளத்தாழ்வடங்களிட்டுவச்ர - - - ※
மூக்குத்திரண்டிட்டுமுத்தமிட்டு-நாக்குளிர - - ௱௮௭.

வாரிட்டகொங்கைமதனாபிஷேகமெனப் - *
பேரிட்டிலகறியப்பேச்சிட்டாள்-ஆரியமும் - ௱௮௮.

கன்னடமுங்கட்டிக்கரும்புபோலேவடுகும் - - *
பன்னுதமிழும்படிப்பித்தாள்-மன்மதவேள் - ௱௮௯.

(பருவக்குறிதாய்கண்டமையுணர்த்தல்.)

சிற்பாதவல்குற்சிறியாள்வயதேழில் - - - *
நற்பாதமெல்லாநடித்தறிந்தாள்-உற்பனமாம் - ௱௯௰.

மொனவித்தையுள்ளமுனிவோரையுமயக்குங் - - *
கானவித்தையெல்லாங்கரைகண்டாள்-மேனிக்குள் ௱௯௧.

வாடைமஞ்சள்பூசுவதுமல்லிகைப்பூச்சூடுவதும் - *
ஆடவரைவீட்டுக்கழைப்பதுவும்-ஓடிப் - ௱௯௨.

பிலுக்குவதுங்கிட்டநின்றுபேசையிலேமுத்துக் - - *
குலுக்குவதுங்கொஞ்சுவதுங்கொங்கைத்-தலைக்கறுப்பை

முந்திகொண்டுவெட்கம்போன்மூடுவதுங்காமுகரை - *
அந்திமட்டும்வைத்துவிளையாடுவதும்-வந்தவரை - ௱௯௪.

வாள்வீச்சுப்போலவரிவிழியால்வெட்டுவதும் - *
போள்வாய்ச்சிகண்டுடம்புபூரித்தாள்-வேளனையார் ௱௯௫.

கைக்குள்வசமாகிவந்துகாலைப்பிடிக்குமந்தச் - *
சொக்குப்பொடிமருந்துஞ்சொல்லிவிட்டாள்- சொக்கர்புது

மண்டபத்தின்முன்னேவசந்தன்றிருநாளில் - *
எண்டிசையோர்மெச்சவரங்கேற்றினாள் - ஒண்டொடிக்குச்.

சின்னச்சிமிழாகிச்செப்பாகித்தேங்காயாய் - - *
வன்னத்தனங்கள்வளர்ந்தேறக்-கன்னிகையாள் - ௱௯௮.

தன்னையறிந்தாள்தழியிலாள்தன்பழைய - - *
பொன்னையொருபக்கம்புதைத்துவைத்தாள்-மன்னவர்கள்.

கற்றுவதுங்காமுகரைத்தோயமகட்குமனம் - - *
பற்றுவதுங்கண்டறிந்தாள்பப்பாத்தி-பெற்றெடுத்த ௨௱.

(தாய்க்கிழவிபோதிப்புணர்த்தல்.)

மானேயென்கண்ணேமயிலேகுயிலேசெந் - *
தேனேமதனாபிஷேகமே-மீனின்ற - - ௨௱௧.

குஞ்சுக்குநீச்சுங்கொடும்பாம்பின்குட்டிக்கு - *
நஞ்சுங்கொடுத்தவரார்நங்கையே-செஞ்சிலைக்கைச் உ௱உ.

சீவகனுக்கன்றொருபெண்சிங்கமொருகனீனும் - *
பாவனைபோலேயெழுதிப்பக்கத்தில்-ஓவியமாக் - உ௱௩.

காரானையொன்றெழுதிக்காட்டவரிக்கன்றுதுள்ளிப் *
போராடிப்பாய்த்தகதைபொய்யலவே-யாருக்கும் உ௱௪.

சாதித்தொழில்தனக்குத்தானேவருமொருவர் - *
போதிக்கவேண்டுமோபொற்கொடியே மாதர்க்குள் உ௱௫

உன்புத்தியென்புத்திக்கோவிரட்டியாகினுமென் *
றன்புத்தியுமவளேசற்றேகேள்-ஒன்பதூர்க் - உ௱௬.

கொஞ்சுபரிநகுலன்கூளேந்திரன்பன்றிமலை - *
மஞ்சட்குளியையமறவாதே-மஞ்சண் - - உ௱௭

மணங்காட்டியாட்பிடிக்கும்வாடைப்பொடியின் - *
குணங்காட்டிக்கண்காட்டிக்கோலம்-இணங்கியபொன் உ௱௮

னுத்தரியஞ்சற்றேயொருபாற்றெரியவிட்டுக் - *
குத்துமுலைச்செம்பொற்குடங்காட்டி-முத்துநகை உ௱௯.

காட்டிவளைகாட்டிநடைகாட்டியிடைகாட்டிநயம் - *
காட்டியிளையோர்க்காசைகாட்டுவாய்-கோட்டுமுலை உ௱௰.

சாய்ந்தான்முகந்திரைந்தாற்சலிக்காசொன்றுமுனக் *
கேந்தாதரிப்பவராரேந்திழையே-ஆய்ந்தபஞ்சுப் - உ௱௰க.

பெட்டிபோலேநரைத்தபெண்கள்கையிலென்னவருஞ் *
சட்டிசுறண்டவருந்தையலே-கட்டழகின் - - உ௱௰உ.

வாலிபத்தேதேட்டின்மனம்வைத்தாற்பொற்றகட்டால் *
வேலையிட்டுக்கட்டலாம்வீடெல்லாம்-காலைப் - உ௱௰௩.

பிடிப்பார்முழுப்பிரட்டுப்பேசியிலைகிறி - - *
மடிப்பார்தருவார்வருவார்-படுக்கைவிதங் - உ௱௰௪.

காட்டுவேனென்பார்க்கள்ளரவண்டர்தங்களையுன் - *
வீட்டிலழையாதேமெல்லியலே-வீட்டில்வந்து உ௱௰௫.

பாயப்பகட்டுவிதம்பண்ணுவார்க்குப்புழுதி - ※
வாயிற்புகட்டுமயல்பூட்டு-நீயொருத்தர்க் - உ௱௰௬.

காசைவைத்தாற்பின்னொருத்தரண்டாருடனொத்த ※
வேசையர்க்கெல்லாநகைப்பாமெல்லியலே-காசுபணம்

குப்பல்குப்பலாகக்குவித்தாலும்வாலிபத்தில் - ※
வைப்பிருக்கச்சற்றுமனம்வையாதே-செப்பு உ௱௰௮.

முலையைக்கசக்கிவிட்டு முட்டாள்சரசத் - - ※
தலையைவிடும்போயழையாதே-சிலைநுதலாய் உ௱௰௯.

முன்பின்னறியார்முடிப்பாகப்பொன்னெழுநூற் - ※
றொன்பதுதந்தாலுமனமொவ்வாதே-இன்பமுடன் உ௨௰.

கூடுவார்நித்திரைநீகொள்வதுபார்த்துப்பொடியைப் ※
போடுவார்சேலைவர்க்கம்பொன்னுடைமை-சோடிணையாச்

சேரச்சுருட்டியப்பாற்செல்வார்விடிந்ததற்பின் - - ※
யாரைப்போய்க்கேட்பதுநாமாரணங்கே-ஊரிலே உ௨௨.

தந்தைகீழ்ப்பிள்ளையுண்டுதாய்கீழ்ச்சிறுவருண்டு - ※
வந்தால்மறையவரச்சொல்லித்-தந்தமதின் - உ௱௨௩.

வாயில்வடுச்செய்யாமல்மார்பினகம்வையாமல் - ※
தோயுமிதங்காட்டிச்சுகங்காட்டு-சேயிழையே - உ௨௪.

அந்திபடப்பணயமஸ்தமொக்கமாகவந்தால் - ※
சொந்தமுள்ளபேர்தமக்குச்சொல்லியே-முந்திவந்து உ௨௫.

சாரமுண்பாய்நீயவன்பின்சக்கையைத்தின்பாயெனமுன் ※
னேரமழைத்தனுப்புநேசமாய்த்-தூரத் - உ௨௬.

திருந்துவந்துகூடிவிடிந்தேகுவார்தம்மேல் - - ※
பரிந்தாசைபோற்பிறகேபற்றிப்-பிரிந்திருக்க உ௨௭.

மாட்டேனேயுன்றலேமாப்பிள்ளைமாராசையெல்லாம் ※
போட்டேனேயென்னபொடிபோட்டாய்நீ-வீட்டில் உ௨௮.

தனித்திருக்கப்போமோடாசாமியுன்றம்பல் - - ※
இனித்திருக்குந்தாடாவிருடா-சனிக்கிழமைக் உ௨௯.

கப்பாலோ நீவருவா யாணையிடு முக்காலும் - - *
தப்பாதே யென்றனுப்பு தார்குழலே - மைப்பொருங்கண்

மாதுநல்லாய் வேறுமருந் தேனவர் திரும்பும் - *
போதுவருமே புதையலெல்லாம் - கரதல்கொண்ட ௨௩௧.

மன்னவனைத் தூங்குசப்ரமஞ்சத்தின் மீதிருத்திப் - *
பொன்னவனைக் கேளாமற் புல்விரல் - மின்னரசே ௨௩௨.

ஊர்க்குஞ் சலிகைநம் மோடொத்தவர்க்கு மெண்ணிக்கை *
யார்க்குங் கனத்தகுடி யாகலாம் - பார்க்குள்ளே - ௨௩௩.

புல்லுவிற்றுங் கீரைவிற்றும் பொன்கொடுப்பார் காணயக்குக்
கொல்லிமலைப் பாவாய் குலதெய்வம் - பல்விழுந்த - ௨௩௪.

கூனற்கிழவன் கொடுக்கும் பணயமதில் - - *
நானக்குழலே நலாயுண்டோ - மானமின்றி - ௨௩௫.

அப்பன் வருவானதன் பின்மகன் வருவான் - *
தப்புமுறையென்று நீதள்ளாதே - இப்புவியில் ௨௩௬.

மாலைக்குளியர் வெகுமா மாயக்கள்ளர் தங்கள் - - *
சோலிக்குப் போகாதே தோகையே - வேலையின்றித் ௨௩௭.

தத்தையனையாளைத் தழுவிப் பணம்பறிக்கும் - - *
எத்தனைநா மெத்துவது மெத்துகாண் - சித்ர - ௨௩௮.

கதையைக்கேளென் பருவக்காலத்தி லிந்தப் - *
பதியிலொருகுச்சிலியப் பையல் - மதுரை - ௨௩௯.

மழுங்குணியென் னும்பேரான் மாதர்தனத்தைத் - *
தழுவிப்பறிப்பான் தனத்தை - முழுதும் - ௨௪௰.

கிழக்குத்தெருவினெட்டைக் கிஷ்ணஜிவீட்டைக் - *
குளப்பறியாகப் பறித்தான் கூடி - மூளைத்தெழுந்த ௨௪௧.

செப்புமுலைமாதே சீவிலிபுத்தூர் தாசிக் - - *
குப்பியுடைமையெல்லாங் கொள்ளைகொண்டான் - - *
[வைப்பென்று ௨௪௨.

தந்திரமாகப் பசப்பித் தஞ்சாவூர்ச் செல்லிதனைக் - *
கந்தைபொருத்தவிட்டான் கைம்மருந்தால் - இந்தவகை ௨௪௩.

ஆங்கவனுக்கேகொடுத்தாரல்லாதவன்பொருளை - *
வாங்கினபேரில்லையென்மேல்மாலாகி - ஈங்குவந்தான் ௨௪௪.

குன்றுமுலையாய்கொழுத்தகுட்டியகப்பட்ட - *
தென்றுபூரித்தேதனிருதோளும் - அன்றுமுதல் - ௨௪௫.

மாட்டுப்பரங்கிக்காய்மாதேதினங்கறியாக் - - *
கூட்டிக்கொண்டாங்கவனைக்கூடியே - வீட்டில்வந்த ௨௪௬.

நாலாநாளல்லினடுச்சாமஞ்சோதித்துக் - - *
காலிற்றொடுசெருப்புக்கட்டியே - மேலெல்லாம் ௨௪௭.

வெண்ணீறுபூசிவிடைந்தாவீரசடைபின்னிவிட்டுப் - *
பெண்ணீவியென்றுகண்டோர்பின்வாங்க - எண்ணமின்றிச்

சுள்ளுஞ்சோறுங்கைச்சுரிகையுமாய்ப்போய்க்கழுவிற் *
கள்ளன்வலதுகுதிக்காணரம்பில் - மெள்ள - ௨௪௯.

விளக்கெரித்துநெய்வடித்துவீட்டில்வந்துநன்றாய் *
உழக்கரிசிபெய்துறவைத்துப் - புளிப்பில்லாச் ௨௫௰.

சாற்றிலிட்டும்பாற்குழம்பிற்சர்க்கரையிற்கூட்டியிட்டுஞ் *
சோற்றிலிட்டுநெஞ்சைச்சுழலவிட்டு - வேற்றவனு ௨௫௧.

பாயத்தாற்றேடும்பணம்புற்றிலேகரடி - - *
வாயைவைத்தாற்போலுறுஞ்சிவாங்கிவிட்டேன்பேய்போலக்

கையிலுள்ளதெல்லாம்போய்க்கப்பரையொன்றேந்தியதோ
தெய்வமேயென்றுதிரிகிறான் - நெய்யரிசி - ௨௫௩.

நாளுக்குநாள்செலவாய்நங்காயுனக்குவரும் - *
ஆளுக்கிருக்குதின்னமாழாக்கு - வாள்விழியாய் - ௨௫௪.

வேடிக்கையாய்மாசிவீதியிலேநாமுலவ - - *
ஆடிக்குமுன்னேயென்னுசையெனத் - தேடுதிதி - ௨௫௫.

யுள்ளவரைமெள்ளவுபாயமாய்க்கூட்டிப்போய்க் - *
கொள்ளும்பவளமுத்துக்கோவைவடம் - உள்ள ௨௫௬.

கடையுஞ்சவளிக்கடையும்பார்த்தையா - - *
கிடையாச்சரக்குக்கிடைத்த - தடைவாயென் - ௨௫௭.

னுத்தண்டமாலையக்கா தோலையைப்பொன்மோதிரத்தை *
வைத்தென்றாலுங்கடுகவாங்கித்தா பத்தஞ்சு - ௨௫௮.

வட்டிசுமந்தாலும்பால்வாங்கலாமென்பாயச் - *
சொட்டனுக்குநெஞ்சுசுறுக்கென்னும்-பொட்டெனத்தன் .

கைத்தனத்தையீவான்கடையிலேயுள்ளசரக் - *
கத்தனையும்வாங்கியறையிலிடு-வைத்து - - ௨௬௰.

பருந்திடுப்பிற்கட்டிவருவார்சிலர்மேல் - - *
இருந்துடப்பைவாட்டியெடுப்பார்-பரிந்தணைந்து ௨௬௧.

ஐ.கச்சரசம்போற்றடவிக்கண்டுபிடித்துடனே - *
பிச்சுப்பிடுங்கியெறிபெண்ணணங்கே-லச்சையற ௨௬௨.

மன்மதநூலைப்படித்தவம்பனையென்னையுன்றன் *
சென்மசென்மமுள்ளமட்டுஞ்சேராதே-சன்யாச ௨௬௩.

ருத்திராக்ஷப்பூனைரூபர்சிலருண்டுவந்தால் - - *
மெத்தையிலேவைத்துவிளக்கணைத்துச்-சத்தமின்றிக் ௨௬௪.

கூடையிலேயாள்வந்துகூப்பிட்டாலையர்தமைக் - *
கூடையிலேமூடிவைத்துக்கூப்பிடுநீ-பாடிக் - ௨௬௫.

கடுக்கனலைக்குங்கவிப்புலவர்வந்தால் - - - *
துடுக்காயொருவார்த்தைசொல்வார்-கொடுக்கவென்றால் .

ஐந்துபொன்னும்வாங்காரரைப்பணமேபோதுமென்பார் *
சிந்தையவர்மகிழச்செய்திட்டால்-நந்தம் - ௨௬௭.

இசைபாடுவார்கூடாதென்றாற்கொடிய - - - *
வசைபாடுவார்கெடுமேவாழ்வு-அசையவுளம் - ௨௬௮.

அஞ்சுகின்றகச்சேரியாட்சேவகர்வந்தால் - - *
வஞ்சியவரீந்ததைநீவாங்கிக்கொள்-கொஞ்சமென ௨௬௯.

எண்ணாதேதகைமுதல்மற்றென்னபோமோர்செம்பு *
தண்ணீர்போம்தாமிடும்பொய்ச்சத்தியம்போம் - - *
[பெண்ணணங்கே ௨௭௰.

வாவென்றழைப்பார்மணியப்பிலுக்கர்சும்மா - *
போவென்றுசொன்னாலும்பொல்லாப்பு-பாவையே ௨௭௧.

சாதனையர்ச்சேலையிலேதம்பலத்தின்சாறுமிழ்ந்து - *
சூதகமானேனென்றாதூரவிரு-மாதவிடா - ௨௭௨.

யானநாளிற்பணயமஸ்தொக்கங்காணிலொரு - *
பானைவெந்நீர்க்காகவெண்ணிப்பாராதே-நானுன்மேல்

மோகமுற்றேனீயென்மேல்மோகமில்லையென்றுசிலர் *
தோகைநல்லாயுன்கருத்தைச்சோதிப்பார்-ஓகோநீர் ௨௭௪.

என்னமாச்சொல்லவந்தீரென்னுரைசையும்மேலென் *
றன்னமேயென்றலைதொட்டாணையிடு-சொன்னவந்த ௨௭௫

பொய்யாணையாற்சிவன்போகுதோபாரெனக்குத் - *
தையாலவ்வாணைதயிர்ச்சாதம்-கையில் - ௨௭௬.

இருட்டினிற்செல்லாப்பணத்தையீந்துபடுத்துக் - *
கருக்கலிலேபோவாரைக்காட்டித்-தரச்சொல்லு ௨௭௭.

வாயமட்டாப்பேசிஞல்மானேமுசலின்மேல் - *
நாயைவிட்டாற்போலெழுப்பிநம்மைவிடு-கோயிலுக்குள்

நம்பியாரைகருடனுண்டுநம்பியார் - - *
தம்பியாரைக்கூடிச்சஞ்சரிநீ-அம்பெனுங்கண் - ௨௭௯.

மைவிஸ்தாரக்குயிலேவாய்விஸ்தாரக்காரன் - *
கைவிஸ்தாரக்காரன்கையைவிடு-செய்யுமறைக் ௨௮௰.

கட்டளையார்வந்தானுன்கைம்மருந்தாலேயறிவைத் - - *
தட்டழியப்பண்ணித்தனம்பறிநீ-அட்டிலிலே ௨௮௧.

சோறுசமைக்குஞ்சுயம்பாகிவந்தக்கால் - .. *
வேறுமொருவேளாண்மைவேண்டுமோ-சாறும் ௨௮௨.

பரும்படியுஞ்சம்பாவும்பாற்குழம்புநெய்யும் - *
வரும்படிநதகட்டளையாய்மானே-தரும்பொருளை - ௨௮௩.

வெம்பளிக்கைபண்ணுதேவெஞ்சினப்பண்டாரிவந்தா *
லும்பளிக்கைபூர்வத்தையொக்குமே-சம்பளத்தைக் ௨௮௪

கூட்டிச்சுமத்திவைப்பான்கோயிற்கணக்கனொரு - - *
வேட்டுப்போட்டுப்போகவீட்டிலழை ஆட்டுவிக்கக் ௨௮௫.

கால்பிடித்தநட்டுவனார்கையைப்பிடித்தழைத்தால் - - *
வேல்படைத்தகண்மயிலேமேவிவிடு - சாலநெடு - ௨௮௬.

நேரஞ்செல்லாமலென்றிங்குடைசைக்காரனைமுன் - *
னேரமழைத்தனுப்புநேசமாய்ச் - சாரமுள்ள - ௨௮௭.

நாடகத்துப்பாங்குநமக்குநடத்துவிக்கும் - - *
பாடகனையுந்தனதுபண்ணிக்கொள் - கூடுதித்திக் ௨௮௮.

காரனையுங்கைத்தாளக்காரனையுமெக்காளக் - - - *
காரனையுங்கூடியிதங்காட்டாதே - தூறு - - ௨௮௯.

தலையராய்க்கைத்தாழைத்தம்பியராய்ப்பிறற் - *
கலையராயுன்னழகைக்கண்டு - விலைகொடுத்தால் - ௨௯௦.

வாங்குவாய்சற்றேமருவுவான்பேய்ப்படுவான் - - *
தூங்குவான்போவான்சுகமறியான் - பூங்குயிலே - ௨௯௧.

மஞ்சத்தினீயுமொருமாப்பிளையுமாயிருந்து - - *
மிஞ்சுசரசத்திலொருவேற்றாள்வந் - தஞ்சாறு - ௨௯௨.

தந்தாலவனைச்சமையல்வீட்டிற்பதுக்கிச் - - *
செந்தேனைமெல்லச்செறுமுவேன் - வந்தணைந்து - ௨௯௩.

கொல்லைக்குப்போனகுணம்போற்கைகாலலம்பி - *
மெல்லப்போநம்மையெவர்வெல்லுவார் - நல்ல ௨௯௪.

உடந்தையாகத்திரிந்தவுத்தியோகஸ்தர்க் - - - *
கிடைஞ்சல்வந்தாலுன்னையும்வந்தேய்ப்பார் - மடந்தையே.

காணிக்கையானேனுன்கண்டியைத்தாதண்டையைத்தா *
மாணிக்கமாலையைத்தாவைத்துநான் - காணிக்கை - ௨௯௬.

தீர்த்தமறுமாதந்திரப்பித்தருவனென்பார் - - *
ஏந்திழையேநீசற்றிணங்காதே - காந்தாரி - - ௨௯௭.

தாய்க்கிழவிசம்மதித்தாற்சம்மதமென்பாயெனது - *
வாய்க்குப்பயந்தவர்பின்வாய்பேசார் - நோக்கமாய் ௨௯௮.

என்னைக்கலந்தவர்களென்றுங்கைநிறையப் - - *
பொன்னைக்கொடுத்தாற்புணர்ந்துவிடு - மின்னே - ௨௯௯.

பறவைமிருகங்கண் முறைபார்க்குந்தோ வேசி - - - *
முறைபார்க்கவேபிழைப்புமோசம் - சிறுபோதே ௯௰.

தேடியல்லோவன்பிற்சிலம்பியென்றுமன்னவரைக் - - *
கூடுதிருவாரூர்க்கொண்டியென்றும் - ஆடவரைத் - ௯௰௧.

செட்டும்பெருங்குண்டைத்திம்மியென்றுங்கொண்டையிற்பூ
மட்டுண்டவொற்றியூர்வல்லியென்றும் - சிட்டர்தொழும்.

பூவணமாம்பொன்னகரிற்பொன்னனையாளென்றமுடற் *
பூவணமாந்தென்னுறையூர்ப் பொன்னியென்றும் - - *
[தேவர்தொழும் ௯௰௩.

சொக்கேசர்கோயிற்றணைக்கொடியென்றும்புவிக்குள் - *
மிக்கனபேர்படைத்தார்மெல்லியமே - அக்காலம் ௯௰௪

வண்ணமாற்றுப்பசும்பொன்வாங்கவொருத்திசெய்த - *
கிண்ணமாற்றுக்கதையைக்கேட்டிலையோ - பெண்ணணங்கே.

என்றிப்படித்தாயியம்பினாள்புத்தியதை - - - *
யன்றிப்படித்தாளனேகபுத்தி - அன்றுமுதல் - ௯௰௬

(மதனாபிஷேகத்தின் செய்திகூறல்.)

காதன்மதமீறிவருங்காமுகராம்யானைகளைக் - - *
கோதறுமிரங்குசத்தாற்குத்தியிதம் - ஓதியந்த - ௯௰௭.

மாரனாரமனைக்குள்வைத்தணைத்துச்சேர்ந்தாரச - *
சாரக்கரும்புதனையூட்டி - மாலவாய்த் - ௯௰௮.

தம்பற்கவளந்தனைக்கொடுத்துக்கும்பமுலைக் - - *
கம்பத்துடன்பிடித்துக்கட்டினாள் - அம்பரத்தீ - ௯௰௯

மூட்டுவிக்கும்யோகமுனிவோரையும்பொம்மல் - *
ஆட்டுவிக்குந்தோலுருப்போலாக்கினாள் - தீட்டியவேல்

வண்ணக்குடையரசர்மாதிரியாமுந்நீரா - - *
உண்ணக்குறுமுனியையொப்பாளாள் - பெண்ணுக்குத் ௱௧.

(அவளதுதோழிகளைக்கூறல்.)

தோழிமார்கையருந்துச்சொக்கியென்றுஞ்சாராயத் - *
தாழியென்றந்தாதுசவுந்திஎன்றும் - ஏழுமதி - ௱௨.
மேலதியென்றந்தஞ்சாவூரத்தியென்றுமாமாயக் - - *
காதியென்றுங்குண்டுணிவாய்க்கள்ளியென்றும் - மாமூட்டக்

குள்ளியென்றுமாயக்குருவியென்றுமாரீசக் - - *
கள்ளியென்றும்பத்துப்பேர்காமுகனை-மெள்ளப் ௱௰௪.

பொருத்துவாருடலாய்ப்போவாரைமோடி - - *
திருத்துவார்தாராரைச்சிம்பித்-தூரத்துவார் ௱௰௫.

கல்விலைநாருரித்துக்காண்பார்நனைந்தவிடங் - - *
கல்லுவார்தாழுமொருகைபார்ப்பார்-மெல்லிநல்லார் ௱௰௬

(அவளை விரும்பிய ஆடவர்செய்திகூறல்.)

இவ்வாறுசெய்யவிருநிதியந்தேடுமந்த - - *
மைவ்வார்விழியாண்மதிநுதற்கும்-செவ்விக் - ௱௰௭.

கொடியிடைக்குநிலவெறித்தகுறுநகைக்குமொயில்விளைத்த
பிடிநடைக்கும்வயிரமிட்டப்ரபைமிகுத்த தொடிகளுக்கும்

அலையுதித்தவமுதெனச்சொலருமொழிக்குமிருவிழிக்கும் *
மலைகளொக்குமுலைகளுக்குமனதுலைத்து-வலையினுக்குள்

மான்சிக்கினாற்போல்மருள்வாருந்தூண்டிலிலே - *
மீன்சிக்கினாற்போல்மெலிவாரும் ஏன்சிக்கிக் - ௱௨௰.

கொண்டோமென்றுள்ளங்கொதிப்பாருங்கூடியின்பம் *
கண்டோமென்றுள்ளங்களிப்பாரும்-கண்டனைய ௱௨௰௧.

பேச்சுமடந்தைக்குப்பிடிக்குமனதாசையென்று - *
பூச்சுமருந்திட்டணையப்போவாரும்-வாய்ச்சுதென்றே

யார்க்கும்பொடிபோடுமாயிழைமுன்வாடைமணம் *
சேர்க்கும்பொடிபூசிச்செல்வாரும்-ஊர்க்கிணங்கத் ௱௨௰௩.

நந்தனத்தையீந்துசரிந்தனக்காரியன்னுந் - *
தந்தனத்துக்குள்ளாய்த்தளர்வாரும்-தந்திரமாய் ௱௨௰௪.

மாதைப்பசப்பவென்றுவாசல்மட்டும்வந்துநரைப் - *
பூதத்தைக்கண்டகலப்போவாரும்-கோதாயுங் ௱௨௰௫.

கால்பிடிக்கவோவடைப்பைகட்டவோசண்பகப்பூ - *
மேல்பிடிக்கவோவிசிறிவீசவோ-கோலமலர் - ௱௨௰௬.

கட்டவோகட்டழகிகண்ணுறங்கப்பொற்குறங்கு - *
தட்டவோவென்றருகிற்சார்வாரும்-வெட்டிவேர் ௱௨௰௭.

மண்டுகுழலாள்குளித்தவாடைமஞ்சணீரையள்ளிக் *
கொண்டுதலைமேற்றெளித்துக்கொள்வாரும்-அண்டர்பிரான்
சன்னிதியிற்சந்தடியிற்றள்ளுண்டுவீழ்வார்போற் - *
பின்னுகுழலாளைப்பிடிப்பாரும்-பின்னொருத்தன் ௩௨௯.
வீட்டிலிருக்கவெளியிலேநின்றுசன்னை - - *
காட்டித்திரிந்துகனைவாரும்-வீட்டிறப்பை - ௩௩௰.
அண்டிக்கலவிசெய்யுமாரம்பங்கேட்டுவெட்டித் - *
துண்டித்தாற்போலத்துடிப்பாரும்-கண்டனையாள் ௩௩௧.
சோதிமுகமஞ்சள்துவண்டதாகிற்போர்வையுடன் *
வீதிதொறும்போய்ப்பிலுக்கிமீள்வாரும்-காதளவு ௩௩௨.
மைப்பட்டகண்ணிசப்ரமஞ்சத்தின்மேற்காலைத் - *
துப்பட்டிகொண்டுதுடைப்பாரும்-செப்பமுள்ள ௩௩௩.
தெப்பத்திருநாளிற்றெப்பக்குளத்துமங்கை - *
தெப்பத்தேயேறிவருஞ்சீராட்டில்-அப்பம் - ௩௩௪.
வடைசுகியன்றோசைவகைகள்பணியாரம் - - *
கடையிலேகொண்டுமடிகட்டிச்-சடுதியிற்போய் ௩௩௫.
தாரிகையிலேகொடுக்கநாடிவடமோடுமாழ் - *
வாரியிலேயோடிவருவாரும்-பேராம் - - ௩௩௬.
வசந்தன்றிருநாளின்மண்டபத்தின்மங்கை - - *
இசைந்துநடம்புரியுமெல்லை-கசங்காமல் - - ௩௩௭.
மல்லிகைப்பூச்செண்டுமருக்கொண்டுசந்தடியை - *
மெல்லவிலக்கிவரும்வேளையிலே-நல்லபட்டைக் - ௩௩௮.
கம்பாலடிபட்டகஸ்தியினானொந்துடம்பு - - *
செம்பாலொழுகத்திரிவாரும்-தம்பிரான் - ௩௩௯.
பல்லக்குக்கூடிப்பதினாறுநாழிகைமேல் - - *
வல்லொக்குங்கொங்கைவளவுக்குச்-செல்லுகையிற் ௩௪௰.
குக்கல்வாய்காட்டிக்கொடுக்கத்தலையாரி - - *
கைக்குளகப்பட்டுக்கட்டுண்டு-கக்குராத்தம் - ௩௪௧.

மூக்கிட்டோர்முகமுழங்கையிடிபட்டுநெஞ்சிற் - - *
சீக்கட்டிக்கொண்டுதிரிவாரும் - தூக்குமஞ்சத் - ௩௪௨.

தேயொருவன்வீட்டிலிருக்கவதுகாணாமற் - - *
போயொருவன்வீட்டிற்புகுதலே - ந்யாயமற்ற - ௩௪௩.

பூசல்விளைத்துப்பொறாமையினாலேவாது - - *
பேசிவெளியிற்புறப்பட்டு - ரோசமுடன் - ௩௪௪.

மாதொருத்திக்காப்பொருதவாலியுஞ்சுக்ரீவனும்போல் *
வீதியிலேமற்கட்டிவீழ்வாரும் - சாதிரைத்தீ - ௩௪௫.

வட்டிவெளிச்சமினுமினெனவந்தியர்முன் - - *
கட்டியங்கள்கூறக்கடுநடையாய்த் - தொட்டுவரும் ௩௪௬.

பாதக்குறட்டிற்பவளக்குமிழிலங்க - - - *
மாதுமணவறைக்குள்மன்னர்வரும் - போதிலந்த ௩௪௭.

வீட்டிற்பரணேறிமேவுந்தொழிலமளி - - *
கேட்டுப்பதுங்கிக்கிடப்பாரும் - பாட்டிரஞ்சொன் ௩௪௮.

மாங்குயிலைப்போலமருவக்கனவுகண்டு - - *
தூங்கையிலேயிந்திரியஞ்சோர்வாரும் - ஈங்கிவனுக் ௩௪௯.

ஈயவகைகாணோமிரதம்பொன்னாக்குவது - - *
பாயமென்றுமித்ரம்பலகூட்டித் - தீயிற் - - ௩௫௰.

குகையிலேவைத்துக்குனிந்தூதிவாதப் - - - *
புகையிலடிபட்டுப்புகைந்து - திகைதெரியா - ௩௫௧.

மாலைக்கண்ணாகிமதிமயங்கித்தங்கள்தங்கள் - - *
காலைக்கண்ணாக்கிவழிகாண்பாரும் - வாலிபத்தில் ௩௫௨.

பூணார்முலையாட்காப்பொன்திருடிக்கையிரண்டும் - *
சாணாகக்கண்டுதளர்வாரும் - வாணுதற்காத் - ௩௫௩.

தாங்கன்னமிட்டுத்தலையைக்கடைக்காசு - - *
வாங்கென்னவிட்டுடலமாய்ப்பாரும் - தூங்கிவிழும் ௩௫௪.

வண்ணானாமயிரும்மாதவிடாய்த்தம்பலமும் - *
பெண்ணாய்த்தலையோடும்பின்னையொன்றும் - கண்ணாட்டுப்

பானைபோலேநனைத்தபாவிபடுக்கைத்தலத்திற் - *
பூனைபோற்றேண்டிப்புதைப்பாரும்-மானனையாள் ௫௫௬.

இட்டமருந்தாலிருமல்பிடித்தோயாமற் - *
குட்டியிட்டநாய்போற்குரைப்பாரும்-ஒட்டியபுண் ௫௫௭.

என்பவர்க்குநாணியிரசந்தின்றின்கரும்பு - - *
தின்பவர்க்குநாணித்திரிவாரும்-பொன்சரிகைச் ௫௫௮.

சேலைகொடுத்ததற்குச்சீமாட்டியென்கொடுத்தாள் - *
சூலைகொடுத்தாளென்றுசொல்வாரும்-மூலவனை ௫௫௯.

யாப்புக்குச்சத்திரமிட்டாவிக்காக்கக்காக்காய்த் - *
தோப்பிற்கிடந்துதுடிப்பாரும்-மாப்பிளைமார் ௫௬௰.

வைத்தநகக்குறியைமங்கையிருகொங்கையிற்கண் - *
டெய்த்துநெடுமூச்செறிவாரும்-மூத்துமுத்தாய்ப் ௫௬௧.

பேசினுலும்போதும்பேதைநமைத்தூஷணமா *
ஏசினுலும்போதுமென்பாரும்-பாசிழையாள் ௫௬௨.

கொந்தலரும்பூவணைமேற்கும்பகர்ணலீலைசெய *
இந்திரன்போற்பக்கத்திருப்பாரும்-ஐந்துபத்து ௫௬௩.

மாடுவிற்றேறுநூறுமதிவிற்றேமேழமந்தை - - *
ஆடுவிற்றேம்வீட்டிலடிமைவிற்றேம்-தேடரிய ௫௬௪.

வெண்கலத்தாற்குத்துவிளக்குவிற்றேங்காணிவிற்றோம் *
உண்கலத்தைவிற்றேமுடைமைவிற்றேம்-பெண்செலவுக்

கென்னத்தைகேட்கவந்தாலென்னத்தை நாங்கொடுப்போம்
என்னத்தைச்சொல்லுவோமென்பாரும்-முன்னமிந்த ௫௬௫.

மின்னுசைகொள்ளாமல்வீணுக்குக்கொண்டோமிச் - *
சன்னுசைமென்றுதளர்வாரும்-என்னசெய்வோம் - ௫௬௬.

பங்கைவிற்றுதீர்ந்தோம்பணமினுந்தாபோவென்றாள் *
எங்கேசுமையெடுப்போமென்பாரும்-ரங்குனுக்கு ௫௬௮.

தித்திலோனுகாசுசெவ்லோனுபோங்குலுதாம் - - *
இத்தனையுந்தோற்றிழந்தோமென்பாரும்-அத்தையார் ௫௬௯

கூளமகனாநன்னாசொர்ணவெல்லாதக்கொண்டு *
நாளையென்றாளென்றுமனைநவாரும்-நாளிலே ௩௭௰.

பாண்டிநாட்டிச்சிபணமுறுஞ்சினாள்நாங்கள் *
ஆண்டியானோமென்றலைவாரும்-ஆண்டியர்தம் ௩௭௧.

தொண்டுபோய்வேடம்போய்த்தோகைக்குடையவனைக் *
கொண்டுபோய்க்கையிற்கொடுப்பாரும்-கண்டசெட்டு

மோசமாச்சுக்காண்முதலுக்குப்புல்வாண்டைக் *
காசுமில்லையென்றுகனைவாரும்-வேசியிவட் ௩௭௩.

ஈந்தபொருளைவட்டிக்கீந்தோமோநாமிருக்க *
வாய்ந்தமச்சுவீடுகட்டிவைத்தோமோ-கூந்தலிளம் ௩௭௪.

பேடைமயில்போல்வீட்டுப்பெண்டாட்டிக்கேயுடைமை *
சோடிணையாப்பூட்டிச்சுகித்தோமோ-ஆடுகொண்டு ௩௭௫.

விட்டோமோமாடுகொண்டுவிட்டோமோதெய்வத்துக் *
கிட்டோமோதேகியென்பார்க்கீந்தோமோ-அஷ்டதிக்கும்

நாடிப்புகழ்பெரியநாகமன்போற்பாமாலை *
சூடித்தியாகஞ்சொரிந்தோமோ-தேடுநிதி ௩௭௭.

தன்னைக்கொடுத்துத்தரித்திரத்தைவாங்கினோம் *
என்னவியாபாரமென்பாரும்-இன்னவகை ௩௭௮.

காமுகரெல்லாமயங்கக்காளத்தியையன்மகன் *
ஆமொருவனிவ்வூரனாதியையன்-சேம ௩௭௯.

மதுரைக்கொருநாள்போய்மாசித்தெருவில் *
விதிவசத்தாற்கண்டானம்மின்னை-மதிநுதலாள் ௩௮௰.

மையலுக்குள்வீழ்ந்தான்வடுச்செய்தமாமரத்தில் *
மெய்யுரிஞ்சப்போய்க்கவரிவீழ்ந்தாற்போற்-கையில் ௩௮௧.

இருந்ததெல்லாம்வீட்டிலிருந்ததெல்லாமஸ்தி *
இருந்ததெல்லாந்தோற்றனிரந்தான்-மருந்தினாற் ௩௮௨.

கள்ளுண்டார்போலக்கலங்கினான்வாசலிலே *
கள்ளுண்டான்தன்னொழுக்கந்தப்பினான்-விள்ளுவதென்

ஆதியையனென்றும்பேரன்றேபோயிப்பால்வி - *
யாதியையனென்றும்பேராயினான்-பாதி - ௩௮௪.

யுடலாகியொட்டியபுண்ணுள்ளோருக்கயார்க்கும் - *
தொடலாகாச்சீச்சிரங்குகுலை-கொடிய - - ௩௮௫.

அரையாப்புமேகவெட்டையண்டத்துவாதம் - - *
புரைவாய்ப்பவுத்ரம்புகைச்சல்-இருமல் - ௩௮௬.

இளைப்புப்பொடுகுமருந்திட்டநோய்பித்தம் - *
களைப்புமாய்ப்பூனைபோற்கத்திக்-கிழக்கே - - ௩௮௭.

அடுத்தமனையிலருகுதிண்ணைதன்னிற் - - *
படுத்துக்கிடக்கிறான்பாரும்-படித்தவரே - - ௩௮௮.

இப்படியாத்தேடியுண்ணுமேந்திழையாள்வாழ்மதுரைக் *
கெப்படிபோவீர்வருவதெப்படிகாண்-செப்புமவ ௩௮௯.

தானியையரோவென்றுதக்கயுத்திபோதிக்க - - *
ஞானியையரைப்பார்த்துநான்விரத்தி-யானேன் ௩௯௰.

(அவதானிமதுரைக்கேகினமைகூறல்.)

இருப்புத்தூணிற்கறையானேறுமோபோம்போம் *
நெருப்பிற்புழுவிழுமோநீசொன்-கருத்தை - ௩௯௧.

அறியுமொன்றேனல்லையரோவென்று - - *
பிரியாமல்வந்தானொன்பின்னே-நெறியினிற்போய் ௩௯௨.

வையகமேலெய்தியசீர்வைதிகநூன்மெய்யொலிசேர் *
மொய்த்திரைநீர்வையையில்யான்மூழ்கியே-உய்யப் ௩௯௩.

படியுமடியவர்கொடியபடிறுசெயுமிடர்முழுதும் - *
அடருமெழுகடலினிடையாடிக்-கிடையாப் - ௩௯௪.

பரத்துக்கேவிருப்புற்றோர்பவத்துக்கோர்நெருப்பொப்பா
அருட்பொற்றாமரைக்குட்போயாடி-உருச்செபிக்கும் [ம்

ஐந்தெழுத்தைச்சிந்தைவைத்ததிட்டன்பருக்குச்சஞ்சலத்தை
சிந்துசித்திக்குஞ்சரத்தைத்தெண்டனிட்டுக்-கந்தபுஷ்பக் [ச்

கற்பகமெனப்பொலிகடப்பநிழலிற்குலவும் - - *
அற்புதகயற்கணுமையைத்தொழுது-சிற்பரத்தில் ௩௯௭.

நேசர்மனவாசர்பவநாசர்கயிலாசர்சக - - *
தீசர்மதுரேசரடியான்போற்றி-நேசமுடன் - ௩௧அ.

துங்கப்ராகாரத்தைச்சுற்றிவடகுடபாந் - - *
சங்கப்புலவர்தமையேத்தி-எங்குமுள்ள - ௩௧௯.

தீயமாபாதகமுந்தீரத்தீர்த்தம்பருகி - - - *
நாயகர்பொற்கோபுரத்தைநாணிங்கி-ஆயிரக்கால் ௩௨.

(மதனுருபிஷேகத்தைக்கண்டுமருண்டமைகூறல்.)

மண்டபத்திற்கண்டேன்மதனுருபிஷேகத்தை - - *
விண்டலத்தைவிட்டுவந்தமேனகையைக்-கொண்டைச் ௩௨௧.

சொருக்கழகுமுத்துத்தராயழகுஞ்செவ்வாய் - *
முருக்கழகுஞ்சேலைமுகப்பிற் கருக்கழகும் - ௩௨௨.

வேலழகுபோன்றவிழியழகுந்தண்டையிட்ட - *
காலழகும்பொற்கடகக்கையழகும்-ஒலையிட்ட - ௩௨௩.

காதழகும்வச்ரமணிக்கச்சிறுக்குமார்பழகும் - *
சோதிமுகத்தழகுந்துங்கரத்ந-மாதுரதி - - ௩௨௪.

கட்டழகும்பொட்டழகுங்கச்சைகட்டிவந்தகட்டு - *
மட்டழகுங்கண்டுமயங்கினேன்-கிட்டவந்த - ௩௨௫.

நாட்டத்தைக்கண்டுநடந்துசிலைக்காமனும்பூந் - *
தோட்டத்தைக்கொள்ளைகொண்டுதோன்றினன்-வாட்டுமத

கையம்புபாயவஞ்சிகண்ணம்புபாயநின்று - - [ன்
தொய்யுமான்போலத்துவக்குண்டேன்-தெய்வசுதி ௩௨௭.

காணுமிசைராகங்கைத்தாளமத்தளங்கை - - *
வீணைபலகைதித்திவேணுசுரம்-கோணுமற் - ௩௨அ.

கூடுஞ்சுருதியுடன்கொம்பனையாள்சங்கீதம் - *
பாடுஞ்சுருதியின்பம்பாலிக்க-ஆடவரை - ௩௨௯.

எய்யுமதவேள்கைக்கிசையுமலரீவாள்போல் - - *
மையலாள்புஷ்பாஞ்சலிசெய்தாள்-செய்துபின்னை ௩௩.

யார்கவுத்துவங்கொண்டாராடவிளையதயி - - *
ளூர்கவுத்துவங்கொண்டுநண்ணினேன்-சேரும் - ௩௩௧.

நிலைக்கிடைகொண்டாள்மருட்டுநீலமலர்ச்செங்கண் ❋
வலைக்கிடைகொண்டாளென்மனத்தைக்-கலைப்பரத ௪௱௰௨.

மூந்தோறொடுப்பெடுத்தாள்மூரிவில்லைப்பூட்டியென்மேல் ❋
வந்தோறொடுப்பெடுத்தான்மன்மதவேள்-நந்திசொன்ன

சொற்கட்டிலாரிதொடுத்தாள்முன்னின்றவ்வை - ❋
மற்கட்டுவாள்போல்மறையநின்றேன்-பொற்கடகக் ௪௱௰௪.

கைச்சலாங்கொண்டாள்கனம்பேசுவாமிதற்கே - ❋
மெச்சலாமென்றுரைத்தார்விஞ்சையோர்-மெச்சுந் ௪௱௰௫.

திருக்கொண்டாள்மற்றோர்சதிகொண்டாள்கண்டே ❋
மருட்கொண்டிருக்கவெனைவைத்தாள்-விரித்தசுருள்

பாதிரடித்தாள்தேம்பாடினள்பூப்போட்டு - - ❋
வாதினடித்தாருமயங்கினார்-சூதுமுலை - ௪௱௰௭.

மாதுபிரபந்தம்வகுத்தாளிதற்குரைப்ப - - ❋
தேதுபிரபந்தமெனவெண்ணினேன்-நாதப் - ௪௱௰௮.

பதசாரிசாரிகொள்ளப்பார்வேந்தரீந்தார் - - ❋
முதுசாளிகைப்பொன்முடிப்பை-எதிராக - ௪௱௰௯.

நின்றவினையங்கள்செய்தாள்நிஷ்டூரியென்மனது - ❋
கன்றவினையங்கள்செய்தாள்கண்ணாலே மன்றிலொரு ௪௱௨௰.

கோப்பெடுத்தாள்வேந்தர்பொன்னைக்கொள்ளைகொள்ளக்க
[ள்ளியிந்தக்
கோப்பெடுத்தாளென்றொன்கூடவந்தோர்-காப்பான .

தாரணிகொண்டாள்வேர்தடமகுடங்கம்பிக்கப் - ❋
பேரணிகொண்டாளரசைப்பேய்கொண்டேன்-ஆரணங்கு

சக்கணிநின்றாடச்சபையிலேபோடியந்த - - ❋
மைக்கணியைமுத்தாடவாஞ்சித்தேன்-இக்கனையாள் ௪௱௨௩.

செயிலாகுவித்தையினுற்செம்பொனுடனேமெனவென் ❋
கைலாகினேந்தக்கருத்தானேன்-மைவாளும் - ௪௨௪.

கைவாளுமென்னைவெட்டக்கள்ளியொருகூத்துவிதம் ❋
செய்தாளம்மான்மான்வலையிற்சிக்கேனென்-தொய்யாமல்

தேசிகத்திலோர்நடனஞ்செய்தாள்கடையிலுள்ள - - ✻
கோசிகப்பொன்னுடையெல்லாங்கொள்ளைகொண்டாள்-பே
[சும் ௪௨௬.

நயமங்களப்பெண்ணடம்பலசெய்தாள் - - ✻
செயமங்களம்பாடித்தீர்ந்தாள்-மயல்கொண்ட ௪௨௭.

பேதையென்றன்மனை தம்பெண்களும்பின்னேதொடர ✻
மாதுமனைக்கேகவழிகொண்டாள்-காதில்விசைப் ௪௨௮.

பந்தடிபோற்றுள்ளிப்பாதவித்தேன்பாங்கனையச் - ✻
சந்தடியிற்கையைவிட்டுத்தப்பினேன்-மந்த்ரசெப ௪௨௯.

சுற்றமெனுந்தளையுந்தோழனெனும்பாகனையும் - ✻
புத்தியெனுமங்குசமும்போக்கியே-மத்தமிஞ்சப் ௪௩௰.

பெண்ணானையைத்தொடரும்போனையேபோலப் - ✻
பண்ணூர்மொழியாள்பின்பற்றினேன்-வண்ணமலர்க் ௪௩௧.

காலிலிட்டதண்டைகலின்கலினென்றேலமிட - ✻
மேலிலிட்டபூஷணப்பொன்மின்னெறிப்ப-வாலிபர்கண்

உண்ணுந்தகொங்கைக்கறிவைக்கொடுத்திலையிற் - ✻
சுண்ணம்பிடாமற்சுருட்டியுண்ணக்-கண்ணிரண்டும் ௪௩௩.

மங்கைமேலாகவருவாரும்போவாரும் - - - ✻
தங்களிலேதங்கள்தலைமோத-துங்கமத - ௪௩௪.

அத்தியின்மேற்செல்லுமரசரிவள்கொங்கைகளும் - ✻
மத்தகமுநோக்கிமதிமருளத்-தத்துபரி - - ௪௩௫.

கான்மீறினுற்போற்கலினநெகிழவிட்டு - ✻
மான்மீறினுரொதிரோமாறிவிட-வேல்விழியாள் - ௪௩௬.

சந்தனகும்ப ஸ்தனங்கள்சுமந்திடை - - - ✻
நைந்தனமென்று நடுங்கநடந்திவள்-வந்துதன் - ௪௩௭.

பொன்முகப்புமாளிகையிற்போய்ப்புகுந்தாணின்றேனன் ✻
முன்முகப்புவாயிலிலோர்மூங்கைபோல்-என்முனொரு

செக்குவருவதுபோல்சீமாட்டிகைம்மருந்துச் - ✻
சொக்கியென்னும்பாங்கிவந்துதோன்றினள்-மைக்குழலாள்

செக்குவருவதுபோற்சிமாட்டிக்கைம்மருந்துச் - *
சொக்கியெனும்பாங்கிவந்துதோன்றினாள் - மைக்குழலாள்

(பாங்கிகள்சந்திசெய்தமைகூறல்.)

ஆரொன்றுனுங்களுனேர்யாதென்றாளேதுங்கள் - - *
பேரொன்றுரண்டியண்டிப்பேச்சிட்டாள் - காரிகையே ௪௪௧.

ஸ்ரீரங்கமெங்கள்பதிசிங்கையபொன்தோப்பனார் - *
சாரங்கபாணியையர்தம்பிநான் - நாரணையர் - ௪௪௨.

சுப்பையபொன்மாமனார்சோமாசிபட்டர்பெறும் - *
அப்பையங்கார்தாமெங்களத்தம்பி - செப்புகவி - ௪௪௩.

அஷ்டாவதானியென்பேராயிழையேயென்மனைவி *
மட்டார்குழலிமனவெறுப்பால் - விட்டேகி - ௪௪௪.

நாடிவந்தேனுங்கள்பதிநம்பர்சொக்கலிங்கர்முன்னின் *
றாடிவந்தபெண்ணரசியாரென்றேன் - ஆடவரோ - ௪௪௫.

மாணிக்கமாலைபெற்றவச்சிரத்தைக்கும்பகுடக் - *
காணிக்குவாய்த்தகனதனத்தை - ஆணிமுத்தை - ௪௪௬.

விண்ணிச்சைகொள்ளவந்தமேனகையைப்பெண்ணுக்குப் *
பெண்ணிச்சைகொள்ளவந்தபெண்ணமுதை - எண்ணரிய

சாஸ்திரவிதகொக்கோகசாரத்தைமேல்விருது - - *
பாத்திரசிரோமணியைப்பைங்கிளியை - வாய்த்தமட ௪௪௮.

மானைமரகதத்தைமன்மதகுடோரியைச்செந் - *
தேனைமதனபிஷேகத்தை - நானிலத்தோர் - ௪௪௯.

எல்லாமறிந்திருக்கயாமறியோமென்றவிதம் - *
சொல்லீரொன்றுள்மயலைத்தூண்டினாள் - மெல்லிநல்லாய்௪௫௰

இன்றைக்கெவர்வருவாரோத்திழைக்கென்றேனந்தக் *
குன்றைப்பொருதமுலைக்கொம்பனையாள் - அன்றதற்குப் .

பட்டணத்துப்பாரபத்யம்பாஸ்கரையனேகோட்டைக் *
கட்டளையானேபாயக்கட்டுபல - பட்டடையிற் ௪௫௨.

சோலையப்பப்பிள்ளையோசுற்றுதடைகட்டு - *
மாலையப்பப்பிள்ளையோவாசல்வழிச் - சாலயஞ்சற் ௪௫௩.

காரமணியங்கணகசபாபதியோ - - ⁎
பாரணிலாயம்மணியம்பங்காரே - சீரணவு - - ௪௫௪.

ஆனைமணியமரசப்பனோதர்ம - - - - ⁎
தானமணியஞ்சதாசிவனோ - மேன்மைதரும் - ௪௫௫.

கோயிற்றுறைமணியங்கும்பலிங்கப்பிள்ளையோ ⁎
ஆயத்துறைமணியமாண்டியோ - ஒய்வறுகா - ௪௫௬.

மோட்டமணியமுருக்கப்பனோகோத் - - - ⁎
தோட்டமணியநெட்டைச்சொக்கனோ - மாட்டுவரிக் ௪௫௭.

காரனோபாசிவரிக்காரனோபிரங்கிக் - - - ⁎
காரனோபொற்கொடிமேற்காதலொடும் - ஓரிரவில் ௪௫௮.

எத்தனையோபேரிங்கேயெத்தனையோபொன்கொடுவந் ⁎
தெத்தனையோசொல்வார்களெத்துக்கள் - உத்தமிதான் ௪௫௯

அங்கவரிலேயொருவர்க்கானாலும்வாய்நேராள் - ⁎
சிங்கஞ்சிறுதேனைதின்னுமோ - உங்களைப்போல் ௪௬௰.

நற்குணமுள்ளார்தமையேநாடுவாள்வேந்தர்தரும் - ⁎
பொற்குவைக்குமுள்ளம்பொருந்தாள்காண் - சொற்புலமை

வீறுடையராகியநல்வேதியரோயென்றுசில - ⁎
கூறியதன்பின்னேயக்கோதையங்கே - தூறுதலைத் ௪௬௨.

தூதுசவுந்திக்குச்சொன்னாள்பயிலாக - - ⁎
ஏதுக்கழைத்தீரெனவந்தாள் - மாதுக்கின் - ௪௬௩.

றூர்வருவார்சொல்லென்றேனாருமில்லைபொன்கொடுத்து ⁎
நீர்வருவீராகிலிங்கேநிற்பானேன் - வாருமென்றாள் ௪௬௪.

முத்தனையமுத்துநகைமோகவல்லிக்குப்பணயம் - ⁎
எத்தனைபொன்சொல்லென்றியம்பினேன் - அத்தைக்கு ௪௬௫

முன்னூறுபொன்மகட்குமுந்நூறுபொன்னெனக்குப் - ⁎
பின்னூறுபொன்றோழிப்பெண்களுக்குச் - சொன்ன ௪௬௬.

தொருநூறுபொன்னுமொருமுடிப்பாய்த்தந்து - ⁎
வருவீரேல்வாருமென்றாள்மங்கை - துரைமதுரை ௪௬௭.

வெள்ளைப்பு துவெட்டுமின்னலாயப்படியே - - *
அள்ளிக்கொடுத்தங்கனுப்பினேன் - உள்ளிருந்து ௩௬௮.

(ஏவற்பெண்களுபசரித்தமைகூறல்.)

பைந்தாரணிகூந்தற்பைங்கிளிவாயிப் பெண்கள்சிலர் *
வந்தார்தொழுதார்வரச்சொன்னார் - சந்தனத்தி ௩௬௯.

கைவிளக்குக்கொண்டுவந்தாள்கால்விளக்க நல்லதண்ணீர் *
தெய்விகொண்டுவந்தாள்பொற்செம்பிலே - மைவிழியாள்

அங்கிபிடித்தாளடைப்பைவரிசைசின்ன - - *
தங்கிபிடித்தாள்தனிப்படிக்கம் - செங்கலவை - ௩௭௧.

பூசினாள்பூச்சிவந்துபூமுடித்தாள்பூவி மெல்ல - *
வீசினாள்பொன்கவரிவெண்கவரி - ராசி - - ௩௭௨.

கைலாகுதந்தாளென்காமேனாகுமென்று - - *
வெயிலாள்பாவாடைவிரித்தாள் - ஒயிலாகப் - ௩௭௩.

(மனைக்குட்சென்றிருந்தமைகூறல்.)

பம்புபெருபோனுட்பகட்டறியாப்பாய்புலிபோல் - *
அம்பொனெடுமனைக்குள்யான்சென்றேன் - செம்பவளப்

போதிகைக்காலேந்துசிங்கப்பொங்கத்தங்கச்சவுக்கை *
மீதூரத்தகம்பளவிசாலத்தில் - மோதுகரிக் - ௩௭௫.

கோட்டாரக்கொங்கையார்கொண்டுவந்துதிண்டருகு *
போட்டார்துரைப்பாங்குபோலிருந்தேன் - வாட்டடங்கண்

(மதனாபிஷேகம்கண்டுஉபசரித்தமைகூறல்.)

வட்டமிட்டகொங்கைமதனாபிஷேகமுநான் - - *
கட்டிவிட்டபொன்முடிப்பைக்கைக்கொண்டு - இஷ்டத்சஎள

தருக்குடையேன்றன்னைவந்துசந்திக்கரண்டு - - *
பருக்குமெழுமிச்சம்பழங்கள் - மருக்கொழுந்துச் ௩௭௮.

செண்டுகொண்டுதன்னிடத்திற்சென்றிருந்தவென்மனதும் *
கொண்டுகொண்டுவந்துநின்றுகும்பிட்டாள் - ஒண்டொடியா
[ள் ௩௭௯

காதலனைச்சேர்ந்ததறியாக்கன்னிபோற்சூதறியாப் - *
பேதைபோற்கூசிமெள்ளப்பேசினாள்-மாதவரோ ௪௮௰.

மண்டபத்திலாடினேனென்வந்துநின்றீரும்மைநான் - *
கண்டுமயலாகியென்பக்கத்துறைவோர்-ஒண்டொடியை ௪௮௧.

மெள்ளப்போய்க்கூட்டிவாவீட்டிலென்றேன்மாரீசக் *
கள்ளிகுழப்பிக்கழப்பிவிட்டாள்-தெள்ளுதமிழ்ப் ௪௮௨.

பாட்டிலேவல்லீரொன்பங்கிற்குலதெய்வம் - - *
வீட்டிலுமைக்கூட்டிவந்துவிட்டதே-வீட்டில்வரத் ௪௮௩.

தாங்கலேன்வாசற்றலைக்கடையினிற்பானேனன் - *
பாங்கியேன்வந்தாற்பணயமேன்-நீங்களல்ல - ௪௮௪.

பூவைக்கண்டேமூடித்துப்போவோமென்றெண்ணினீர் *
மேவிக்கொண்டானன்விடமாட்டேன்-தேவரீர் ௪௮௫.

சித்தமெங்கள்பாக்கியமென்றுசெப்பினாள்சாலவித்தை *
யத்தனையுமெய்யென்றேயானிருந்தேன்-கைத்தலத்தால்

மின்னிருக்குநுண்ணிடையாள்மென்கமலக்கைபிடித்து *
முன்னிருத்திக்கொண்டுமுகம்பார்த்தேன்-கின்னரத்தைக்

கூட்டினாளேந்துமுலைக்கோட்டினாள்தந்திரியை - *
மீட்டினாள்சங்கீதமெல்லச்சா-ரூட்டினாள் - ௪௮௮.

சொக்கேசர்மேற்கவியுஞ்சொக்கேசர்தம்பாதி - *
மிக்கானவங்கயற்கண்மேற்கவியும்-தக்கபுகழ்ப் ௪௮௯.

பாண்டித்துரைமீதிற்பாட்டும்படித்ததற்பின் - *
ஆண்டதிலைக்கோட்டையதிபன்மேல்-தாண்டுபுகழ்ச் ௪௯௰.

சிங்காசனாதிபதிசிந்தமகூளேந்த்ரனருள் - - *
எங்கோன்பெரியநாகேந்திரன்மேல்-மங்கை - ௪௯௧.

பதம்படித்தாள்வண்ணம்படித்தாளென்காதுக் - *
கிதம்படைக்குந்தேன்போலினிக்க-விதம்படைக்கும் ௪௯௨.

முற்கட்டும்பாகமுஞ்சீர்மோனைகளும்பொருளும் *
பிற்கட்டுமுன்மூனும்பின்மூனும்-நற்கட்டாம் ௪௯௩.

சொற்கட்டுங்கண்டுவிலைதொண்ணூறுபொன்பெறுமோர் *
கற்கட்டுமோதிரத்தைக்கையிலிட்டேன்-விற்பிடித்து ௪௯௪.

(தாய்க்கிழவிகண்டுஉபசரித்தமைகூறல்.)

வாங்கினாற்போலவளைந்தவரட்டுடனும் - - *
தாங்கிவைத்தகாலுந்தடிக்கொம்பும்-தேங்காய்க் ௪௯௫.

குடுக்கைபோல்வாயுங்கொடுவாயுஞ்சற்றே - - *
நடுக்குந்தலையுநரையும்-பொடிக்கொசுகு - - ௪௯௬.

மொய்த்தகண்ணுங்காற்றுமுட்டிமுன்பறியப்பின்பறியக் *
குத்திருமல்போட்டலைக்குங்கோப்புமாய்-வித்துக்கு ௪௯௭

விட்டசுரைக்காய்போல்விழுந்துமுழங்காலதனைத் - - *
தொட்டமுலைத்தாய்க்கிழவிதோன்றினாள்-கிட்டவர ௪௯௮.

நாணமுற்றுள்மாமியென்றுநானறியத்தன்னுடம்புக் *
கோணலுக்குள்ளேசற்றேகோணினாள்-தூணொதுங்கி ௪௯௯.

வந்தீரோவெங்கள்வரிசைத்துரையேநீர் - - *
சந்தோஷமாகவிங்கேதான்வரவே-இந்தமனை - - ௫௱.

என்னதவஞ்செய்ததோவென்பேதைமுன்பிறப்பில் *
என்னதவஞ்செய்திருந்தாளோ-கன்னிமுந்தா - ௫௱௧.

நாளிரவுகண்டகனாநன்மையுமென்பேதைமணித் - *
தோளிடதுபக்கந்துடித்ததுவும்-ஆள்வரத்தில் - ௫௱௨.

காகங்கதறியதுங்கட்டைச்சிதும்மியதும் - *
தோகைக்கொருகுறத்திசொன்னதுவும்-யோகமீவரப் ௫௱௩.

பல்லிநிமித்தம்பலகாலியம்பியதும் - - - *
நல்லவரைச்சேர்க்குமென்றுநங்கையுடன்சொல்லிவைத்தேன்

அப்படியேவந்தீரொன்றுரைசமகள்குணத்தை - *
இப்படியென்றேயறியீரின்னமுநீர்-பொய்ப்பிரட்டிச் ௫௱௫.

சாலவித்தைப்பெண்கள்தடத்தின்மிதித்தறியாள் - *
மாலவித்தைப்பெண்கள்மனைக்கேகாள்-நாலு - ௫௱௬.

பரத்தையரைப்போலேபணங்காசுதேடுங் - *
கருத்துண்டோகாயக்கங்காணேன்-ஒருத்தர்கிட்ட ௫௱௭.

மானாளைவிட்டேனோமாயக்கிரந்திவந்து *
தானாலொருகாசுக்காகுமோ - நானின்ற ௫௱௮.

மாதுக்குராசவளர்ச்சியேயல்லாமல் *
ஏதுமறியாள்சிறியாளின்னங்காண் - பேதைக்குக் ௫௱௯.

கொஞ்சவயதானாலுங்கூடியுமைக்கலந்து *
கொஞ்சவயதுகாண்கொற்றவரோ - வஞ்சிநல்லாள் ௫௱௰.

தன்மனதுக்கேற்கச்சவதரித்தாற்பொன்கோடி *
மன்மதன்தந்தாலுமினிவாங்காள்காண் - என்மகட்குப் ௫௱௰௧

பாவிமேலமெள்ளப்பழநழுவிவீழ்ந்தவிதம் *
போலவந்துவாய்த்தீர்புலவரோ - நீலியொரு ௫௱௰௨,

பேய்ப்பிள்ளையைப்பெற்றேன்பிடிப்புவிடாமற்கொண்ட *
மாப்பிள்ளையும்பெண்ணுமாய்வாழ்ந்திருங்கள் - மாப்பிள்ளைக்கு

நித்திரைக்குமெத்தநெடுநேரமாகுதுபோ *
தத்தைமொழியாயென்றுசன்னைசொல்லி - அத்தையரும்

போயினார்பாங்கியரும்போயினார்செம்பவள *
வாயினாளுள்வீட்டில்வாருமென்றாள் - சேயிழையாள் - ௫௱௰௫

(பள்ளியறைச்சிறப்புக்கூறல்.)

முன்சென்றாள்பின்சென்றேன்முன்முகப்புவாசலிலோர் *
பொன்கொண்டிழைத்தரத்நபோதிகையோ - மின்கொண்ட

சித்ரக்கொடுங்கையோசெம்பொனிலையோகதவிற் *
பத்தியிட்டகண்ணாடிப்பட்டமோ - கத்திரிப்பு ௫௱௰௭.

வேலைநிரைத்தபுதுமேற்கட்டியோசுகந்த *
மாலைநிரைத்தவரிசையோ - கோலவச்ரக் ௫௱௰௮.

காலிட்டதூங்குமஞ்சக்காந்தியோபட்டாடை *
மேலிட்டமல்லிகைப்பூமெத்தையோ - எல்லைகண்டு ௫௱௰௯.

தாங்கியதீவட்டிக்குத்தானேதயிலம்விடப் *
பாங்கில்வைத்தசூத்திரப்பொற்பாவையோ - தூங்குமஞ்சப்

பக்கத்தில்வெள்ளிப்படிக்கமோபள்ளியறைத் *
திக்குத்திக்குமதிற்சித்திரத்தில் - மைக்கருங்கட் ௫௨௧.

பெண்ணிரதிபோலாறுபேர்க்கொருவனைவிலை - *
பண்ணவெழுதிவைத்தபாவனையோ - தண்ணளியோன் ௫௨௨.

மேற்கொண்டொருமடந்தைமிக்காமுபரிசெயக் - - *
கார்க்கொண்டைபின்சரியக்காலெழும்பிப் - போர்க்கலவி .

யாட்டத்திற்சூதகமுமாகவெழுதிக்கழுவிற் - - *
போட்டவிதம்போலிருந்தபொங்கமே - வாட்டமுற - ௫௨௪.

மேர்டிவைத்தபெண்கமலமுன்கைபிடித்துக்கடைக்கண் *
நாடிவைத்தாளொன்றுநயம்பேசச் - சூடகக்கை - ௫௨௫.

தன்னைக்குவித்துத்தலைவன்றலையிலந்த - - *
மின்னையாள்தாடனஞ்செய்விந்தையோ - பின்னொருபால்

அம்பனையகண்ணியுமோராணுந்தலைமாறிச் - - *
சும்பனங்கள்செய்யுந்தொழில்விதமோ - சம்ப்ரமங்கள் ௫௨௭.

சொல்லமுடியாதுதூங்குமஞ்சத்தேறினேன் - - *
மெல்லவிழுங்கொப்பத்தில்வேழம்போல் - நல்லதங்கத் ௫௨௮.

(தாய்க்கிழவிவரவிட்டவரிசைகூறல்.)

தட்டிலேயாக்குவெள்ளித்தட்டிலேவெள்ளிலைப்பொற் *
பெட்டியிலேமல்லிகைப்பூபிச்சிப்பூ - வெட்டிவேர் ௫௨௯.

தந்தச்சிமிழிற்சவாதுசூர்ணப்பட்டைதனிற் - *
கெந்தபொடிபவளக்கிண்ணத்திற் - சந்தனங்கள் - ௫௩௰.

கூறுங்கிளிமொழியைக்கூடின்விடாயாறித் - - *
தேறும்பொழுதிலுண்ணச்சிற்றுண்டி - வேறுசில - ௫௩௧.

பூங்கானிற்பன்னீர்பிடிசெம்பிலேவெந்நீர் - - *
தேங்காய்முலையார்சிலபேர்கொண் - டாங்குவந்து ௫௩௨.

மாமிவரவிட்டவரிசையென்றுவைத்துநின்றார் - - - *
காமியவர்களைக்கண்காட்டினள் - சேமமணி - - ௫௩௩.

(படுக்கைசேர்ந்தமைகூறல்.)

வாசற்கதவடைத்தாள்மங்கைநல்லார்போனதற்பின் - *
பேசிக்குலைமிட்டுப்பேதைபோற் - கூசி - - ௫௩௪.

மதிவதனங்கோட்டிவளைதிருத்திநின்றாள் - - *
புதியமணவறைப்பெண்போல - மதரூபி - - ௫௩௫

ஷோகமேயென்பிராண ஸ்நேகியேதாங்காதென் - ※
மோகமேயென்றவளைமுந்திபிடித்-தேக - ௫௩௬.

சயனத்திருத்திமுகந்தன்னின்முகஞ்சேர்த்து - - ※
நயனத்தில்வைத்தேனயனம்-தயவுவரப் - ௫௩௭.

பேசிமலர்மல்லிகைவெர்பிச்சிமுடித்துக்கலவை - ※
பூசிச்சவ்வாதுபுனுகணிந்து-நேசம் - - - ௫௩௮.

பிடிக்கக்கொடுத்தாள்பிளவுதாம்பூலம் - - ※
மடித்துக்கொடுத்தாள்தன்வாயாற்-கடித்துக் - ௫௩௯.

கொடுத்தாள்சிலசுருளைக்கொஞ்சிமடிமீதிற் - - ※
படுத்தாள்புளகம்படைத்தேன்-எடுத்தணைத்துக் ௫௪௰.

(அனுபோகவகைகூறல்.)

கொங்கைமுகைபிடித்துக்கொவ்வைவாய்த்தேன்குடித்துச் ※
செங்கைகொடுநெகிழ்த்தேன்சேலைதனை-அங்கவளொன் ௫௪௧.

சோமனுரிந்தாள்துடைமேற்றுடைபோட்டாள் - ※
காமமொழுகவிட்டாள்காமியத்தைக்-காமக் - ௫௪௨.

கலைமுறையேயாலிங்கனங்களைந்துசெய்தோர் - ※
முலைசுவைத்துமற்றோர்முலையை-மெலநெருடிக் ௫௪௩.

கைம்மலமுண்டுகவுண்மாங்கனிசுவைத்து - - ※
மைவிழியிணைவைத்துவாங்கிநகம்-பையத் - ௫௪௪.

தலையழுத்தியுந்திதனின்மகரங்கீறிக் - - - ※
கலவைகழுத்தணைத்துக்கட்டி-நிலைமைபெறச் - ௫௪௫.

சாதிகுணங்குறிகள்தத்துவங்கள்தேர்ந்துசுக - - ※
மாதுபருவவகைகண்டு-சோதித் - - - ௫௪௬.

தறிந்துபதினைந்தமிர்தநிலையாராய்ந் - - - ※
திறங்குமிடமேறுமிடங்கண்-டறிந்துவிஷ - ௫௪௭.

ஸ்தானமகற்றியுள்ளந்தாளைவருடியின்ப - - ※
மானவிரல்சுவைத்துள்ளந்தாங்கத்-தேனிருல் - ௫௪௮.

மெல்லமெல்லநீவிவிரல்கொண்டுசுற்றியந்த - ※
வல்லிமேலென்கண்வரிசிலையிற்-சொல்லும் - ௫௪௯.

அகாரஉகாரஎகாரஐகார - - - - ✻
இகாரக்கணைகளைவைத்தெய்து-மகாசுகநீர் - ௫௫௰.

பாய்ந்தொழுகச்சேர்ந்தணையிற்பஞ்சகரணத்தினின்மல் ✻
லாந்தகரணமுதலாங்கரணம்-வாய்ந்தமகிழ் - ௫௫௧.

அந்தக்கரணமவட்குமெனக்குமொன்றாய் - - ✻
முந்தக்கலவிப்போர்மூளவே-சந்தனப்பொற் ௫௫௨.

குங்குமகும்பகுடங்களைவென்றத - - ✻
னங்கள்புயங்கள்ததும்பிரு-முங்கிட - ௫௫௩.

மங்கைகுறங்கென்மருங்கினெருங்கவெ - - ✻
னங்கைநகங்களழுந்தம-யங்கி - - ௫௫௪.

அணைந்துகுழைந்துமெயன்றிலிரண்டு - - ✻
பிணைந்தவிதங்கள்பிணைந்து-மணங்கமழ் - ௫௫௫.

ஆகமுமாகமுமாவியுமாவியும் - - - ✻
மோகமுமோகமுமூரலும்-ஆகவோர் - - ௫௫௬.

எட்டுடனெட்டையிரட்டிசெயத்தொகை - ✻
ரட்டிசெய்திட்டவகைத்தொழில்-இஷ்டமுடன் ௫௫௭.

கண்ணாடியல்ரதியுங்காமனுங்கற்கின்றதெனக் - ✻
கண்ணாடியிலொருபாற்காண்பிக்கப்-பெண்ணரசி ௫௫௮.

தண்டரளப்பூண்மார்புதாங்கியுபரதியில் - ✻
மண்டலம்போன்முன்னிருத்தி வார்குழன்மேல்-வண்டெழுந்

சங்கீதம்பாட ஸ்தனங்கள்தாளம்போடச் - - [து
செங்கனிவாய்மென்குதலைத்தீங்குழல்போற்-பொங்கமுற

மங்கைநல்லாளாயிரக்கான்மண்டபத்திலாடினள்போல் ✻
அங்குமொருமன்மதக்கூத்தாடினள்-பைங்குழலாள் ௫௬௧.

கற்றகலைக்கூத்துங்காட்டிவலசாரி - - ✻
சுற்றியிடசாரிசுற்றினுள்-மற்றுமந்தப் - - ௫௬௨.

பைந்தொடிக்கைத்தாடனம்பளீல்பளீலென்றவிழக் ✻
கந்தமலர்க்கைவளைகலீலெனக்-கந்தரத்தில் ௫௬௩.

ஒன்றுகுருகுவெனவொன்றுகுமுகுமெனா - - ※
ஒன்றுகுங்குங்கென்னவோசைதரக்-குன்றாத - ௫௬௪.

புள்ளொலியெட்டுங்குமுறப்போதாக்குறைக்குவித்தைக் ※
கள்ளிநொடிப்பின்வகைகைநொடித்தாள்-மெள்ளமத ௫௬௫.

ஏடத்தில்வைத்தேன்பெருங்காமவாரிதியில் - - ※
ஓடத்தில்வைத்தமயிலொப்பாளுள்-கூடுகின்ற ௫௬௬.

மின்னனையாள்தன்னறிவுமெய்யும்புதுமருளும் - ※
சுன்னதமும்போன்மருங்குதள்ளாடச்-சின்னபின்னக் ௫௬௭.

கோவைவடந்திருத்திக்கூந்தல்புறத்தொதுக்கி - - ※
வேர்வைவழித்துமெள்ளவீசியே-காரிகையை - ௫௬௮.

முத்தமிடவொட்டாதமூக்குத்தியைக்கழற்றி - - ※
முத்தமிட்டேன்மெச்சியென்னைமுத்தமிட்டாள்-முத்தையன்

ஆமடாகொங்கைகளுக்கைந்துகிரும்வைத்தக்கால் - ※
நாமடாமன்மதநன்னூல்படித்த-சாமி - - ௫௭௦.

இறுகிறுகுசம்பமெனவினியமொழிகுழறவிள - - ※
முறுவலதுவெளிறமுலைமுனைபருக-மறுகுகொடி ௫௭௧.

யிடைதுவளநுதனெளியவிலகுமிதழ்பதறவிரு - ※
துடைகள்படபடெனவருசுகசலதி-கடலுடைத்துக் ௫௭௨.

கொண்டபெருக்கென்னக்குபீலென்றுபாயவதில் - ※
ஒண்டொடியுநானுமுருவிலியும்-தண்டாத - ௫௭௩.

மெத்தையுங்கைநீர்சுமிதப்புமாகச்சோப - - ※
நித்திரைபோய்ச்சற்றேநினைவுவந்து-தத்தரமாய் ௫௭௪.

என்கலையைச்சுற்றியிடுக்கிமுகங்கோட்டிப் - - ※
பொன்கதவைத்தள்ளிப்புறப்பட்டாள்-முன்புசெலும் ௫௭௫.

மோகினிபின்செல்லுமுனிபோலயான்சென்றே - ※
போகநீர்ப்பன்னீராற்போக்கியே-நாகரிக - ௫௭௬.

மங்கையுடன்திரும்பிவந்தேன்மலரணையிற் - - ※
செங்கைவளைநெரிந்துசிந்தியதும்-அங்கவிழ்ந்த ௫௭௭.

மாலையொருபக்கம்வதங்கிக்கிடந்ததும்பொன் - - *
மேலையொருபக்கமொதுங்கியதும் - கோலமுத்தம் ருஎஅ.

சிந்தியதுஞ்செம்பவளஞ்சிந்தியதுங்கண்டேயென் *
சிந்தையறிவையங்கேசிந்தினேன்-வந்திருந்த - ருஎகூ.

குன்றைப்பொருதமுலைக்கொஞ்சுமொழிக்கிஞ்சுகவாய் *
மன்றற்குழலிமருசார்ந்தேன்-என்றலையைச் - ருஅய.

(மதனாபிஷேகந்தன்னைப்புகழ்ந்தமைகூறல்.)

சுற்றிக்கிரணத்தொடிவளைக்கையாற்றனது - - *
நெற்றிக்கொருபொனெரித்திட்டாள்-கற்றதொழில் ருஅக.

காட்டினீராயாவென்கண்டிஷ்டிபட்டுதின்பம் - *
பூட்டினீர்கண்டேன்புருஷிகையும்-நாட்டிலே - ருஅஉ.

உங்களைப்போலேகலவிக்குத்தரிக்கவல்லவர்யார் - *
இங்குவரக்காணேனிதுவரைக்கும்-தங்காத - ருஅ௩.

கோழிப்போகக்காரர்கோட்டைவாசற்காரர் - *
சூழத்திரிவார்தொடருவார்-பாழுமிவார் - - ருஅச.

தன்போகமுந்திவிட்டுத்தப்புவரோயல்லாமல் - *
என்போகமுந்துவிப்பாரில்லையே-அன்பரோ - ருஅரு.

ஆணெல்லாமும்மைப்போலாகுமோமுருங்கைத் - *
தூணெல்லாநல்வயிரத்தூணாமோ-வீணே - ருஅசு.

முருக்கமலரார்தான்முடிப்பார்முடித்தால் - - *
மருக்கொழுந்தின்வாசம்வருமோ-ஒருத்தர்முகம் ருஅஎ.

பாரோனினியெனக்குப்பள்ளியறைமாப்பிள்ளையும் - *
நீரோசரியென்றாள்நேசம்போல்-காரானைக் - ருஅஅ.

(புணர்ச்சிவருத்தம்போக்கினமைகூறல்.)

கூட்டுங்கவளம்போலுண்ணக்கனிகொடுத்தாள் - - *
கோட்டுங்குழலிகுழம்புப்பால்-நாட்டம் - - ருஅகூ.

விரும்பக்கொடுத்தாளரம்பின்னொளசரக் - - *
கரும்பைப்போலேருசிக்கக்காணேன்-திரும்ப - ருகூய.

நடந்தகலவிசொல்லநாளுநாள்செல்லும் - - - *
விடிந்துதயமெய்தினன்வெய்யோன் - மடந்தைநல்லாள்

(விடிந்தபின்தன்செய்திகூறல்.)

மேலிலங்குமஞ்சள்பட்டுவெண்பூணூல்பொன்பூணூல் - *
போலிலங்கக்கண்டுமனம்பூரித்தேன் - சால - - ௫௯௨.

அழுந்துநகக்குறியையாடவர்கண்டேங்கச் - - *
செழுந்திரைநீர்வையையில்யான்சென்றேன்தொழுங்குலத்து

நானவண்மேலாசையினாலுருவியென்றுகுப்பை - - *
மேனிபிடுங்கிப்பல்விளக்கினேன் - மோனமந்த்ர - ௫௯௪.

தர்ப்பணத்தைநீக்கித்தலைமுழுகினேன்கலவி - - *
யுற்பனத்தையெண்ணியுருச்செபித்தேன் - பொற்புடைய

மாயஸ்திரியைவிட்டுவந்துநெடுநேரமென்று - - *
காயத்திரியைவிட்டேன்கர்மிபோல் - தூயமணி - ௫௯௬.

தூவுதிரைவையையிலோர்சோமன்மறந்தேன்முன் - - *
காவிரியிற்போட்டகலக்கம்போல் - தீவிரமாய்ப் - ௫௯௭.

போனேனவண்மனையிற்பொற்கொடியாள்சொற்படியோர்
மாணுளையழைத்துவாருமென்று - மீனாக்ஷி - ௫௯௮.

யாயிவீட்டிற்சமையலாச்சுதுபோமென்றாள்நான் - - *
போயிருந்துசாப்பிட்டேன்போசனத்திற் - காய்கறிகள் ௫௯௯

இன்னதெனவறியேனின்னரசமென்றறியேன் - - - *
கன்னிமேல்வைத்தகவனத்தால் - என்னுடைய - ௬௱.

கையிரமாறுமுன்னேகாதலியைவந்தணைந்து - *
சையோகவைபோகசம்போக - மெய்போகம் - ௬௱௧.

ஆகச்சுகித்தேனகப்பட்டேன்பாய்மரத்திற் - *
காகத்தையொத்தேனென்காதலால் - மோகவலைப் ௬௱௨.

(தாய்க்கிழவிமருந்துகூட்டத்தொடங்கினமைகூறல்.)

பூட்டுக்குளானேனைப்போழ்வாய்ச்சிகைம்மருந்துக் *
கூட்டுக்குளேயடைக்கக்கோப்பிட்டாள் - காட்டு ௬௱௩.

(வனமூலிகைசேர்த்தமைகூறல்.)

மருந்துவகைநாவடக்கிவாதமடக்கி - - - *
கருந்துவரைபாடவரைகஞ்சா-பெருந்தும்பை - கா௱௪.

ஆதளைமேற்புல்லுருவியாவிரைமேற்புல்லுருவி - *
மாதளைமேற்புல்லுருவிவல்லாரை-தூதுவளை - கா௱௫.

பேய்ப்பீர்க்குப்பேய்முசுட்டைபேய்ச்சிமிட்டிபேய்ப்புட
நாய்ப்பாகனுயுருவிநாய்வேளை-நாய்க்கோட்டான்கா௱௬ [லை

புன்னைப்பூவன்னிப்பூபூளைப்பூதாழைப்பூ - - *
முன்னைப்பூமாம்பூமுருக்கம்பூ-சின்னிப்பூ - கா௱௭.

பூலாவேர்சங்கம்வேர்புங்கம்வேர்தைவளைவேர் - *
வேலாவேர்நெட்டிவேர்வெட்டிவேர்-பாலைவேர் கா௱௮.

அத்திக்காய்துத்திக்காயல்லிக்காய்நெல்லிக்காய் - *
கத்திரிக்காய்பேய்ச்சுரைக்காய்காஞ்சிரங்காய்-மதீதங்காய் .

நின்றுசிணுங்கிநிலம்புரண்டியாலின்கீழ்க் - - *
கன்றுபணமுறுஞ்சிகாஞ்சோறி-குன்றியிலை - கா௱௰.

பின்றொடரிமுன்றொடரிபெண்டொடரியாண்டொடரி *
பொன்றொடரியைவாய்புலிதொடரி-இன்பூறல் கா௱௰௧.

ஆனைவணங்கியழுகண்ணிதொழுகண்ணி - - *
பூனைவணங்கிபுளிமடலை-உளறு - - கா௱௰௨.

தலைசுருளிநன்னாரிதான்றிவெள்ளைத்தோன்றி - - *
மலைகலக்கிதேள்கொடுக்குவாலை-யிலைகருநா -கா௱௰௩.

ரத்தங்காய்ப்பிஞ்சுதமரத்தம்பூப்பிஞ்சுமலை - - *
நத்தைச்சூரிக்கொழுந்துநாட்டகத்தி-சிற்றகத்தி கா௱௰௪.

தோதகத்திபட்டநரைத்தோதகத்திபஞ்சமா - - *
பாதகத்திசூரியனைப்பாம்பணையும்-போதிற் - கா௱௰௫.

(கடைச்சரக்குச்சேர்த்தமைகூறல்.)

கருத்துவகையாய்த்தேடிக்கட்டிக்கடையில் - - - *
மருத்துவகைகஸ்தூரிமஞ்சள்-அரைத்தசித்ர - கா௱௰௬.

மூலஞ்செவிட்டாதிமூலங்கடையினிற்றக் - - *
கோலந்தாம்பூலங்குமோசாணி-எலம்வெலி - - ௩௱௰௭.

காரஞ்சீனக்காரங்கர்ப்பூரசாரமரி - - - *
தாரநவாசாரஞ்சவுக்காரம்-காரியம் - - ௩௱௰௮.

துத்தந்துரிசுதுருசாவசப்படுத்தும் - - - *
கொத்தமல்லிவாய்விளங்கங்குங்குமப்பூ-மூத்தக்கா ௩௱௰௯.

செட்டுப்பணைவிடையிற்றுப்புவெடிவாணவுப்புக் - *
கட்டுப்புவீட்டிற்கறியுப்பு-மட்டிப்பால் - - ௩௱௨௰.

இஞ்சிலவங்கமிதன்பத்ரிசிங்களத்தோர் - - *
கஞ்சியிலேபோடுங்கசகசா-மஞ்சள் - - ௩௱௨௰௧.

அதிமதுரமாசையதிமதுரமாக்கும் - - - *
சதகுப்பிசாதிக்காய்சாபத்ரி-அதிவிடயம் - - ௩௨௨.

பாக்குச்சிறுதேக்குப்பாஷாணம்வேப்பம்புன் - *
னாக்குதிருவிஷ்முள்ளாவியும்புன்-னாக்குபச்சை - ௩௨௩.

தாவிடபிணிமுதனுமுழநானுமூலப் - - - *
பாவிசவதரித்துப்பாரினுள்ள-சீவன் - - ௩௱௨௰௪.

(பிராணிகளினுறுப்புகள்சேர்த்தமைகூறல்.)

மருந்துவகைசெவ்வரணைவாலாந்தைப்பிச்சு - - *
பருந்துநகமுதலைப்பல்லு-குரங்கிந் - - ௩௨௫.

திரியமரவட்டைசெவ்வட்டைபெட்டை - - - *
நரிமுதுகுத்தோலுடும்புநாக்கு-குருகு - - ௩௨௬.

முனைவாய்கருஞ்சேவன்முள்ளுவெள்ளைப்பல்லி - *
சினைவலியாண்காடைச்சிறகு-பனையடியிற் - ௩௨௭.

குன்றன்கண்வாகைமேற்கூகைகீழ்வாயலகு - - *
செந்நாய்ப்பவளவாய்த்தேவாங்கு-கன்னம் - ௩௨௮.

வலிபாண்கழுத்துமணிக்காடைமுட்டை - - *
யெலிமூளைபன்றியிறைச்சி-புலிமீசை - ௩௨௯.

வல்லூற்றுவல்லெலும்புமாடப்புறாவினெச்சம் - - *
கல்லூரிக்கொம்புகவரிமயிர்-நல்லபாம் - - ௩௱௩௰.

மூரறலைமூந்றெருமையிளங்கொடிசெம் - - *
பூரமூசாற்புழுக்கைபுற்றின்மேல்-தேனாக்கால் - ௩௱௰௧.

தூக்கணெண்குஞ்சுகுழல்வண்டுநண்டுகருங் - - *
காக்கைதினங்காராக்கருமூலைப்பால்-நாக்குப் - ௩௱௰௨.

புழுப்பூனைப்பீசம்பொலிப்புக்கடாவின் - *
கொழுப்புப்பெருச்சாளிக்குட்டி-பழுத்தமர - ௩௱௰௩.

வவ்வாற்றலைகுதிரைவாயினுரைகரடிச் - - *
சவ்வுகிழவானைமதஞ்சங்கினூன்-நவ்விரத்தம் - - ௩௱௰௪.

கன்னிகழியாதபிள்ளைகாதிற்சிறுகுறும்பி - - *
தன்னையறியாள்தலையிற்பேன்-சின்னவட்டை - ௩௱௰௫.

வாற்குருவிச்சந்தெலும்புவாளம்பாடிக்குடலுள் - *
ளூர்க்குருவிக்கொக்கரைதன்னூருக்கு-மேற்குக் - ௩௱௰௬.

கரட்டோரித்தொண்டைகரட்டோந்திமண்டை - - *
வரட்டோரிதேடிவகையால்-நிறுத்து - - ௩௱௰௭.

(மருந்துகூட்டினமைகூறல்.)

வணமருந்தெல்லாந்தயிலம்வாங்கிக்கடையிற் - - *
கனமருந்தெல்லாம்பேய்க்கரும்பு-தனில்வடித்த - ௩௱௰௮.

சாற்றிலரைத்துத்தசைபூனைத்தாழியிலே - - *
யூற்றியசாராயத்திலூறவைத்துச்-சோற்றடுப்பிற் ௩௱௰௯.

செம்பிப்புதைத்துமறுநிங்களிலெல்லாமருந்தும் - *
அம்மியிலேயிட்டுமகளல்குலினீர்-செம்மைதரும் ௩௱௨௰.

நாக்கிலழுக்குநகத்தழுக்குக்காலடிமண் - - *
மூக்கில்வெயர்வும்விட்டுமூன்றுநாள்-தாய்க்கிழவி ௩௱௨௰௧.

(ஔஷதப்பிரயோகஞ்செய்தமைகூறல்.)

மைப்போலரைத்துருட்டிமங்கைநல்லாயிந்தவுண்டை - *
தப்பாதெனக்கொடுத்தாள்சர்ப்பனையால்-அப்பளத்தில்

(மதிமயக்கமிகுந்தமைகூறல்.)

இட்டாள்பழத்திலேயிட்டாள்கண்ணாடியிலே - - *
இட்டாள்மதிமயக்கமெய்த்தேனன்-விட்டிருக்கக் - ௩௱௨௰௩.

கூடாதுகண்ணுறக்கங்கொள்ளாதுசாப்பாட்டைத் ✻
தேடாதுவேறுமனஞ்செல்லாது-பேடனையாள் - ௪௪௪.

மோகசமுத்திரத்தில்மூழ்குவதல்லாதுபிர - - ✻
வாகநதியைமறந்துவிட்டேன்-மோகனஞ்செய் ௪௪௫.

சித்தசனன்மந்த்ரகலைதேர்ந்தறிவதல்லாது - - ✻
நித்யசெபமந்திரத்தைநீக்கினேன்-தத்துவரிக் - ௪௪௬.

கண்ணிசெயுமோடிக்குக்கால்பிடிப்பதல்லாது - - ✻
புண்யநம ஸ்காரங்கள்போட்டுவிட்டேன்-பெண்ணணங்கின்

செங்களபக்கொங்கைதெரிசினமல்லாதுசிவ - - ✻
லிங்கதெரிசினத்தைநீக்கினேன்-அங்கசவேள் - ௪௪௮.

மாபூசைவேளையவள்வாயமிர்தமுண்பதல்லால் - ✻
தேபூசைமேற்கவனந்தீர்ந்துவிட்டேன்-சோபமுற்ற௪௪௯.

(வஞ்சிக்கஉபாயஞ்செய்தமைகூறல்.)

நாட்டமறிந்தென்னைநகைக்கிழவிமெல்லவொரு - - ✻
பூட்டகந்தான்பேசினாள்பொன்பறிக்கத்-தாஷ்டிகமோ௪௫௰.

ஆடித்திருநாளழகருக்கின்றுகுதந்த - - - ✻
வேடிக்கைபார்க்கவெகுசனங்கள்-கூடியே - ௪௫௧.

செல்கின்றார்நீங்களும்போய்த்தீர்த்தத்திலாடிவந்தால் ✻
நல்லபலனெங்களுக்குநண்ணுமேதா-கல்வியோர் - ௪௫௨.

என்றாளவ்வார்த்தைக்கிருந்தாலறிவிலியாம் - - ✻
சென்றாலுமங்கைமேற்றேட்டமாம்-என்றுசெழுந் ௪௫௩.

தேனேமதனுபிஷேகமேநீவருவை - - - ✻
யானாற்றிருநாட்கழகென்றேன்-நானுமும்மைக் ௪௫௪.

(திருவிழாவுக்குச்சென்றமைகூறல்.)

காணாதிருந்தாலென்கண்ணுறங்குமோவென்று - ✻
பூணார்முலையாள்புறப்பட்டாள்-பாணிப்பாய் - ௪௫௫.

பித்தளையினாலுடைமைபெண்ணுக்குப்பூட்டிவாட் - ✻
டத்தைதொடர்ந்தாளடிப்பிறகே-பத்துப்பேர் - ௪௫௬.

பாங்கியருமின்றிவரும்பாவையுடன்சென்றழகர் - ❊
ஓங்குமலைத்தீர்த்தமுவந்தாடிப்-பூங்குழலாய் - - ௯௫௭.

மானுங்கலையுநரைமந்தியும்போலேயிறங்கித் - - ❊
தேனுந்துபூந்துளபச்செங்கண்மால்-தானேறும் ௯௫௮.

தேருக்குப்பின்னாகச்சென்றேமோர்பாணவிசைத் - ❊
தூரத்தேஞாளியையன்தோன்றினான்-தேருக்குப் ௯௫௯.

பக்கத்திலேயொதுங்கிப்பாந்தினேனப்புறத்தோர் - ❊
தக்கமறையோன்மனையிற்றங்கினேன்-கக்கத்தில் - ௯௬௦.

தூக்கிட்டதோசைச்சுமையுமடிதனிலே - ❊
பாக்கிட்டகைவாளப்பையுமாத்-தாய்க்கிழவி - ௯௬௧.

மாதைத்தொடர்ந்துவரமங்கையெனைப்பின்தொடரப் - ❊
பாதைவழிகொண்டேன்பரிசுடனே-பாதை - ௯௬௨.

(திரும்பிவருகையில்மோசம்செய்தமைகூறல்.)

அரைநாழிகைக்கப்பாலத்தைகுறுகி - - - ❊
வரைமாமுலையாய்மறந்தேன்-சரிகையிட்ட - ௯௬௩.

சேலையென்றோடித்திரும்புகிறேனில்லுமென்று - ❊
வாலியப்பெண்மேலென்மனங்கிடக்கக்-காலிற் - ௯௬௪.

கடுமையுளவோட்டமெல்லாங்காட்டினேனென்பின் - ❊
குடியிலேதட்டக்குதிக்கால்-விடுதியிற்போய் - ௯௬௫.

மீளுமுன்னமங்கையிட்டவெற்றுடைமையைக்கழற்றிப் - ❊
பிள்ளைதள்ளுங்கண்ணிபிழைகேடி-ஆளுடனே. - ௯௬௬.

போனாள்மதுரைக்குப்போய்த்துகிலைநானெடுத்து - ❊
மானைத்தேடிவரும்வேளை-தேனனையாள் - - ௯௬௭.

ஊரின்முருங்கையுருவியகோல்போனின்றாள் - - ❊
மாரியெனக்கண்ணீர்வழிந்தோடக்-காரிகையே - ௯௬௮.

என்னென்றேன்விம்மிவிம்மியேக்கம்போனாக்குழறி - - ❊
முன்னின்றுமெள்ளமொழியலுற்றாள்-அன்னை - ௯௬௯.

வருவார்நம்மையர்வழியிற்பறியார் - - - ❊
திருநாட்சனத்துடனேசெல்வோம்-அரிவையே - ௯௭௦.

வாவென்றாள்விட்டுவரமாட்டேனணீபயந்தாற் - *
போவென்றேன்கோபமாய்ப்போயினாள் - கூவென்றாற்

கேள்வியுண்டோவந்தான்கிழவனொருவனையா - *
போழ்வாய்நரைத்தலையன்பூண்கட்டு - நீளத் - ருஎஉ.

தடிக்கொம்புக்காரன்தனிவழியிலென்னை - - *
அடித்துப்பறித்தானகன்றான் - திடுக்கிட்டேன் - ருஎ௩.

என்றானைத்தேற்றியதற்கென்னமேனுன்னதிர்ஷ்டம் - *
ஒன்றுமேலக்ஷமுடைமையாம் - நின்று - - ருஎச.

வருந்தாதேயென்றுமதுரைக்குவந்து - - *
திருந்திழையாள்வீட்டிலேசென்றேன் - மருந்துருட்டி ருஎரு.

அங்கேவந்தாள்மகளையாவலாய்ப்பார்த்துடைமை *
எங்கேயென்றாள்பறிபோச்சென்றுரைத்தாள் - செங்கை •

(தாய்க்கிழவிபொய்ப்புலம்பல்கூறல்.)

நெரித்தாள்பதறிநெரித்நகையைவிட்டுப் - - *
பிரித்தாள்வயிற்றைப்பிசைந்தாள் - ஒருத்தருமில் - ருஎஎ.

லாதவிடத்துடைமைக்காசையாயுன்னுயிரைச் - *
சேதப்படுத்திலென்னசெய்வேனுன் - பேதை - ருஎஅ.

மகளேயெனக்கதறிவாய்விட்டழுது - - *
வெகுவாய்ப்பரதவித்துவிம்மி - நகைகளெல்லாம் ருஎகூ.

போச்சுதேகோயிலுக்குப்போகவரத்தடையொன் *
றாச்சுதேயூருமறிந்ததே - வச்சொன்று - ருஅ௦.

வந்ததேபண்ணிமறித்துமிடக்காசுபணம் - - - *
சிந்துதோகண்டேனுன்தேட்டைநான் - வந்தடித்துக் ருஅக.

கள்ளர்பறித்தநகைகைக்குவருமோவுடைமை - *
உள்ளதெல்லாம்ரத்நவுடைமையே - அள்ளியள்ளி ருஅஉ.

எண்ணியிட்டசெம்பொனிருநூறுநான்கொடுத்துப் - *
பண்ணியிட்டகொப்புமபறிபோச்சோ - புண்ணியவான்

திக்கடையவெற்றிகொண்டசிந்தமகூளேந்த்ரனிட்ட *
கைக்கடகம்போலுமினிக்காண்பேனோ - விக்ரமகோ ருஅச.

தண்டசரபாணி துரைச்சாமராயன்கொடுத்த - *
கண்டசரமேனிவட்குக்காட்டினேன் - அண்டலரை ௱௮௫.

வெட்டியவாள்வீரன்விருபாக்ஷியான்கொடுத்த *
ஒட்டியாணம்போலவுண்டாமோ - சிட்டர்புகழ் ௱௮௬.

ஆணிக்கனகநிதியப்புராயன்கொடுத்த - - - *
மாணிக்கமாலையைப்போல்வாய்க்குமோ - வாணர்புகழ் ௱௮௭

அம்மைராயன்கொடுத்தவாணிமுத்துத்தாழ்வடத்தைக் *
கொம்மைமுலையாட்கேன்கொடுத்தேனோ - நம்முடைய

வல்லக்கொண்டையனருள்வச்ரக்கணையாழிக் - *
கல்லுக்கொருவர்விலைகாண்பாரோ - வல்லிசெய்த ௱௮௮.

இன்னரிப்பாட்டுக்குக்கெடிக்காமையன்கொடுத்த - *
பொன்னரைஞாண்போற்கிடைக்கப்போகுதோ - மன்னர்புக
[ழ் ௱௯௰

கச்சுமுலையாளுக்குக்காளிங்கன்முன்கொடுத்த - *
பொற்சிமிக்கிப்போற்கிடைக்கப்போகுதோ - குச்சிலியக்

கெங்காசிராவளித்தகெம்பிழைத்தமோதிரம்போல் *
இங்கார்கொடுப்பார்சொலேந்திழையே - மங்கைபுரி ௱௯௨.

நாட்டியத்தைக்கண்டுமெச்சிநத்தத்துலிங்கேந்த்ரன் *
போட்டகொலுசெண்ணூறு பொன்பெறுமோ - வாட்டமில்
[லாக் ௱௯௩.

கோகனகவதனன்கோபாலராயனருள் - - *
மோகனப்பொன்மாலைமுற்றுமோகனமே - போகத் ௱௯௪.

திருமலைக்கண்டமன்னன்றந்தருள்சிந்தாக்கை - *
இருமுலையாட்கேன்கழுத்திலிட்டேன் - கருணைநிதி ௱௯௫.

பூசாரிராயனிட்டபொற்சவளிபோலவுமோர் - *
ஆசாரியன்னவறிவானோ - தேசமெச்சும் - ௱௯௬.

போடிமகிபன்கொடுத்தபொற்சுட்டிகட்டிவிட்டுப் - *
போடியென்றேனென்னமதிபோனேன்யான் - தாடகையை

அம்பிற்பொருராமபத்ர துரையன்றுதந்த - *
தும்பிப்பதக்கவிலைசொற்பமோ-சொம்புபெறும் ௬௯௮

நாடகத்தைக்கண்டுமெச்சிநம்முத்தையனளித்த - *
பாடகத்தைக்கண்டாற்பசிபோமே-நாடுபுகழ் - ௬௯௯

தொட்டராயன்கொடுத்தசோடுவச்ரவோலையும்பொற் *
பட்டையனாருணும்விலைபண்ணுவதோ-வெட்டுகின்ற ௭௱.

வாருலவுஞ்செங்கண்மடந்தைபொட்டுக்காறையெந்த - *
ஈருவன்வீட்டிலிருக்குதோ-தாளவட்டப் - ௭௱௧.

பூணார்முலையாட்குப்போட்டவெள்ளித்தண்டையெந்தச் *
சாணானவரவிற்போய்ச்சார்ந்ததோ-வீணையென் ௭௱௨.

மாணாளைக்கொள்ளைகொண்டோன்வச்ரமுருகையெந்தக் - *
கோணான்றன்கையிற்கொடுத்தானோ-ஆணாலும் - ௭௱௩.

மூவைந்தாம்பாட்டிகண்டமூக்குத்தளுக்கையென்ன - *
பூவென்றெங்கேயெறிந்தும்போட்டானோ-பாவைநல்லாய்

என்னசெய்வோநாமினிமேலென்றென்கிழவியையும் - *
கன்னியையுந்தேற்றிக்கணக்கேற்றி-அந்நேரம் - ௭௱௫

(அணிசெய்திட்டமைகூறல்.)

ஐயாயிரம்பொன்னவல்போலப்பார்வையிட்டுக் - - *
கையாரத்தட்டான்கடையிலிட்டுச்-செய்த - ௭௱௬

உடைமையெல்லாமந்தவுருப்படியேயிட்டு - - *
வடிவையெல்லாம்பார்த்துமகிழ்ந்தேன்-கொடியிடையை

மஞ்சத்திற்கூடிமகிழ்ந்திருக்கும்போதொருநாள் - - *
பஞ்சொத்தகூந்தலாள்பையவந்து-வஞ்சியே - ௭௱௮

கோயிலுக்குப்போவென்றாள்கோடியில்லைசேலையெல்லாம்
சாயமில்லையென்றுசலிப்பானாள்-பேயே - ௭௱௯

பிறந்தவூருக்குப்புடவையேனம்மை - - *
அறிந்தவரேயல்லான்மற்றூர்காணார்-நறுங்குழலாய் ௭௱௰.

பொன்னின்குடத்துக்குப்பொட்டிடலேன்போவென்றாள்*
அந்நேரமாதையழைத்துப்போய்-நன்னிசெட்டி ௭௱௰௧

(ஆடைவாங்கிக்கொடுத்தமைகூறல்.)

கட்டுவர்க்கச்சேலைக்கடையிலிடைக்கிசைந்த - - *
பட்டுவர்க்கம்பார்த்துப்பளபளப்பாம்-மட்டுவர்க்கப்

பாவாடையிட்டமொழிப்பாவைக்குப்பொன்ராவிக்கை *
பாவாடைவர்க்கம்பதினாறு-மேவியிரு - - எாயரு.

செப்புவர்ணப்பூமுலைக்குப்செம்பருத்திப்பூநிறத்துக் *
கொப்புவர்ணமாய்த்திர்ந்தகோப்புவர்ணம்-இப்புவியில்

ஆதிவர்ணம்போலுமழகுடையாளுக்கிசைந்த - - *
வீதிவர்ணச்சேலையொன்றுவிற்தையாம்-வாதுமத எாயசு.

பாணத்தார்க்கூந்தற்பவளவாய்ப்பைந்தொடிக்கு - *
வாணத்தார்ச்சேலவகைமூன்று-வேணுமணி - எாயஎ.

முத்துவர்ணமூரனல்லாள்மூலைக்குள்வைத்துடுக்க - *
முத்துவர்ணச்சேலையிலேமூன்றுவகை-வைத்தநிருச்எாயஅ.

சூரணவர்ணத்திலகுசுட்டிநுதலாட்கிசைந்த - - *
நாரணவர்ணச்சேலநாலைந்து-போரிற் - எாயக

படைமுறிச்சுக்குத்தியகட்பாவையாள்கட்ட - *
உடைமுறிச்சுக்குத்தியிலேயொன்று-தொடையல் எாயக.

சொருகுமணிக்குழலாள்சோடிணையாக்கட்ட - - *
அருகுமணிச்சேலையிலேயஞ்சு-பிரிவுகொண்டு எாஉய.

செல்லாச்சேலைப்பொருங்கட்சேயிழையாள்கட்டநல்ல *
சல்லாச்சேலைத்தரமாய்த்தானிரண்டு-மெல்லமெல்ல எஉக.

வாளெழுத்தோளாடவாமாலழுத்துவாளுடுக்க - *
ஆளெழுத்துச்சேலையிலேயாறேழு-நீளெழில்சேர் எஉஉ.

சுந்தரத்தோண்மங்கைக்குத்தொட்டிழுத்துக்கட்டநல்ல *
சந்திரகாந்தக்கச்சுதானைந்து-அந்தரத்தில் - எஉங.

இந்திரகாவிற்குலவுரம்பையனையாட்கிசையச் - *
சந்திரகாவிச்சேலைதானிரண்டு-சிந்துமழை - எஉச.

மாரிக்கொடிமின்மருங்கிற்கிணங்கியகல் - - *
ஜாரிக்கொடிச்சேலைசோடிரண்டு-காரிகைக்குக் - எஉரு.

காங்குசரிகைச்சேலைகம்பாவரித்துகில்பட் - - *
டாங்குகம்பிச்சேலையனைவர்ணம் - தாங்குசிலம் - ௭௨௬.

பெச்சரிகையென்னுமிடைக்குச்சரியிதென்றற் - *
குச்சரிகைவர்க்கமெல்லாங்கொண்டுவந்தேன் - உச்சிதமாத்

தாய்க்கிழவிகேட்டாள்தனக்கிரண்டுசேலையந்தப் - *
பேய்க்குதவாவிட்டாற்பிழைப்பேது - பாக்களந்த ௭௨௮.

(பலவகைக்கடன்றீர்த்தமைகூறல்.)

வன்னியென்றும்பாலளந்தமாரியென்றுநெய்யளந்த *
சின்னியென்றுநெல்லளந்தசெல்லியென்றும் - எந்நேரம்

வைவதுவும்போவதுவும்வாசலிமேலநின்றலம்பல் - *
செய்வதுவும்போலிட்டாள்தித்திரிப்புக் - கைமேலா ௭௩௰.

அந்தக்கடன்காரர்க்கென்றேநானைம்பதுபொன் - *
இந்தக்கடன்காரிக்கீந்துவிட்டேன் - அந்திசந்தி ௭௩௧.

தாய்குடிக்கப்பெண்குடிக்கச்சாராயமூற்றிவெறிப் *
பேய்பிடிக்கவிட்டநெட்டைப்பிச்சிவந்து - ந்யாயமோ

தப்பறைக்காரியென்றுசண்டைக்குவாய்திறந்தாள் *
மூப்பதுபொன்போட்டுவாய்மூடிவிட்டேன் - செப்புமுலை

(தெய்வபூசைக்குக்கொடுத்தமைகூறல்.)

மங்கையயிற்றைவலிக்குதென்றுமார்க்கமிட்டாள் *
அங்கைதொட்டக்காலதிகமாகுதென்றாள் - எங்கள் ௭௩௪.

குலதெய்வம்பண்ணுதிந்தக்கோட்டாலையென்றாள் *
கலைகுலைத்துசோர்வதையுங்காணாள் - சிலைநுதலாய் ௭௩௫.

தெய்வகுறைக்கென்னசெய்யவேணுஞ்சொலென்றேன் *
கையிலரிவாளுங்கட்டளையாச் - செய்த - - ௭௩௬.

உருவேணும்பொற்குச்சுறுமாலைவேணும் - - *
இருகாலுக்குச்சிலம்புமீணுப் - புருவைகளும் - ௭௩௭.

செஞ்சேவலும்வேணுஞ்சேவிக்கும்பம்பைக்கோர் - *
அஞ்சாறுபொன்வேணுமாடிவாரக் - குஞ்சமிட்டுப் - ௭௩௮.

பூங்கப்பரையெடுத்துப்பூசையிடவேணுமென்றாள் *
ஆங்கப்படிக்கீந்தேனம்பதுபொன் - தாங்கருங்குன்ன ௭௬௯.

(தன்கையிருப்பைவைத்திருக்கக்கொடுத்தமைகூறல்.)

வாளைதாவுங்காதுமாதுநல்லாய்நான்கேட்ட - *
வேளைதாவென்றவடன்வீட்டிலே - ஆழாக்கு ௭௭௰.

முத்துவைத்துவைத்தேன்முடிப்பாவோராயிரம்பொன் *
வைத்துவைத்தேன்பின்னுமொருமாணிக்கம் - சித்திரக்காற்

(பின்னும்பலவிதத்தால்வஞ்சித்துப்பொருள்கவர்ந்தமைகூறல்.)

கட்டிலென்றுங்கட்டிலின்மேற்கட்டிசகலாத்தென்றும் *
வட்டிலென்றுஞ்சிப்புவகையென்றும் - கட்டுமட்டாம் ௭௭௨.

குத்துவிளக்கென்றுங்குடப்பாலெருமையென்றும் *
பத்தணையேயொன்றும்பசுக்களென்றும் - மெத்தையென்றும்

மச்சுவீடென்றுமனைக்குதிர்களென்றுமங்கை - *
மெச்சிவிளையாடிநிற்கமேடையென்றும் - கச்சிறுக்குங் ௭௭௪.

கொங்கைச்சிமிழ்மாதுகூடப்பிறந்தசின்ன - - *
தங்கச்சிக்கால்களுக்குத்தண்டையென்றும் - இங்கிதமாய்

ஆடவிட்டநட்டுவனார்க்கங்கியென்றுஞ்சங்கீதம் - *
பாடவிட்டபாடகற்குப்பாகையென்றும் - சேடியர்க்குக்

கம்பிகுறிச்சேலையென்றுங்காதோலையென்றும்வெள்ளித் *
தம்பிக்கையென்றுந்தபலையென்றும் - செம்பென்றும் ௭௭௭.

தங்கச்சிமிழிற்சவாதென்றுமாண்டியப்பன் - - *
கந்தபொடியென்றுங்கதம்பமென்றும் - சந்தனங்கள் ௭௭௮.

என்றுமாடிக்கழிவுக்கேற்றதென்றுந்தைப்பொங்கற் *
கென்றுஞ்சிவராத்திரிக்கென்றும் - நின்று - ௭௭௯.

தலைதடவிமூளைதனையுறிஞ்சுவார்போற் - - *
பலவிதமாயேய்ச்சுப்பசப்பிக் - கலவையணிந் ௭௮௰.

தோங்குமிளமுலையாளுனிருக்கவேயுயிரை - *
வாங்குவதுபோற்பொருளைவாங்கிவிட்டாள். சோங்கிலிட்டுக்

கட்டியசெம்பொன்னைக்கடலிற்கவிழ்த்ததுபோல் - *
ஒட்டொழியத்தோற்றுவிட்டேனுள்ளதெல்லாம்-இட்ட

மருந்தாலிருளுமருளுங்கொண்டாற்போல் - - *.
இருந்தேன்கொடுக்கவகையின்றி-உரிந்து - ௭௫௩

(விற்றிறுத்துவெறுங்கையனானமைகூறல்.)

கலைவிற்றேன்காதிற்கடுக்கனையும்விற்றேன் - - *
மெலிவுற்றேன்தாய்க்கிழவிவீட்டுச்-செலவுக்குத் ௭௫௪.

தத்தரமாக்கேட்டாள்தலைகவிழ்ந்துநான்திரும்பு - *
குத்துவலைதக்கண்டாள்குறிப்பறிந்தாள்-எத்தியென்னைத்

தாரைவிட்டவேல்விழியாள்தாய்க்கிழவிவார்த்தையைக்கேட்
டோவிட்டுப்போக்கவுபாயமிட்டாள்-சேரவென்றும் ௭௫௬

(துரத்தவகைதேடினமைகூறல்.)

மின்புறங்காட்டுஞ்சயனமேற்படுத்தாலென்புறத்திற் *
பின்புறங்காட்டிப்படுப்பாள்பேசாமல்-அன்புடனான் ௭௫௭.

செய்யாவுபசாரஞ்செய்யப்போனாலுமுழங் - *
கையாலிடிப்பாள்கடுகடுப்பாய்ப்-பையவே - ௭௫௮.

அன்னைவந்துதன்னையழைக்கச்செறுமுமந்த - - *
சன்னையறிந்தென்னைவிட்டேத்தானேகிப்-பொன்முடிப்பு

வாங்குவதுங்கூடுவதும்வந்தெனருகிற்படுத்துத் - *
தூங்குவதுமாகத்தொழிலெடுத்தாள்-பாங்கியரிற் ௭௬௰.

(மதனுபிஷேகம்தன்னைவசினமைகூறல்.)

கோப்புடையமாயக்குருவியைவிட்டுப்பழைய - *
மாப்பிள்ளைமார்தம்மைவரச்சொல்லிப்-பேய்ப்படுவாய் ௭௬௧.

அன்னியராய்வந்தாலருகிற்போய்நானிருந்தாற் - *
சன்னைதெரியாதோசவுங்கலே-என்னடா - - ௭௬௨.

போடாவெளியிற்புதுமண்டபத்திருந்து - - *
வாடாவெனச்சொலுவாள்மட்டுமிஞ்சி-ஓடியங்கள் ௭௬௩.

சொல்லத்தொடுத்தாள்துரத்திடினும்பூட்டியசெக் - *
கெல்லைவிட்டுப்போகாவெருதானேன்-மெல்ல ௭௬௪.

(தாய்மகளைஏசினமைகூறல்.)

மகளையழைத் துமருந் தூட்டிசொல்வாள் - - *
தகல்பாஜிப்பார்ப்பான்சதமோ-முகமாயம் - - ௱௬௫.

என்னசெய்தானீயவனுக்கேற்றவுடம்படிக்கை - - *
என்னசொன்னாய்பார்த்தவருக்கேற்குமோ-பின்னே ௱௬௬.

கொடுக்குமட்டும்வாங்கிக்கொடாதிருந்தால்விட்டு - *
முடுக்கல்லோவேசிமுறைமை-எடுப்பார்கைப் - ௱௬௭.

பிள்ளையோநீயுமென்னபேய்ப்பிள்ளாய்மாப்பிள்ளைமார் *
கள்ளரைப்போலேதிரியக்காரணமேன்-மெள்ளமெள்ள

ஓடங்கடக்கவிட்டாலோடக்காரன்றலையிற் - - *
போடுவதுசொட்டென்பார்பூதலத்தோர்-வாடூ - ௱௬௯.

சிலைநுதலாய்நானுனக்குச்சேர்த்தமருந்துக்கு - *
மலையுநகர்ந்துவருமே-முலைவயிற்றைத் - - ௱௭௰.

தொட்டதோகன்னஞ்சுரிந்ததோகூந்தலை - *
யிட்டதோமேனியிளைத்ததோ-தொட்டவனை - ௱௭௧.

விட்டுப்பிரிந்தக்கால்வேறுபிழைப்பிலையோ - - *
முஷ்டிவாங்கிப்பயலோமோப்பாச்சு-கெட்டிகெட்டி௱௭௨.

ஊணைவிடப்பற்றென்றுறுநாரிவீட்டிறப்புக் - - *
கூரையிலொன்றிக்கேட்டுக்கொண்டேனுன்-மேனாதப்பி

(சண்டையிட்டமைகூறல்.)

நன்றிமறந்தானைநடுக்கேட்குமோதெய்வம் - - *
என்றுசொல்லிவந்தேனெதிரேநான்-என்றவுடன் ௱௭௪.

ஆங்காரமிட்டாளென்னாஸ்தியெல்லாந்தன்கையால் - *
வாங்காமல்வாங்கிவிட்டமாமியார்-ஆங்குவரும் - ௱௭௫.

பேய்மடையர்பொன்னும்பெருங்குளத்துநீரைத்தன் - - *
வாய்மடையாலேயுறுஞ்சுமாமியார்-ஈயரைப் ௱௭௬.

புல்வாயைக்கண்டபுலிபோலப்போய்ப்பிடிக்கும் - - *
வல்வாய்க்கிழநெட்டைமாமியார்-பல்லுவிழுங் - - ௱௭௭.

கோப்புளதன் மூப்பைக்கொடுத்திளமைவாங்கமொட்டை *
மாப்பிளைமாரைத்தேடுமாமியார்-கேப்பைக்கும் - ௭௭௮.

பிஞ்சுமாங்காய்க்கும்பிளவுக்கும்வெற்றிலைக்கும் - *
மஞ்சளுக்குஞ்சஞ்சரிக்குமாமியார்-மஞ்சத்தே - ௭௭௯.

தேற்றித்தனைமுன்புசேர்ந்தபணக்காரர்முறை - *
மாற்றிமகளுக்கிணக்குமாமியார்-போற்றிவைத்த - ௭௮௰.

காசழியாமற்றிரியுங்காவிப்பற்காரரைத்தன் - - *
வாசல்மிதிக்கவொட்டாமாமியார்-ஆசைகொண்டு ௭௮௧.

சேயிழையைச்சேர்ந்தவரைத்தேற்றிக்கழுத்தறுக்கும் - *
ஆயுதம்போலுங்கருநாக்கத்தையார்-மேயவொரு - ௭௮௨.

செம்பிலேதண்ணீருஞ்சீலைப்பாயுங்கொடுபோய் - *
அம்பலத்திலேபடுக்குமத்தையார்-வெம்புலிபோல் - ௭௮௩.

தாஷ்டிகரையும்பிடித்துத்தாலக்கத்திம்மாவென் - *
றாட்டிப்பணம்பறிக்குமத்தையார்-மோட்டுப் ௭௮௪

பொலிப்பாட்டைப்போலேபுறப்பட்டாளென்று - *
பொலிப்பாட்டுப்பாடப்புகுந்தாள்-வலுத்தவர்போல்

என்னசொன்னாய்பார்ப்பாணீயின்னமொருக்காற்சொல்லு *
கன்னத்திலேயறைவார்காணேனே-சின்னஞ் - ௭௮௬.

சிறுக்கியுனக்குநன்றாச்சிக்கினாளோநான் - - *
கிறுக்குப்பிடித்தகிழவி-உறுக்கி - - ௭௮௭.

வசமாக்கவல்லோவகைசெய்தாய்வைப்பு - - *
நிசமாச்சோகுல்லாவிநீயோ-பசிவேளைக் - ௭௮௮.

கேதுகொடுத்தாய்நீயித்தனைகாலந்திரிந்தாய் - - *
போதுமினிப்போவென்றாற்போகாயோ-மாதுனக்கு ௭௮௯.

தாய்மாமன்பிள்ளையோதாலிகட்டித்தந்தேனோ - *
நீமாத்திரமகட்குநேசமோ-மாமிகிட்டத் - ௭௯௰.

தந்தபணஞ்சேதமுண்டோசாண்வயிற்றுப்பிச்சைக்கு - *
வந்தவனும்பெண்ணுக்குமாப்பிள்ளையோ-சொந்தமாக் ௭௯௧.

இட்டக்கிடைக்கக்கிடைப்பாளோதேவடியாள் - *
இட்டொருவனைச்சேர்வதெத்தனை நாள் - குட்டுணியுன் எகஉ.

வாளைவாங்கிடுவேன்வாயையூடின்வயிறு - - *
சாணேமுழமோசவுங்கலே - நாணமற்ற - எகங.

மூடாவிதேதுமுழக்கம்வெளியிலே - - *
வாடாவொருகால்மதிகேடா - நாடலாம் - எகச.

னன்றுபுடவையிறக்கினுள் நானவனைத் - *
தின்றுவிடத்தக்கசினமானேன் - நன்றியற்ற - எகரு.

பாவிநீகேளாய்பழங்கதைசெந்திரியிடைப்பட் - *
டாவிவிடும்பாம்பையெடுத்தாதரிக்கத் - தாவி - எகசா.

நளன்காத்திற்றீண்டியதுநன்மைசெய்யக்கர்மம் - *
விளைந்தகதையென்னவுமெய்யே - உளம்பதறிப் எகஎ

பேசலாமோநீபுறம்விடலாமோதுடிக்காய் - - *
ஏசலாமோகொடுத்ததில்லையோ - ராசியமேன் - எகஅ.

செட்டிகளுக்கெல்லாந்தெரியாதோதான்கொடுத்த - *
கட்டிவராகன்கணக்குண்டோ - தட்டார் - எகக.

அறியாரோவூராரறியாரோவுன்னெஞ் - - - *
சறியாதோதாஷிமலவோ - மறுபடியுன் - அா.

இட்டவைத்தவென்முடிப்போகேளாய்க்கிழப்பிணமே *
எட்டுதலைமுறைமட்டிங்குண்டே - கெட்டபுத்திக் அாக.

கந்தலேயென்றேன்கவட்டினுடையடா - - - *
சந்தையின்மாங்கொட்டாய்சரசம்போல் - முந்துன் அாஉ.

வளவிற்சிலவுடைமைவைத்துவைத்தேனென்றாய் - *
களவாணியப்பயலேகண்ணைக் - கிளறட்டோ - - அாங.

பின்னுசைவேண்டாம்புறப்பட்டுப்போவென்றாள் - *
அந்நேரமோர்வடுகனுயுதமும் - கன்னப் - - அாச.

பரிசையுந்தன்காலிலேபாய்ப்பாகும்போட்டுப் - *
பெரியபட்டைநாமமுந்தன்பின்னே - ஒருவனுமாய்க் அாரு.

கக்கத்தில்வாளிடுக்கிக்காச்சுழூச்சென்றுவந்தான் - - *
பக்கத்திலேசவிகைபாராட்டி-வெட்கமறந் - ௮௱கூ.

தாடாதகூத்தெல்லாமாடியேயம்பலத்தில் - - *
வாடாவென்றென்னைவரட்டுத்தோய்ப்-பாடி - - ௮௱எ.

மடிமையைப்பிடித்தாள்மயிரைப்பிடித்தேன் - - - *
தொடையிலடிபட்டதவள்தோற்றை-மடிநழுவித் ௮௱அ.

தொங்கியகைவாளமென்றுதூக்கிச்சுருட்டியெடுத் - *
தங்கையிருற்கக்கத்தடக்கினேன்-மங்கையென்னைத் ௮௱கூ.

தள்ளிருளஞ்சாறுதாக்கினேன்பொக்கவாய்க் - - *
குள்ளிபிடித்தாள்குடுமியை-உள்ளூரார் - - ௮௱௰.

(சபையேறினமைகூறல்.)

கூடிவிலக்கிவிட்டார்கூகூவென்றம்பலத்தில் - *
ஓடிருள்நாலுமுடன்சென்றேன்-தாடகைபோற் - ௮௱௰க.

போயப்பொழுதேபுதுமண்டபத்திலந்தக் - - *
கோயிற்றலத்தானைக்கூட்டமிட்டாள்-வாய்விட் - ௮௱௰உ.

டழுதாள்மகளையருகேநிறுத்தித் - - *
தொழுதாள்மடைமாறிசொல்வாள்-பழியஞ்சிப் - ௮௱௰௩.

(கிழவி அறிவிப்புக்கூறல்.)

பட்டோதேவேந்த்ரபட்டோமீனுக்ஷி - - *
பட்டோகாமாக்ஷிபட்டோ-இஷ்டநர - ௮௱௰௪.

சிங்கையமோநாரணையதீக்ஷிதமோசெவ்வந்தி - - *
லிங்கையமோயெங்கள்சொக்கலிங்கையமோ-சங்கரா ௮௱௰ரு.

சாரியாரோயனந்தசாஸ்திரியாரோகைவிஸ் - *
தாரியாரோகோயில்ஸ்தானிகரோ-ஊருக்குள் - ௮௱௰கூ.

நியாயமிலையோநடுவிலையோபார்ப்பாரப் - - *
பேய்பிடித்ததேயெனதுபெண்பிள்ளையைக்-கோயிலுக்குள்

அஞ்சாறுமாதமாயாடிப்பாடித்திரியச் - - - *
சஞ்சாரங்கண்டீரோசர்ப்பனையாப்-பஞ்சமாய் - ௮௱௰௭.

பாவியிந்தப்பார்ப்பான்பணயங்கொடுத்தொருநாள் - *
மேவியிருந்தான்விடிந்தவுடன்-போவானென் - ௮௱௰௮.

றெண்ணினேனென்னமருந்திட்டானோவென்னவகை - *
பண்ணினானோமதநூல்பாடமோ - பெண்ணணங்கை ௮௨௰.

வைப்பென்றுபேரிட்டான்வட்டிலிற்குஞ்சிக்குமகள் *
உப்பென்றுகேளாதுபாயமிட்டான் - கைப்பிடித்துக் ௮௨௧.

கொண்டானைப்போலக்குடிலமிட்டான்ஆண்பூண்டு - *
கண்டாலும்பேசாமற்கட்டிட்டான் - ஒண்டொடிக்கு ௮௨௨.

வாடைப்பொடியிட்டான்வாய்ப்பூட்டெனக்குமிட்டான் - *
கோடைச்சுழித்துவைத்துக்கொள்ளையிட்டான்மாடமேயோர்

பட்டிவைக்கிறேன்பலதொம்பைக்கூட்டிற்சம்பாநெல் *
கட்டிவைக்கிறேன்பொற்கடாரங்கள் - எட்டேழு ௮௨௪

தூங்கவைக்கிறேனென்றான்சொற்றுக்குத்தூங்கவைத்தான் *
ஏங்கவைத்தானம்பலத்திலேற்றிவைத்தான் - வீங்கலிவன்

இங்குவந்தநாண்முதலாயேதுகொடுத்தான்தனக்குக் - *
குங்குமச்சம்பாவரிசிகொள்ளவென்றும் - பொங்கலுக்குப்

பாசிப்பயறென்றும்பாலென்றுநெய்யென்றும் - - *
தோசைக்குளுந்தென்றுஞ்சோமனென்றும் - பூசுவதுக்

கானசவ்வாதென்றுமலகுபாக்கென்றுமிரச - - *
பானவர்க்கமென்றும்பகலிரவாய் - ஏனோ ௮௨௮.

படுக்கைக்குவாழைப்பழமென்றுங்கேட்பான் - *
கொடுக்குங்கடன்போற்கொடுத்தேன் - மடக்கொடியாள்

பொட்டொழியக்காதிற்பொகடியொருசோடொழிய *
ஒட்டொழியத்தோற்றோமுடைமையெல்லாம் - பட்டிமகன்.

மோகினிமந்த்ரமுழுதுமறிவான்மதன - - *
னாகமங்களெல்லாமவதானம் - நாகரிகப் - - ௮௩௧.

பொட்டறிவானுந்தண்டுப்பூச்சறிவானும்போகக் - - *
கட்டறிவானுமொருநாள்கைவாரத் - தட்டறையிற் - ௮௩௨

சோதித்தேன்சின்னமயிர்த்தோலுநரிக்கொம்பும்வி *
பூதிக்கிழியும்பொடியுமதில் - ஏதுக் - - ௮௩௩.

குருட்டிவைத்தானோசிலது உண்டையுநான்கண்டேன் *
திருட்டுப்புரட்டனென்றுதேர்ந்தேன் - அரைக்காசுத் ௮௩௪.

தொண்டனிவனம்பலத்திற்சோதிப்பானென்றிங்கே *
கொண்டுவருவானோகொண்டுவரான் - வண்டனிவன் ௮௩௫.

மானேர்விழியணங்குமாதவிடாயானக்கால் - *
தானேவிடவருவான்தன்னிலா - மானுஷிமோ ௮௩௬.

அல்லும்பகலுமடைத்தகதவைத்திறவான் - - *
மெல்லியலைச்சற்றும்வெளியில்விடான் - சொல்லுவதென்

பத்துவிசையாம்பகலுக்குமிராத்திரிக்கும் - *
பத்துவிசைக்குமென்றன்யானைபோல் உத்தரிக்க ௮௩௮.

ஆர்க்குமுடியுமிவனானுமுன்பிறப்பில் - - *
ஊர்க்குருவியோபெண்ணுடம்பிலே - தீர்க்கவொண்ணா

நோவொதுங்கவிட்டானாறுவயதுப்பயிர்க்குப் - *
பூவொதுங்கவிட்டான்பொறுபொறென்று - பாவிமகன் ௮௪௰.

சொன்னங்கொடுப்பனென்று சொன்னதுவுண்டல்லாமல் *
என்னகொடுத்தானிதுவரைக்கும் - என்மகட்கு - ௮௪௧.

மோகங்கொடுத்தான்மூளையாயாப்புக்கொடுத்தான் - *
மேகங்கொடுத்தான்மெலியவிட்டான் - ஆகம் - ௮௪௨.

சிரங்காணுள்தம்பிபிட்டதீமருந்தால்மாது - *
குரங்கானுள்குத்திரும்பல்கொண்டாள் - மருந்து - ௮௪௩.

கொடுப்பவரார்புண்ணுக்குக்கூசாமற்கிட்டப் - *
படுப்பவரானென்மகளைப்பாவி - கெடுத்தானே - ௮௪௪.

தேட்டுவந்துசேருஞ்சிறுவயதிற்போக்கறுவான் - *
வீட்டிற்புகுந்தான்விதிபோல் - நாட்டமாய்க் - ௮௪௫.

கூடவந்தங்கிந்தக்குடிமித்தலையைக்கண் - - *
டாடவர்களெல்லாமகன்றுவிட்டார் - தேடாமல் - ௮௪௬.

நித்திரைக்குப்பொன்னூறுநித்தங்கொடுத்துவந்த - *
முத்திரைப்பண்டாரமோமோடிவைத்து - மெத்தக் ௮௪௭.

கறுப்பானான்மாலைகட்டிக்கன்னியப்பன்முற்றும் - *
வெறுப்பானான்மெய்காவல்வேலன் - சிறுக்கிமேல் ௮௪௮.

ஆசைவைத்தவாத்தியாரையர்முறைதப்பிதமாய் - *
பாஷைவைத்துப்போனார்பகையானார் - காசுபணம் ௮௪௯.

மாரியெனச்சொரிந்தமாரியப்பன்சண்டையிட்டு - *
விரிவளவிற்போனான்மீள்வானோ - தேரோறப் - ௮௫௰.

பொன்னுடைமைபூட்டிவிட்டபொன்னப்பனந்திசந்தி - *
சன்னையிட்டுப்பார்த்தாஞ்சலித்துவிட்டான் - பின்னை ௮௫௧.

வரத்துமில்லைத்தானும்வழங்கானோர்சேலை - - *
தரச்சொன்னாலின்றைக்குச்சண்டைக் - கொருப்பட்டான்

வைதானென்னையுமயிர்பிடித்தான்செய்யாது - - *
செய்தான்மகளைச்செவியிலே - கையால் - ௮௫௨.

அடித்தான்விலக்குமவளைமுழங்கையால் - *
இடித்தான்கரத்தினாலென்னை - இடுப்பொடியப் ௮௫௪.

போட்டானங்கேமூர்ச்சைபோனேனெழுந்திருந்தேன் *
கேட்டார்சிரிக்கவல்லோகீர்த்திவைத்தான் - ருட்டிச்செய்த

தேதென்றுநீர்கேட்டாலென்னசொல்வான்தாய்க்கிழவி *
கூதென்பான்வாரிச்சொரிந்தபொருட் - சேதம் - ௮௫௬.

கணக்குண்டோவென்பான்களரிமெச்சவிந்தத் - *
துணிக்குண்ணியோகொடுப்பான்சொர்ணம் - பணக்களம்

மாந்தரிட்டுக்கட்டிவளர்த்தகடாக்கையிலே - - *
பாய்ந்தகதைமெய்யாய்ப்பலித்ததே - ஈந்ததில்லை ௮௫௮.

தாயுமகளுமொருதாமரையினீரானோம் - - - *
பேயுமிரங்குமேபெண்ணென்றால் - தூயவரோ - ௮௫௯.

கண்டநடுப்பேசிக்கணக்குப்பார்த்துப்பொருளைத் *
தெண்டித்துவாங்கியிந்தச்சேமனைநீர் - கண்டிப்பா ௮௬௰.

மெட்டுக்கடக்கவெருட்டிடுமென்றாளென்ற - - *
சட்டித்தலைப்பேலயத்தானமர்த்திப் - பட்டன்மார் - ௮௬௧.

தில்லென்றுருன்வாழ்க்கைநிர்ப்பாக்கியா நீயும் - *
சொல்லென்றார்சொல்லத்தொடங்கினேன் - கல்லும் ௮௬௨.

(தன்னறிவிப்புக்கூறல்.)

கரையுமேமாயமாதர்கள்ளிசொன்னவார்த்தைக் - *
குரையுமெதிர்வழக்குமுண்டோ - ஒருநாள் - ௮௬௩.

நடந்தகதைகேளீர்நடுக்காட்டினீலி - - *
தொடர்ந்தாளோர்செட்டிதனைச்சூதாய் - நடந்தவன்கைப்

பத்திரத்தாற்றப்பிப்பழையனூரம்பலத்தில் - *
மொய்த்திருந்தவேளாளர்முன்சென்றாள் - சத்துருப்போல்

ஆலங்காட்டுப்பேயதோவருகுதென்மனையாள் - - *
கோலங்காட்டிப்பகட்டிக்கொண்டென்றான் - நீலியெனும்

கள்ளிமுலைப்பாலுங்கண்ணீருங்கால்கழுவக் - - *
கள்ளியொன்றைப்பிள்ளையாக்கையேந்தி - மெள்ளவந்து

நாட்டிலேகண்டதுண்டோநல்லோரோவென்னைநடுக் - *
காட்டிலேவிட்டார்கணவனார் - மீட்டுமவர் - ௮௬௮

கிட்டவந்தார்நான்பயந்துகெஞ்சிவந்தேன்வாளுருவி - *
வெட்டவந்தார்முன்னாள்விதிப்படியோ - முட்டமுட்டப்

பேயென்றானென்னையிந்தப்பிள்ளைகள்ளிக்கொம்பென்றார் *
தாயென்றாரில்லைதமரில்லை - தூயவரோ - - - ௮௭௰.

பேர்விட்டபான்முலைக்கீழ்ப்பிள்ளையைவிட்டாலதுதான் - *
ஆர்கிட்டப்போமென்றறியலாம் - பாருமென - ௮௭௧.

விட்டாள்சபையிலதுமெள்ளத்தவழ்ந்துமடி - *
தொட்டேறச்செட்டிதுணுக்கென்றான் - ஒட்டாரம் ௮௭௨

பண்ணுகிறான்செட்டியென்றார்பார்த்தவரெல்லாமவனென்
கண்ணனை நீலியென்றான்கானடுங்கிப் - பெண்ணலது ௮௭௩.

சத்துருப்பேயாகிச்சதிசெய்தால்நாங்களுனக் - *
கித்தனைப்பேரும்பழிகாணென்றுரைத்துப் - பத்திரத்தை

வாங்கிவணிகனையுமார்க்கமிட்டநீலியையும் - .. *
பாங்கிலொருவீட்டிற்படுக்கவைத்துத் - தூங்குமெனப்

பூட்டிக்கதவடைத்துப்போயினார்பேய்மதியோர் - *
வாட்டமுற்றநீலியழிவாச்சுதென்றே-ஊட்டி - ௮௭௬.

பிடித்தாள்வணிகன்பிடரிதனைக்கையால் - - *
ஒடித்தாள்கடித்தாளுதிரம்-குடித்தாள்பின் - ௮௭௭.

நீண்டாள்பிளந்தெறிந்தாள்நெஞ்சிற்குடர்மாலை - *
பூண்டாளெழுந்தாள்பொருள்வணிகன்-மாண்டதற்பின்

கண்டார்வழக்கையெந்தக்கற்பனையாற்சற்பனைகள் - *
விண்டாலும்பெண்வார்த்தைமெய்யாங்காண்-அண்டினர்க்கூ

ருக்கிநடுக்காட்டிலடித்துப்பறித்தாரிற் - *
கூக்குரலுமிட்டாற்பின்கூறுவதென்-வாய்க்கலினம் ௮௮௰.

பூண்டபரியெடுத்துப்போட்டதுமல்லாதுகுழி - *
தோண்டுதென்றானினிமேற்சொல்வானேன்-ஆண்டமறை

அந்தணரோநானிவண்மேலாசைகொண்டேன்மோசமதாய்
இந்தவிதிவருமென்றெண்ணாமல்-முந்தமுந்தக் - ௮௮௨.

கூனிமருந்தையிட்டுக்கூறுகொண்டாளன்றுமுதல் - *
மேனியொடுங்கினேன்மெய்ம்மறந்தேன்-நானிவட்கு

முன்னூட்கடனைமுதலிடுவார்போற்கொடுத்த - *
பொன்னேபொற்பூந்துகிலோபூஷணமோ-சொன்னசெல

வத்தனைக்கும்வீணேயழித்ததெல்லாம்யான்கணக்கிட் - *
டெத்தனையென்றுங்கட்கியம்புவேன்-நித்தநித்தம் ௮௮௫.

வல்லார்தனத்திசொந்தவைப்பென்றுபேரொனையும் - *
அல்லாமற்போக்குவரத்தாயிரம்பேர்-நல்லவள்போல்

உள்ளதெல்லாமெள்ளவுபாயமாவாங்கியெனைத் - *
தள்ளிவிடக்கள்ளிதளமெடுத்தாள்-உள்ளுடையப் ௮௮௭.

பேசினாள்சும்மாப்புறப்பட்டுப்போடாவென்
றேசினாள்நீகொடுத்ததென்னென்றாள்-கூசாமல் - ௮௮௮.

முந்திமடிபிடித்தாள்முந்தானைபைக்கிழித்தாள் - *
சந்தியிலேபூணூல்தனையறுத்தாள்-இந்தநனாத் - ௮௮௯.

நாட்டானைவந்தென்தலையிலொருகுட்டு - - *
போட்டாளென்குட்டெல்லாம்போச்சையா-மோட்டு

வடுகனையென்மேல்விடுத்தாள்மற்றொருவனால் - *
விடுவாரோபுண்ணியவான்விட்டான்-இடுதூறாய் ௮௱௯௰௧.

அந்தக்கிழவியலக்கழிக்கப்பார்த்திருந்த - - *
இந்தக்குமரியேயனென்றாளோ-சந்த்ர - ௮௱௯௰௨.

கலைவாணுதலணங்கேகாதலென்மேலுண்டோ - *
இலையோவுனக்கென்றேனெட்டித்-தலைமேற் - ௮௱௯௰௩.

சரக்கென்றடித்தாள்சதிகாரிவீட்டு - - - *
விரக்கிலடித்தாள்பின்வெள்ளி-முளைக்குமுன்னே ௮௱௯௰௪.

முந்திபோட்டுன்மேலேமூக்காலுமாசையென்று - *
சந்திவீரப்பன்முன்னேதாண்டினாள்-வந்தொருவன் ௮௱௯௰௫.

மூத்தங்கொளுவாய்க்குமுன்னொருவன்றான்கொடுத்த *
அத்தம்பலங்கொடுப்பார்க்காணையுண்டோ-வித்தகரோ.

மேனியிட்டுநல்லமெழுகுபிள்ளையார்போலே - *
யானிருந்ததீர்க்கமறியீரோ-கூனியெனக் - ௮௱௯௰௭.

கிட்டமருந்தாலுமிவள்கொடுத்தபுண்ணாலும் - *
ஒட்டியுலர்ந்தவுடலானேன்-மட்டைக் - ௮௱௯௰௮.

கிறுத்ததெல்லாம்போகட்டுமென்பொருளீதென்று - *
மறித்துமொருபொன்முடிப்புவைத்தேன்-நிறத்தமுழு

மாணிக்கமொன்றுமணிமுத்தொருசிறங்கை - *
பேணிவைக்கச்சொல்லிவைத்தேன்பெண்ணிடத்தில் வணி
[யையவைத் ௯௱.

தேறவிட்டுவாங்கியெனையிக்கோலங்கண்டசழன் - - *
மாறிகிட்டவாங்கிவழங்குவீர்-வேறெனக்குத் - ௯௱௧.

(பின்னுந்தாய்க்கிழவி அறிவிப்புக்கூறல்.)

தஞ்சமில்லைநீங்களேதஞ்சமென்றேனந்நேரம் - *
கொஞ்சமுலைக்காரிதுடிதுடிப்பாய்-வஞ்சத் - ௯௱௨.

திருடனிவன்கூத்திச்செலவுக்கும்போக்கி - - *
ஒருமுடிப்புவைத்ததுவுமுண்டோ-மருதந் - ௯௱௩.

குடியிருக்குதேயழகர்கோயில்பதினெட்டாம் - *
படியிருக்குதேமுதலைப்பள்ளம்-நடுந்யாயம் ௩௱௪.

சொல்லுதேசிங்கம்பிடாரிதுடியாமல் - - *
கொல்லுதேதீர்த்துக்கொடுக்கிறோம்-அல்லவென்றால் ௩௱௫.

என்னைக்கிடத்தியெனதுமகள்தாண்டமகள் - - *
தன்னைக்கிடத்திநான்தாண்டுகிறேன்-சொன்னதென்ன ௩௱௬

தெள்ளிமையோமுற்பிறப்பிற்சீர்கேடனென்மகட்குப் *
பிள்ளையோவென்றான்பெரியோர்முன்-கள்ளிசொல்லைக்

(சபையார்விசாரணைகூறல்.)

கேட்டுநகைபுரிந்தார்கிட்டவழைத்தென்னையவர் - *
கூட்டத்துக்குள்ளிருத்திக்கூறுவார்-வாட்டமுற்ற - ௩௱௮.

மாதவமோவேசிமருந்திட்டாளென்றீரச் - - - *
சேதியுமக்கெங்கேதெரிந்ததென்றார்-காதல்தந்த ௩௱௯.

(மருந்திட்டதறிந்தமைகூறல்.)

மூத்தனையாள்நேற்றிரவுமூலைக்குள்வைத்துநிறை - *
குத்தியரக்குக்குடித்துக்கூட்டமிட்டிவ்-வத்தைமுதல் *

வெள்ளாட்டிகளுங்குடித்துவெறிபிடித்துத் - *
துள்ளாட்டமாடமங்கைதூஷணித்துத்-தள்ளித் ௩௱௰௧.

தலைக்கடையில்விட்டாளென்தன்னையொருத்தன் - - *
விலக்கெருதுபோற்புகுந்தான்வீட்டில்-மலக்கமாய்த்

திண்ணைத்தலையிற்படுத்திருந்தேன்குண்டுணிவாய்க் *
கண்ணியங்கேவந்தாள்கலைநெகிழ்த்து-உண்ணும் ௩௱௰௨

அரக்குவெறியாலவளென்மேல்வீழ்ந்து - - *
குரக்குவெறிபோற்குறியிற்குய்யம்-பொருத்தியெனைப்

பண்ணுதகோலமெல்லாம்பண்ணினாளார்க்குமொருப் *
பெண்ணுசையானுற்பிடிக்குமோ-அண்ணர்களைச் ௩௱௰௩

சம்போகஞ்செய்வதுபோற்றன்னாலேயாவதெல்லாம் *
அம்பாகுங்கண்ணிபார்த்தாகாமல்-வெம்பியே - ௩௱௰௪.

காட்டுமருந்துங்கடைமருந்துமூன்மருந்துங் - *
கூட்டியிட்டாலாசையொருகோதைமேல் - நாட்டம்வர

வொட்டுமோவென்றுருடந்தையாகத்திரிந்த - *
வட்டமுலையாள்சொல்வகைவகையார் - சிட்டரே ௯௱௰௮.

இந்தவிதம்நானறிந்தேனென்றுரைத்தேன்கேட்டுநல்ல *
விந்தையெனச்சிரித்தார்மேலோர்கள் - சிந்தைநொந்த

(சபையார்தன்னைத்தேற்றினமைகூறல்.)

பூசுரரோவேதபுனிதரோயம்பலத்தில் - - *
தாசியுடனேறத்தகாதுகாண் - வேசியொரு - ௯௱௨௰.

செய்யமறைவேதியனைச்சென்னியிற்கல்லிட்டகதை - *
ஐயரேநீர்தாமறியீரோ - கையில் - - ௯௱௨௰௧.

திரவியத்தைவாங்கியுமைச்சீவனுடன்விட்ட - *
மரியாதைக்குண்டோவழக்குப் - பெரியோரே - ௯௱௨௰௨

வேதியராயுள்ளவர்கள்வேசியரைக்கண்டக்காற் - *
காதவழிவிலங்கல்காரியங்காண் - ஓதுமறை - ௯௱௨௰௩.

மந்திரநூல்வாயான்மதுவாய்ரசங்கொள்ள - *
எந்தவகைதுணிவாயெண்ணினீர் - சிந்தைமயல் ௯௱௨௰௪.

தீர்த்தவாசிக்குத்திரவியமெல்லாங்கொடுத்துத் - *
தீர்த்தவாசிக்கடனைத்தீர்த்துவிட்டீர் - கீர்த்தியா ௯௱௨௰௫.

நாமறியாக்கூத்துநடித்துவிட்டீரும்மளவோ - *
மாமறையோர்க்கெல்லாம்வசையாச்சே - சேமநிதி ௯௱௨௰௬.

தன்னைப்பறித்தாள்தரச்சொல்லுமென்றீரப் - - *
பொன்னையினிக்கேட்கப்போகுமோ - பொன்னைப்போற்

கூட்டியசெந்தேனெடுத்துக்கொண்டபேர்தம்மையவர் *
ஒட்டியவித்தெண்டிப்பதுண்டோகாண் - சூட்டரவின்

வாய்க்குளகப்பட்டமண்டூகமும்யானை - - *
வாய்க்குளகப்பட்டவான்கரும்பும் - தீக்குள்ளே ௯௱௨௰௯.

விட்டநறுநெய்யும்வெயின்முகத்திலேவெடிக்கப் - - *
பட்டகமரில்விட்டபாற்குழம்பும் - கட்டுபுகழ் - ௯௱௩௰.

பாங்கினாற்றேடாப்பரமனுத்தர்கைப்பொருளும் - *
வாங்கினுலிப்பொருளும்வாங்கலாம் - நாங்கள்சொன்ன

புத்திவழிநின்றாற்பொருளரிதோநீர்கற்ற - - *
வித்தையிலேசெம்பொன்விளையுமே - எத்தும் - ௧௩௨.

பரத்தையருக்கீந்ததினும்பத்தத்தனையாய் - *
வரத்தக்கயோகம்வருங்காண் - கருத்திலே - ௧௩௩.

எண்ணியிடையாதிருக்குமூர்க்கேகுமென்று - *
புண்ணியர்தாந்தம்மனையிற்போயினார் - பெண்ணணங்கை

(தான்கலங்கித்தெளிந்தமைகூறல்.)

பின்னடத்திச்செல்லினவள்பின்னழகைப்பாரோனு - *
முன்னடத்திச்சென்றாள்முழுப்பாவி - நன்னீர்க்கட் ௧௩௫.

டாகுங்குளத்திலனுபவித்துவற்றியபின் - - *
ஏகும்பறவைகள்போலேகினாள் - மோகமுற்ற - ௧௩௬.

என்னைக்கிழவியிடர்செய்தெனைப்பிரியாக் - *
கன்னிதனைப்பிரிவுகண்டாளே - இந்நாட்டில் - ௧௩௭.

மாட் டுமதித்தாய்க்கிழவிமாமிதலையிற்கல்லைப் - - *
போட்டுப்புறப்பட்டுப்போவோமோ - நாட்டமுற்ற ௧௩௮.

ஊரொங்கேதோழரொங்கேயுற்றாரொங்கேமனைவி - *
யாரொங்கேயஷ்டாவதானியெனும் - பேரொங்கே ௧௩௯.

நானுவிதமுமெண்ணிநட்டாற்றுக்கோரையைப்போல் - *
ஆனேனெனக்கலக்கமாகினேன் - யானே - ௧௪௰.

(ஆலயஞ்சென்றுதெரிசித்தமைகூறல்.)

எனைத்தேற்றிக்கொண்டுபோயெங்கள்சொக்கலிங்கந் - *
தனைப்போற்றியென்கவலைசாற்றி - அனுக்கிரகம் ௧௪௧

பெற்றிரண்டாஞ்செம்பொற்பிரகாரம்யான்வலமாச் *
சுற்றிவயிரவசுவாமியையும் - முற்றும் - - ௧௪௨.

வணங்கியம்பொற்கம்பந்தனக்குவடபால் - - *
இணங்குந்திருவாசற்கிப்பால் - மணங்கமழ்பூ - ௧௪௩.

மாலைநிரைத்தமணிவாசன்முன்முகப்பிற் - - *
சேலைநிரைத்ததிருவிளக்கும்-பாலரவி - - ௧௪௪.

காந்திதரநிரைத்துக்கட்டளைக்குக்கட்டளையாய் - *
வாய்ந்ததெல்லாஞ்சொர்ணமயமாகித்-தேய்ந்தமுனை ௧௪௫.

நெட்டிலைவேற்சங்கநிதிக்காசனுபரணப் - - *
பெட்டிநிறைந்தப்ரகாசம்போற்-சட்டப் - - ௧௪௬.

புழுகுமணக்கப்பொலிந்தவறைகண்டு - - - *
தொழுதேனதிசயமுந்தோன்றப்-பழுதில் - ௧௪௭.

மறையோன்மணியம்வரதையனென்போனவ் - *
வறைவாசலிலிருந்தானையா-நெறியுடையாய் ௧௪௮.

(நாகமகூளேந்திரன்கட்டளைகண்டமைகூறல்.)

ஆருபயமீதென்றெனுடலபயன்முல்லைத் - - *
தாருலவுமேருத்தடம்புயமால்-பாராளும் - - ௧௪௯

யோகமகராசனென்பதூர்வாழ்பெரிய - - *
நாகமகூளேந்த்ரநரபாலன்-தோகைமயில் - ௧௫௰.

மீனாக்ஷியம்மைக்குமிக்கசொக்கலிங்கருக்கும் - - *
தானாட்சியானவுபசாரமா-மேன்மையபி - ௧௫௧.

ஷேகமதுமாலைசிறப்பமுதுதீபமுத - - *
லாகநடப்பிக்குமறையென்றான்-மோகநமக் ௧௫௨.

(இழந்தபொருளுக்கிரங்கினமைகூறல்.)

இட்டணையுங்கன்னிக்கிறைத்ததெல்லாமிப்படியோர் *
கட்டளையாச்செய்துபலன்கண்டோமோ-சிட்டர்தொழும்

அங்கயற்கணம்மைக்கழகுதிருவாசியொன்று - *
தங்கத்தினாலேசமைத்தோமோ-சங்கரர்சொக் - ௧௫௩.

கையர்மகிழ்ந்தேறவபிஷேகபண்டாரம் - - *
செய்ததிருத்தேர்போலச்செய்தோமோ - வைபோகம்

பெற்றபுதுமண்டபத்திற்பின்புறமுமுன்புறமும் - *
பொற்றகடுகொண்டழுத்திப்போட்டோமோ-மற்றுமெ
[ங்கள் ௧௫௪.

மாலழகருக்குவயிரத்தான்மின்னெறித்தாற் - *
போலழகாமங்கிபண்ணிப்பூட்டினமோ-சாலையறம் ௯௫௭.

செய்தோமோகோதானஞ்செய்தோமோபூதானம் *
செய்தோமோசத்திரங்கள்செய்தோமோ-துய்யநிதி ௯௫௮

ஆரிடத்திற்வாங்கியரும்பலனைத்தேடுவோம் - *
பேர்படைத்தபெஞ்சைப்ரதாபனென்ப-தார்படைத்த

(அப்பிரபுவிடத்துக்குச்செல்லத்துணிந்தமைகூறல்.)

ஐயன்பெரியநாகையனிடஞ்செல்வோமோ - *
செய்யுமறைவேதியரோசெப்புமென்றேன்-எய்துதிருப்

பாற்கடலுக்கேகினவர்பால்குடியாரோவிதற்கு - *
மேற்புத்தியுங்கேட்கவேணுமோ-சூற்கொண்டு - ௯௬௧.

பெய்யுமழைக்குணையாதபெருமவன் - . - *
கையிலேற்காவருங்காணேனென்-ஐயமின்றிப் ௯௬௨.

போமெனவெண்ணீறுதந்துபூசிவிட்டார்சந்தனத்தை *
யாமெனச்சொக்கேசரடிபணிந்து-மாமேவு - ௯௬௩.

கூடலழகர்மதனகோபாலர்பூந்துளவ - - - *
வேடலருந்தார்வீரராகவமால்-மாடேறும் - ௯௬௪.

நல்லாண்டவர்யார்க்குமிம்மையிலேநன்மைதரு - - *
மல்லாண்டவர்பாதம்வாழ்த்தியே-செல்வ - ௯௬௫.

மடந்தையங்கயற்கண்வாசலறச்சாலை - - *
கடந்துமறுவீதிகடந்து-நடந்துவரப் - - ௯௬௬.

(மதுரையினின்றுஞ்சென்றமைகூறல் .)

பின்னிழுக்குமோர்காலைப்பெண்ணாசைமாமினம் - *
முன்னிழுக்குமோர்காலைமூன்றுதரம்-பின்னே ௯௬௭.

திரும்புவதுமீள்வதுமாய்ச்சீமாட்டியாசைக் - - *
கரும்பைநினைத்தேன்கருத்தில்-விரும்புமவள் - ௯௬௮.

குன்றிருக்குமென்முலைமேற்கூடிக்கலந்தசுகம் - *
இன்றொருத்தன்பங்காயிருக்குமோ-மன்றலந்தார்ச் ௯௬௯.

சுற்றுடனான்படுத்த தூங்குமஞ்சமீதிலொரு - *
பற்றுப்பயனும்பெறப்பாரேனு - மற்றுமந்தச் - ௯௭௰.

சந்தியிலேமாயிவிட்டசண்டையிலேவந்தவொரு - *
தொந்திவடுகன்சுகிப்பானோ - முந்திவிளை - - ௯௭௧.

யாடியனுராகம்பாடியுறவாடிநான் - - *
கூடியதெல்லாநினைத்துக்கொள்வாளோ - மேடையின்மேற்

கின்னமுலைமேற்பதித்தகிள்ளைப்பார்த்தென்னையுஞ்சற் *
றெண்ணிநெடுமூச்செறிவாளோ - எண்ணிற் - ௯௭௩.

படாதபாடுபட்டனையும்பட்டேனென்பாவம் - - *
இடாதோபிரமனூர்க்கென்றே - தடாமல் - ௯௭௪.

வடக்குமுகக்கோட்டைவாசல்நடுக்கட்டு - - *
முடக்கில்வரும்போதெனக்குமுன்னே - அடக்கமுள்ள ௯௭௫.

(ஞானியாரைமறுபடியுங்கண்டமைகூறல்.)

மானுபரஞானியையன்மதுரைக்கன் - - *
றேறேனுவந்தானென்னெதிராக - நானவனைக் - ௯௭௬.

காணுமரவிற்கரவாண்டவன்போலென் - - *
சாணுடம்புங்குன்றியொருசாணானேன் - நாணமாய் ௯௭௭

மாமிதனைக்கண்டமருமகள்போலானேனச் - *
சாமியெனையன்பாய்த்தழுவினுன் - தாமதிய - ௯௭௮.

ஆனைபோலேயிருந்தீரையரோயுமுடம்பு - - *
பூனைபோலேயொடுங்கிப்போவானேன் - ஆனவிது ௯௭௯.

என்னவகையென்றுன்மற்றேதுவகைநீர்முதலே - *
சொன்னவகைகேளாததோஷவகை - முன்னுமது ௯௮௰.

கையைவிட்டுவேசிமகள்கால்பிடிக்கச்சென்றேனுன் - *
மையையிட்டகண்ணிக்குமாலானேன் - மையவுண்டை ௯௮௧.

கூட்டியிட்டாள்கைப்பொருளைக்கொள்ளையிட்டாள்கைக்குரங்கா *
ஆட்டியிட்டாளிக்கோலமாக்கியிட்டாள் - கேட்டார் ௯௮௨.

(ஞானியார்தேற்றினமைகூறல்.)

நகைப்பாரென்றேனிதற்குநாணமேன்யார்க்கும் - *
வகைதப்பாமோசம்வராதோ-பகுத்தறிவாம் - ௧௮௩.

இந்திரன்மெய்யோனிக்கணீரைஞ்ஞூறானதுவும் *
அந்தணனார்சென்னியிலொன்றற்றதுவும்-சுந்தோப ௧௮௪.

சுந்தர்மடிந்ததுவுஞ்சுக்ரீவனால்வாலி - - *
முந்தமடிந்ததுவுமுன்னொருநாள்-கந்தன் - ௧௮௫.

மரமானதுமிலங்கைவாழ்வேந்தன்சிந்தை - - *
சிரமானதும்வச்ரதேகத்-துரம்படைத்த - - ௧௮௬.

கீசகனார்மாண்டதுவுங்கேட்டிலையோபெண் - *
ணாசையாலென்பதறியீரோ-பூசுரரோ - - - ௧௮௭.

கைப்பொருள்போச்சென்றுகவலையேன்கல்வியொன்றால் *
மெய்ப்பொருளாம்பாவலர்க்குவேளாண்மை-இப்புவியில்

மன்னனுமாசறக்கற்றோனுஞ்சீர்தூக்கின் - - *
மன்னனிற்கற்றோன்சிறப்புடையன்-மன்னனுக்குத் ௧௮௯.

தன்றேசமல்லாற்சிறப்பில்லைகற்றோற்குச் - - *
சென்றவிடமெல்லாஞ்சிறப்பென்று-நன்றிபெற - ௧௯௰.

அவ்வைசொன்னநீதியறியீரோநீரினிமேல் - - *
இவ்விடம்விட்டுங்களூர்க்கேகுமென்று-தெய்வ - ௧௯௧.

மறைவல்லோனென்னைவழிவிடுத்துப்பார்த்துத் - *
தறுகிநின்றானென்மேற்றயவால்-நெறியுடனே ௧௯௨.

(ஒன்பதூர்நோக்கிச்சென்றமைகூறல்.)

ஐம்பதூர்க்கேகியலைந்துபலனேதென்றே - - *
ஒன்பதூர்க்கேகவொருமித்தேன்-முன்புகருங் - ௧௯௩.

(நற்சகுனங்கண்டமைகூறல்.)

காகமிடத்திருந்துகைக்குவலப்புறத்தில் - - - *
ஏகக்கருடனிடமாக-யோகபலம் - - - ௧௯௪.

(ஏடகங்கண்டமைகூறல்.)

இன்றுவந்ததாகுநமக்கென்றுவந்தேனேடகத்திற் - *
சென்றுவந்தேயந்தச்சிவஞானா - அன்றுதெரி - ககரு.

சித்தேனென்பூர்வசென்மதோஷங்களெலாம் - - *
இத்தேசங்கண்டதெனவறியேன் - அத்தலத்தில் ககசா.

வேம்புகரும்பாமாம்வெண்மணலோ நீருமாம் - *
தாம்புவிடுநீரமிர்தந்தானுமாம் - தேம்பும் - ககஎ.

வறியேன்மருந்தின்மயக்கமுநோயுந்தீர்த் - - *
தறிவாளருக்கிவிட்டதவ்வூர் - நெறியுடனே - - ககஅ.

அற்றைநாள்தங்கியருணோதயத்தெழுந்து - - *
மற்றைநாண்மேற்குவழிகொண்டேன் - வெற்றிபுரி - ககக.

கோடுகொண்டமால்யானைக்கூவேந்த்ரனுண்பதூர் *
நாடுகண்டேனென்கவலைநான்காணேன் - ஆடகவான் - தூ.

(பின்புநாட்டுவளங்கண்டமைகூறல்.)

எட்டியபூஞ்சோலையெழிற்கமுகும்வாழைகளும் - - *
கட்டியபூங்காவணமாக்காண்பிக்க - விட்ட - - க.

வருக்கைபலாக்கனியையந்தியிருகைக்கொண் - - *
டிருக்குமதுமத்தளக்கொட்டென்ன - உருக்குமிசை - உ.

வண்டுதித்திகூடவரிக்குயில்கள்பண்பாடக் - - *
கண்டுகிளிகள்கவிபாடத் - தண்டாத - - - - ந.

மன்றலத்தாரல்லிமலர்வாடைக்காற்றலடிபட் *
டொன்றொடொன்றுதாரம்போலொத்திசைப்ப - நின்றுலகில்

நீலவன்னத்தோகைநெடுஞ்சிறகைமேல்விரித்துக் - *
கோலவனிதையர்போற்கூத்தாடச் - சோலைக்குள் - - ரு.

ஆங்குநதிபாயுமலரோடைவாளைவாள் - - *
வாங்கியவீச்சுவளங்காட்டப் - பூங்காவில் - சா.

வந்துநுழைந்துசெல்லும்வாலரவிகூத்துக்குப் - *
பந்தம்பிடிக்கும்படிசிறப்ப - மூந்தி - - - எ.

மூகைத்திருக்குமுல்லைமலர்மொய்த்திருந்துபார்ப்போர் *
நகைத்திருக்கும்பாவனையாய்நண்ண - மிகுத்தபொழி அ.

வண்டாடுஞ்செங்காந்தள்வாடையாலேபசைந்து - *
கொண்டாடுவோர்கைக்குணங்காட்டக்-கண்டெதிர்புன் ௯.

னுகமலருநறுங்கொன்றைப்பூவிதழுந் - - *
த்யாகமெனப்பொன்னுமுத்துஞ்சிந்திநிற்பத்-தோகைவிரித்

தாடுகின்றமஞ்ஞையெதிரன்னம்பறந்துவந்து - *
போடுகின்றவெண்டூசுபோற்படிய-நீர்வயற் - ௰௧.

சாலிக்கதிர்க்குலையுந்தாமரையுமந்தநறுஞ் - - *
சோலைக்குண்மன்னர்குழாஞ்சூழ்ந்ததொக்குஞ்-சோலைவளம்

ஏதென்றுசொல்வேனிருதோளும்பூரித்தேன் - *
வேதன்றொழுங்கோயின்மேட்டிலே-சீதையுடன் - ௰௩.

(திம்மராயனைக்கண்டுதெரிசித்தமைகூறல்.)

மாதவனைக்கண்டேனென்வல்வினையெல்லாமுடனே - *
ஆதவனைக்கண்டபனியாக்கினேன்-பாதம் - - ௰௪.

தொழுதுதிம்மராயா துதித்துனைப்பாடாமல் - *
பழுதிலேவைசயனைப்பன்னி-முழுவதுமுன் - ௰௫.

மீனவடிவையந்தமின்னார்கண்ணென்றுநீ - - *
யானசிங்கரூபமிடையாமென்றும்-மேன்மையுடன் - ௰௬.

மைக்கிசைந்தரூபத்தைமங்கையார்கூந்தலென்றும் - *
கைக்கிசைந்தசங்கைக்கழுத்தென்றும்-திக்கனைத்தும் ௰௭.

தந்திப்புவனமெலாந்தந்தவனைத்தந்தமல - - *
ருந்திதிருமுகத்துக்கொப்பென்றும்-சந்ததமும் - ௰௮.

வேயடுத்தநின்னிசையைமின்னார்வசனமென்றும் *
தீபடுக்கும்பாயைநிதம்பமென்றும்-வாய்பிதற்றிப் - ௰௯.

பாடினேனிந்தப்பலன்கண்டேன்சிந்தைமலர் - *
சூடினேன்பாதந்தொழுதெழுந்தேன்-ஆடி - ௨௰.

(பதியின்சிறப்புக்கண்டமைகூறல்.)

அளகாபுரிக்குமமராவதிக்கும் - - - *
வளமாதவபுரிக்குவந்தேன்-பளபளெனும் - - ௨௧.

செம்பொனெடுமதிலுந்தேரோடும்வீதிகளும் - *
கும்பமுடிநிரைத்தகோபுரமும் - அம்பரத்தில் ௨௨.

ஆற்றுநீரள்ளியருக்கனுடல்குளிரத் - - - *
தூற்றியபொன்மாடத்துகிற்கொடியும் - நீற்றொளிசேர் ௨௩.

தன்னிறத்தைப்பொன்னிலத்துத்தந்திக்கீந்தந்நிலத்துப் *
பொன்னிறத்தைப்பெற்றபுரிசைகளும் - இன்னவழ - ௨௪.

கத்தனையுங்கண்டுமகிழ்ந்தையனகோயிலனும் - *
கர்த்தனையுங்கண்டுகமலத்தாள் - பத்தியுடன் - - ௨௫.

(அரண்மனைகண்டுசென்றமைகூறல்)

சேவித்தேன்கோயிலுக்குத்தென்புறத்திற்கற்பகப்பூ *
நீவித்தேனூற்றுநெடுமதிலும் - மேவுமுகம் - ௨௬.

இட்டமணிப்பொற்குடங்களெட்டுவகைச்செந்திருவின் *
வட்டமுலைபோலிலங்குமாளிகையும் - தொட்டுக் - ௨௭.

குழைக்கின்றநல்குரவுகொண்டேனைவாவென் - - *
றழைக்கின்றதுபோனின்றாட்டம் - தழைக்கின்ற ௨௮.

சிங்காரவெள்ளைச்செயடாலுங்கண்டிதுவே - - *
எங்கோனரண்மனையென்றெய்தினேன் - துங்கப் ௨௯.

படையாற்றிருடர்பயத்தாற்கொடையால் - - *
அடையாதவாசலுக்குளானேன் - தடவிகட - ௩௰.

காந்துதழற்சிறுகட்காரானைநிற்பவது - - *
ஏந்துகொம்பைக்கண்டுபகிலென்றுமனம் - சோர்ந்துநான்.

வெல்லவிட்டபூண்முலையாண்மென்முலைமேலென்மனதைச் *
செல்லவிட்டேன்மெள்ளத்திருப்பினேன் - செல்வமுதல்

வாசலுக்குண்மன்னர்வருவாரும்போவாரும் - - *
சேசெயெனுஞ்சந்தடிக்குட்சிக்கினேன் - வீசுகின்ற - ௩௩.

பட்டைக்கம்புக்குப்பயந்தெனைப்பின்பற்றிவந்த - *
மொட்டைக்கலியன்முடுக்குண்டான் - கிட்டப்போய் ௩௪.

அத்தினேன்கொல்லவொனையாவொன்றாப்பாநான் - *
வித்துவானென்றுசொன்னேன்விட்டுவிட்டார் - மொய்த்தம
[ணிப் ௩௫.

(கொலுச்சிறப்புக்கண்டமைகூறல்.)

பத்திவிலாசப்பவளக்காற்போதிகைப்பூ - - *
வைத்தகனகமணிமண்டபத்தில்-இத்திகிரி - - ௩௬.

வாளலோகம்புரக்குமால்பெரியநாகேந்த்ர - - *
கூளபூபாலன்கொலுவாகத்-தோளிற் - - - ௩௭.

செயமாதுகூத்தாடத்திங்கண்முகமேற்பங் - - *
கயமாதுதன்கருணைகாட்டக்-கையிலேந்து - ௩௮.

நெய்வடித்தவாள்செவிக்குநேராகநின்றெனக்கூண் - *
எவ்விடத்தையாசொல்லெனக்கேட்பச்-செவ்வியபூஞ் ௩௯.

சந்திரகாவித்தலைப்பாகைமேற்கவிகை - - *
சந்த்ரோதயகாந்திதான்காட்ட-அந்தரமும் - ௪௰.

திக்கனைத்துஞ்சுற்றச்சிறகடிக்கொள்கீர்த்தியைப்போல் *
பிக்கிரட்டைப்பாவாடைவீசிநிற்கச்-செக்கர் - ௪௧.

அவிரொளிரத்நாங்கியடுத்திருபால்வீசும் - *
கவரியுபயநிறங்காட்டக்-கவலைபடும் - - ௪௨.

சொற்காட்டுமொன்னார்தொழுதுவிழுந்துகெஞ்சிப் - *
பற்காட்டுஞ்சென்னிபதித்தமணி-முற்காட்டும் - ௪௩.

சாமித்துரோகரைப்போற்றண்டைமுகப்பில்வெற்றிச் *
சேமத்தலைபோலச்சோதிவிட-வீமரண - ௪௪.

தீரதுரைமக்கள்செயமந்திரிமாரும் - - - *
வீரதளகர்த்தர்களும்வேந்தர்களும்-பார்மதிக்கும் ௪௫.

ஸ்தானபதிகளும்ப்ரசண்டநியோகிகளும் - *
நானுகலைதெரிந்தநாவலரும்-கோன்முறைமைக் - ௪௬.

இந்தவகைக்கிந்தவகையின்பந்தருவதென்ன - *
வந்துபராசர்மனுக்கேட்பச்-செந்திருவாழ் - ௪௭.

துய்யவதனசந்த்ரசோபைநளுத்தெள்ளமுதைத் - *
தையனல்லார்செங்கைச்சொரமுன்னைக்-கைகுவித்து ௪௮.

வாரிட்டராணுவரிசையாய்நிற்கவெதிர் - - *
காரிட்டயானைநின்றுகாதாட்டத்-தாரிட்டுப் - ௪௯.

பொன்னின்முகப்பூட்டுப்பூட்டிநிறைத்தடில்லி - *
வன்னப்பரிகளைத்துவாவிநிற்க-எந்நேரம் - ௫௰

கூடுஞ்சனுஆழியக்காரர்கோடிசெயத் - - *
தேடுங்கனசேருவைகாரர்-சோடிட்டுத் - ௫௧.

தத்தரமாய்க்காலிலிட்டதண்டைகளுங்கேடயமுந் - *
கத்தியுமாய்வந்துநின்றுகைகுவித்துச்-சித்தம்வாச் ௫௨.

சிங்களத்தைவெட்டிச்சிறைபிடிக்கவோநாங்கள் - *
வங்களத்திலேகலகம்வைக்கவோ-பங்கமில்லா - ௫௩.

வல்லத்துக்கோட்டையைப்போய்வாங்கவோவாங்காத *
கொல்லத்தைக்கொள்ளையிட்டுக்கொள்ளவோ-மெல்லப்போ
[ய்ச் ௫௪.

சொல்லையாவென்னத்துடிமணியக்காரர்பணம் - *
செல்லும்வரவுஞ்செவிக்கேற்ற-நெல்லுநிதி - ௫௫.

ஆயக்கமுஞ்செலவுமாதாயமுங்கழிவும் - - *
வாயிற்கணக்கர்வந்துவாசிக்கத்-தேயத்துக் - - ௫௬

கோவோலைவாசகத்தைக்கூறுவார்தாமெழுதி - *
வோலைக்கொப்பமிடச்சொல்லத்-தாவித் - - ௫௭.

தகருந்தகருந்தலையுந்தலையுந் - - - - *
தகருந்தகருமெனத்தாக்க-விகடநட - - ௫௮

மல்லராய்முற்பகையுமல்லராய்க்கட்டிவீழ - *
மல்லராய்க்கைகுவித்துவாங்கிநிற்ப-வெல்லக் - ௫௯.

குறும்புள்ளராயங்கைக்குறும்புள்ளராய்க்கோபக் - - *
குறும்புள்ளராய்ப்பாய்ந்துகுதிகொள்ளப்-பறங்கிகளும் ௬௰.

சோனகருந்தந்ததுரிதவராகனிது - - *
சீனர்வரவிட்டசிவிகையிது-யானைகட்டி - ௬௧

மீண்டுகொண்டமைசூர்மேல்வேட்டைபோய்நம்முடைய *
தண்டுகொண்டுவந்ததனங்களிது-மண்டலிகர் - ௬௨.

இட்டதிறைகளிதுபராக்கென்றுசொல்லிக் - *
கட்டியர்கொண்டாடக்கனபேரி-கொட்டரண ௬௩.

மல்லாரிகொட்டவகோபிலமால்கோயிலா - - *
ஒல்லாருமோர்யாவினிருப்ப - நல்லமிர்த - ௬௪

போசனுங்கூளபூபாலன்சமுத்திரத்து - - - *
மாசனமுமன்றுடிமங்கலத்து - மாசனமும் - - ௬௫

அத்தலக்குண்டுமகாசனமுமாற்றூராம் - - *
அத்தலத்தில்வைதிகநூலந்தணரும் - வித்வசெனர் - ௬௬

பக்ஷமுறுமெங்கோன்பவிசும்பலன்களுமொன் - *
றக்ஷயமாமென்றக்ஷதைவழங்கி - ரக்ஷகனும் - - ௬௭

கோரசிங்கரூபவுக்ரகோதண்டபாணியைப்போல் *
வீரசிங்காசனத்தில்வீற்றிருந்தான் - சூரியன்முன் - ௬௮

பங்கயம்போலானேன்பரபரெனச்சென்றெதிரே *
செங்கைதனையேந்திச்செயமென்றேன் - இங்கே - ௬௯

இருமென்றென்னையணிடங்காட்டப்பெற்றேன் - - *
அருகிலிருந்தேன்மகிழ்ச்சியானேன் - கருணைபுரிந் - து ௭௰

தென்மேல்விழிவைத்தாளெங்கோன்குறிப்பறிந்து *
பொன்மேவும்பெஞ்சைப்புரந்தரா - மன்னு - ௭௧

நிகளங்காமல்லாநிலைக்கோட்டைராயா - - *
அகளங்காவாளுக்கபிமா - நகைமுகப்ர - ௭௨

தாபாகவிகோபாசதுராவிருதுபண்டு - - *
பாபாவலக்கவம்சபாக்யகுல - தீபா - - - ௭௩

சுமுகப்ரமுகவளிதசகுணகுணாவியனைய - - *
சமுகநகைமுககமலதளநயன - அமிர்தரச - ௭௪

மதுரவிதவசனமிர்கமதமெழுதுபுயசைல - - *
சதுரதடகடகரடசமரகரி - உதயசெரு - ௭௫

விதநடனபரிநகுலவிகடமிடுமகுடமுடி - - *
அதிரவடிவருடுசரணடலபய - அதுலகுல - ௭௬

சந்திரசிந்துரசந்தனகுங்கும - - - *
மந்தரகொங்கைமடந்தையர் - சுந்தர - - - ௭௭

கல்விப்பெருங்கடலேகற்பகக்கன்றேகமலச் - *
செல்விக்குவாய்த்ததிரவியமே-வெல்லுமதக் - எஅ

கூன்கோட்டியானைக்குறுகாரொணுங்காட்டு - *
மான்கூட்டஞ்சாடும்வரிப்புலியே-மீன்கூட்டம் - எகூ.

பாதிக்குறநிவந்தபன்றிமலைச்சாரலிலே - - *
ஆதிக்கஞ்செய்திருக்குமாளியே-ஓதுபகை - சூ அ௰..

வீரமண்டலீகரொணும்வேழங்களைவிழுங்கும் - *
பாரகண்டபேரண்டபக்ஷியே-சேரலராய் - அக.

அண்டிப்பொருவோரரிக்குலத்தைவாளுகிராற் - *
தண்டிற்கிழிக்குஞ்சரபமே-திண்டிறல்சேர் - அஉ.

போசேந்த்ராசக்ரபுவனேந்த்ராராஜாதி - - *
ராசேந்த்ராதீனஜனரக்ஷகா-வீசுதிரை - - - அங.

ஆற்றிலேநாளுமனுதினமும்பொன்னூறும் - - *
ஊற்றிலேயாறுமுடையானே-எற்றமுள்ள - - அச.

பத்தூரொவ்வொன்றுப்படைக்குந்தலையூராம் - *
நத்தூருமொன்பதூர்நாயகனே-மொய்த்தகடல் - அரு.

ஒப்பத்திரண்டதளமுள்ளசதுரங்கபங்கள் - - *
முப்பத்திரண்டுபெற்றமொய்ம்பனே-இப்புவியில் அசா.

அண்டலரைவெல்லுமறுபத்துநாலுமன்னர் - *
கண்டசெயதுங்கரணகங்கணனே-மிண்டுகொண்டு - அஎ.

சண்டைக்குடில்வித்தளம்வந்துதாளுனும் - - *
கண்டுமலையெறுதகண்டனே-தண்டஜய - - அஅ.

தண்டனேகாரியவுத்தண்டனேசூரவே - *
தண்டனேவீரியகோதண்டனே-தண்டளவதீ அகூ.

தாரனேசற்குணவிஸ்தாரனேகற்றவர்க்கு - - *
தாரனேயற்றவர்க்காதாரனே-ஆரமுத - சூகூ௰.

சோமனேயன்னசத்ரசோமனேகற்பகப்பூங் - *
காமனேவிற்கரும்புக்காமனே-நாமகள்சேர் - கூக.

பெஞ்சைநகர்ச்சிந்தமனற்பேறேசரற்கால - - *
மஞ்சைநிகருந்த்யாகவள்ளலே-அஞ்சித் - - கூஉ.

தொழுதுங்கவேந்தருக்குத்துள்ளுசீட்டொப்பம் - - *
எழுதும்பெரியநாகேந்த்ரா-எளியோர் - - கூங.

கரங்கள்விரித்தேதற்கக்கன்றுகண்டவாபோல் - - *
இரங்கும்பெரியநாகேந்த்ரா-வரங்கள் - - கூச.

செருக்குமதரூபம்போற்சிங்காசனத்தில் - - *
இருக்கும்பெரியநாகேந்த்ரா-பருக்கும் - கூரு.

மழைக்கும்பகம்பமதயானைவீரிட் - - - *
டழைக்கும்பெரியநாகையா-திழைத்தபுகழ்க் - கூசு.

கூளமகீபன்குமாரதுரைச்சிந்தமனும் - - - *
வாளபயசோதரவசீரனே-நீள்சகல - - - கூஎ.

(தன்வித்தைஅரங்கேற்றினமைகூறல்.)

சம்பனுவென்றுதமிழ்ப்பாடினேன்தமிழிற் - - *
கம்பனுமென்றார்கவிராஜர்-சொம்புபெறக் - - கூஅ.

கட்டாகநூறுகவிசொன்னேனங்கேயென் - - *
அஷ்டாவதானமரங்கேற்றினேன்-அஷ்டாங்க - கூகூ.

யோகக்காவித்துகிலோருள்ளமகிழ்ந்தமிர்த - - *
பாகமெனச்சொல்லப்பண்ணினேன்-த்யாகநிதி - நூ.

என்னும்பெரியநாகேந்த்ரனகளங்க - - - *
மன்னன்திருவாய்மலர்ந்தருளி-என்னைக் - - நுக.

கவிச்சக்ரவர்த்தியென்றான்காவலாநீயே - - *
புவிச்சக்ரவர்த்தியெனப்போற்றச்-செவிக்குநல்ல - நுஉ.

(வெகுமதிசெய்தமைகூறல்.)

முத்துக்கடுக்கனொடுமுன்கைதனக்கிணங்கும் - - *
ஹஸ்தகடகம்ரத்நஹாரமணிக்-கொத்துச் - - நுங.

சரப்பணிதம்பிப்பதக்கஞ்சாலுவைபொற்காந்தி - *
பரப்பியிடுபொற்சரிகைப்பாகை-தரித்தருளி - நுச

தாம்பரங்களீந்தான்தருப்போலவனெனக்கங் - *
காம்பரிசிலீயுமதற்குமுனே-மேம்படுபேர் - - நுரு.

ஈட்டுபுகழ்க்கல்லூர்வாழ்திப்பணவேளெந்தலைக்குச் - *
சூட்டவொருமுத்துத்தூராயீந்தான் - தாஷ்டிகோத் ௱௬:

தண்டனெனுங்கூளேந்த்ரன்தம்பியாஞ்சிந்தமனோர் *
கண்டசரமீந்தான்கழுத்துக்குக்-கொண்டலெனும் - ௱௭.

முத்துராயன்கொடுத்தான்முன்னணிசுமாக்கியணன் - *
பத்துவராகன்பெறவோர்பாகீந்தான்-சித்தசனும் ௱௮.

ரங்கப்பன்கைக்கொலுசுநல்கினன்மோதிரமென் - *
செங்கைவிரலுக்கணிந்தான்சிந்தமவேள்-தங்கவளை ௱௯.

ராசகோபாலையனல்கினன்சீர்கொள்முத்துப் - -*
போசனொருமுத்துவடம்பூட்டினன்-பேசுபுகழ்ச் - ௱௰

சாந்தபூபன்கொடுத்தான்சாலுவைநன்னகரத்நம் - *
ஈந்தான்கெடிநாகனென்கையில்-வாய்ந்தபுகழ் - ௱௰௧.

நல்லயனைச்சுநடைப்பரியீந்தானுலகம் - - *
சொல்லும்பணிக்காயன்சொக்கலிங்கம்-மல்லிகைப்பூத்

தையலங்கியொன்றெனக்குத்தந்தான்பெரியதம்பி - *
தூயவெள்ளிக்குண்டுசொக்காய்தந்தான் - பொய்யுளாயாக்

கூளக்கணக்கன்மணிகுண்டலந்தந்தானிரண்டு - - *
தோளிற்குறுக்களவாய்த்தூங்கவே-வேளைக் - ௱௰௪

குதவிடதம்பான்கொடுத்தானென்பதுபொன்பட்டுச் *
சதுரன்கைலாசதயாளு-புதுவயிரத் - - ௱௰௫.

தண்டோட்டிதந்தான்சவாதுப்பரணிதந்தான் - *
கொண்டசொக்கலிங்கன்கொடுத்தானோர்-மூண்டாசு ௱௰௬.

சட்டயிடுஞ்சொக்கலிங்கன்தந்தான்கணையாழி - *
கட்டழகன்பாசிபந்துகட்டினன்-பட்டை - ௱௰௭.

யணாருாண்தந்தான்பொன்னலாச்சட்டைதந்தான் *
வரிசையாம்ராமமகிபன்-முருகுமுத்து - - ௱௰௮.

சின்னனுதவினன்தீரன்வடகூளன் - - - *
பொன்னல்விருதுதண்டைபூட்டினன்-மின்னெறிக்குந்

தாயித்திராமனன்றுதந்தான்திருமலையன் - - *
நேயத்தாற்பொற்பூநிசாறுதந்தான் - தூயதுணைக் ௱௨௰.

காமனீந்தானற்கறவையைந்துகண்டையிட்ட - - *
சோமனீந்தானைக்குச்சேராடாகச் - சோமனெனும் ௱௨௧.

சோலைசிவப்புத்துப்பட்டிதந்தான்மாடன் - - - *
பானுக்குக்காராம்பசுத்தந்தான் - மால்குழந்தை - ௱௨௨.

வேலனெனக்கிரண்டுவெள்ளையெருதாய்மேகம் - *
போலக்கொடுத்தோட்டிப்போவென்றான் - சீலிபூ ௱௨௩.

பாலன்கொடுத்தானோர்பச்சைவடஞ்சோடங்கி - - *
நாலுமுடிப்புரொக்கநல்கினான் - சீலனெனும் - ௱௨௪.

நல்லமருதன்கொடுத்தானல்லகுதிரைமறி - - *
கல்விதெரிசிக்கணனென்கண்குளிரக் - கொல்லத்துப் ௱௨௫.

பச்சைக்கபாய்தந்தான்பாரியொத்தகாமியங்கே - *
மெச்சியெனக்கிரண்டுமேதிதந்தான் - உச்சிதமாக் ௱௨௬.

கூதனுக்குப்போர்வைதந்தான்கொண்டபூபன்னுலக *
நாதன்சகலாத்துநல்கினான் - மாதங்கக் - - ௱௨௭.

கட்டிகொடுத்தனனுகக்கவண்டன்குருவா - - *
ரொட்டிகொடுத்தானதற்குரொட்டிப்பு - தட்டிவிட்டு ௱௨௮.

நாழிமுத்தைமுத்தையவேணல்கவீரதப்பனொரு - *
தாழிவில்லைபோட்டான்சமுகத்தில் - வாழியென - ௱௨௯.

ரங்கையனீந்தானங்கோரத்நகண்டிராமையனுந் - *
துங்கன்கொடுத்தான்பொன்தொண்ணூறு - திங்கண்முக

வீரப்பெருமாள்விரனுக்குவச்சிரக்கல் - - *
சேருற்றபொன்மோதிரந்தந்தான் - கோர - ௱௩௧.

அனுமத்துவசாருங்கருடாலர் - - - *
கனவிருதுசிங்கடாற்காரர் - எனவாரூம் - - ௱௩௨.

எல்லாருஞ்செம்பொனிறைத்தாரையானனஞ்சூழ் - *
நல்லாசனஞ்பெரியநாகேந்த்ரன் - செல்வத் - - ௱௩௩.

துளாயெனக்கங்காட்டினான்சொர்ணாபிஷேகம் -
வளாயெனத்தந்தானேர்மதமா - தரளக் - - - ௱௫

கவிகைதந்தான்வெள்ளைக்கவரிதந்தான்செம்பொற்
சிவிகைதந்தான்காந்திசிறந்த - ரவிபோல் - ௱௫

இருட்டகற்றுதீவட்டியீந்தான்மதிபோற் - - -
சுருட்டிதந்தான்தந்தான்றுவசம் - பெருத்தசில ௱௫

ஊர்தந்தானும்பளிக்கையூர்தோறும்பண்ணைவைக்க
வர்தந்தான்வாழ்வுக்கிடந்தந்தான் - ஆர்தந்தார் - ௱௫

இந்தத்தியாகமிவனைப்போல்வாவியர - -
விந்தத்தியாகவந்தமெல்லியலே - இந்தவிதம் ௱௫

(விறலியைத்தூதுவிடுத்தமைகூறியது.)

என்செய்தியாதிதொடர்ந்தெல்லாமுனக்குரைத்தேன் -
பொன்செய்தவெம்மூர்க்குப்போயினிநீ - மின்செய்த ௱௫

சிற்றிடையாளாகியவென்தேவியாரைக்கண்டு -
நற்றிறஞ்சேர்வீணைநயம்பாடி - மற்றவளுக் - ௱௬

கென்குறையைமெள்ளவியம்பியெதிர்சொல்லுமந்தப் -
பொன்குறையுங்கேட்டேடல்போக்கியே - நன்குறுமென் ௱௬

ஆசைமனையாட்டிதனக்கையங்காரின்னுமொரு - -
வேசைமனைக்கேகுவரோவிட்டேனவா - லோசனையுட் ௱௬

கொள்ளாமலென்சபதங்கூறிமுன்னைக்குற்றநினைந் -
தெள்ளாமற்கற்பினியல்போதி - உள்ளாளப் - ௱௬

பண்பாடியுட்காமபாணம்படச்செய்து - -
நண்பாடியென்வரவைநன்கேற்றுக் - கண்பார்க்க ௱௬

ஓகையாய்முன்போலுறவாக்கச்செல்வாழி - -
தோகைவிறலிநீ - தூது. - - - - ௱௬

ஆக கண்ணி ௱௬௫.

விறலிவிடுதூதுமுற்றுப்பெற்றது.

☞ சென்னப்பட்டணம் - இ - விசாகப்பெருமாளையரதுகல்விவிளக்கவச்சுக்கூடத்தில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.